

# வாழையடி வாழையாக

Y.S. யாகு, சே.ச
S.V.L. மைக்கேல்



சின்ன சவேரியார்

(அருட்தந்தை. ஜேம்ஸ் டிரோஸி, சே.ச)

# வாழையடி வாழையாக

ST. IGNATIUS COLLEGE OF EDUCATION (AUTONOMOUS)
PALAYAMKOTTAI
PIN - 627002

ஆசிரியர்கள்

அருட்பணி. Y.S. யாகு சே.ச.

பேரா. S.V.L. மைக்கேல்

லெவே வெளியீடு

திரு இருதயங்களின் ஆலயம்

சருகணி - 630 411

சிவகங்கை மாவட்டம்.

நூல் தலைப்பு : வாழையடி வாழையாக

ஆசிரியர்கள் : அருட்பணி. Y.S. யாகு சே.ச.,
பேரா. S.V.L. மைக்கேல்

அட்டை வடிவாக்கம் : திரு. அமலசேசுராஜ்

மொழி : தமிழ்

முதற்பதிப்பு : மார்ச், 2007

தாள் : 21 Kg மேப்லித்தோ

அச்சு எழுத்து : 11 புள்ளி

அச்சாக்கம் : முத்துலட்சுமி பிரஸ்,
பாளையங்கோட்டை.

பக்கம் : 72

உரிமை : பங்குத் தந்தை
திரு இருதயங்களின் ஆலயம்
சருகணி - 630 411
சிவகங்கை மாவட்டம்

விலை : Rs.25/=

கிடைக்குமிடம்

பங்குத் தந்தை
திரு இருதயங்களின் ஆலயம்
சருகணி - 630 411.
சிவகங்கை மாவட்டம்

# அர்ப்பணம்



இவ்விரு அருளாளர் ஏற்றி
வைத்த விசுவாச தீபத்தை
இன்னும் ஏந்திக்
கொண்டிருக்கும்
சிவகங்கை மறைமாவட்ட
பொது நிலையினருக்கு....



# உள்ளே.....


I. சின்னசவேரியார் - ஜேம்ஸ் டிரோசி, சே.ச.,

1. தந்தையின் அருட்பணி
2. கிழமைப் புதுமைகள்
3. கடிதங்கள்

II. சின்ன அருளானந்தர் - மரிய லூயி லெவேல் சே.ச.,

1. பிறப்பும் - இளமையும்
2. பயிற்சியும் - ஆன்மீக வேள்வியும்
3. ஆண்டாவூரணியின் ஆன்மீக அக்கினி
4. முகவை மண்ணில் மனிதப் புனிதர்
5. சருகணியின் சாகாத சரித்திரம்
6. தந்தை லெவேயின் இறுதி நாட்கள்

III. பிற்சேர்க்கை

# ஆசியுரை

**மேதகு முனைவர் செ. சூசைமாணிக்கம்**
சிவகங்கை மறைமாவட்ட ஆயர்
தொலைபேசி : 04575 - 246666, 241744.
தொலைநகல் : 04575 - 242954.
மின் அஞ்சல் : svgbishop@sancharnet.in

ஆயர் இல்லம்
மேலூர் சாலை
சிவகங்கை -630 561
தமிழ்நாடு, தென் இந்தியா

## அருளாளர்களின் அடிச்சுவட்டில் அணிதிரள்வோம்



சிவகங்கைச் சீமையானது மதுரை இயேசு சபையினுடைய மிஷனின் வளமான விசுவாச பூமியாகும். இன்றைய சிவகங்கை மறைமாவட்டம் மதுரை மிஷனின் ஒரு பகுதியாக இருந்தபோது சருகணி அதன் செல்லப்பிள்ளையாகக் கருதப்பட்டு வந்தது. மறைமாவட்டத்தின் மையம் என்பதோடு குருக்கள் சந்திக்கும் சங்கம பூமியாகவும் அது திகழ்ந்தது.

சிவகங்கை மறைமாவட்டம் உருவான பின்பும் சருகணி தனித்தன்மை பெற்று விளங்குவதற்குக் காரணம் "சின்ன சவேரியார்" என நீண்ட காலமாகப் போற்றப்படுகிற அருள்தந்தை **ஜேம்ஸ் டிரோசி,** "சின்ன அருளானந்தர்" எனக் கருதப்படுகிற அருள்தந்தை லூயி லெவே ஆகிய இரு பெரும் அருளாளர்கள் தாம். சிவகங்கை மறைமாவட்டத்திற்குப் பெருமை சேர்க்கும் வகையில் விசுவாசம் வளர்த்த வித்தகர்களாக விளங்குவோர் புனித **அருளானந்தர்,** வணக்கத்திற்குரிய **அந்தோனி கிரிமினாலி,** வேத போதகர் **அகுஸ்தின் கப்பெல்லி,** அருள்தந்தை **ஜேம்ஸ் டிரோசி,** அருள்தந்தை **லூயி லெவே** ஆகிய இயேசு சபைக் குருக்கள்.

இவர்களில் ஜேம்ஸ் டிரோசி, லூயி லெவே ஆகியோர் சருகணியை மையப்படுத்தித் தங்களின் இறையாட்சிப் பணியை அமைத்துக்

கொண்டவர்கள். இவ்விரு அருளாளர்களுடைய வாழ்க்கைக் குறிப்புக்களை இணைத்து, வாழையடி வாழையாக என்னும் நூலை அருள்தந்தை யாகு, சே.ச. உருவாக்கியுள்ளார். இவர்களின் விசுவாச வழியில் நாமும் நடப்போம். இவர்களின் வழிநடத்துதலில் அன்பு, உண்மை, நீதி முதலிய நற்செய்தி மதிப்பீடுகளை வாழ்ந்து காட்டுவதன் மூலம் புதியதொரு சமுதாயம் படைப்போம்.

ஆசிரியரின் முயற்சியைப் பாராட்டுகிறேன். இதைப் படித்துப் பயன் அடைய வாசகர்களை வாழ்த்துகிறேன்.

அன்பிலும் இறை வேண்டலிலும்,

செ. சூசைமாணிக்கம்
சிவகங்கை ஆயர்

# அணிந்துரை

## JESUIT MADURAI PROVINCE


Tel : 0451-2431349
Fax : 0451-2433848
e-mail(O): mduprosj@vsnl.com
(P-Soli) : devadoss@eikmail.com
devadoss@jesuits.net

Provincial Office
St. Mary's
P.B.No.6
Dindigul - 624 001.
S. India.


## பெருமையுடன் வாழ்த்துகிறேன்



தமிழகத் திருச்சபையின் விசுவாச வாழ்வில் ஊடுருவி நின்றவர்கள் இயேசு சபையினர். அதன் நிறுவனர் புனித இஞ்ஞாசியாரின் தோழர், பாரதநாட்டின் பாதுகாவலர் புனித சவேரியார் தடம் பதித்த பெருமையுடையது நம் தமிழகம். குறிப்பாகத் தென் தமிழகம். கடந்த நான்கு நூற்றாண்டுகளில் பல்வேறு நாட்டினைச் சேர்ந்த சேசுசபையினரின் சேவைகளைப் பெற்று செழித்தோங்கியுள்ளது. இந்தத் தாய்த் திருநாட்டில், வேதாளையில் வீரமரணமெய்திய நற்செய்தி பூமியின் பிதாமகன் கிரிமினாலி, செம்மண்ணில் விளைந்த புனித அருளானந்தர், தத்துவப் போதகர் இராபர்ட் தே நொபிலி, தமிழ் மாமுனிவர் வீரமாமுனிவர், வேதபோதகர்' அகஸ்டின் கப்பெல்லி, 'சின்ன சவேரியார்' ஜேம்ஸ்டிரோசி, 'ஆன்மீகச்சூரியன்' திரிங்கால், முக்குலத்தோரின் முகவரி மொந்தோ, தியாகத்தீப்பந்தம் அதிரியான்கௌசானல், சருகணியின் புனிதம் தந்தை லூயிஸ்லெவே, பேராயர் லெயோனார்டு, அரசியல் சாணக்கியர் அறிவர் ஜெரோம் டி சூசா ஆகிய சேசுசபையினர் செய்த பணிகளை இன்னும் நாம் நெஞ்சம் நிறைய நினைத்துக்கொண்டிருக்கிறோம்.

அருள்தந்தை ஜேம்ஸ்டிரோசி மற்றும் அருள்தந்தை லூயிஸ்லெவே ஆகிய இயேசுசபையினர் சருகணியை மையப்படுத்தி தங்களின் இறைப்பணிகளை மிகச்சிறப்பாக செய்திருக்கின்றனர்.

அன்றிலிருந்து அருள்தந்தை ஜேம்ஸ்டிரோசி அவர்களை அப்பகுதி மக்கள் **சின்ன சவேரியார்** என்று மிகவும் பாசத்துடனும் பக்தியுடனும் அழைப்பதை எண்ணி மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அதுபோல் தந்தை லூயிஸ் லெவே அவர்களை, மிக நெருக்கமாகத் தன் சிறுவயதிலேயே அறிந்திருந்த அருள்தந்தை **யாகு சே.ச.,** அவர்கள் விசுவாசமும் நீதியும் கலந்த இறைப்பணியை, அவர் அருளானந்தரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஆற்றுவது கண்டு அவரைச் "**சின்ன அருளானந்தர்**" என்று அழைக்க ஆரம்பித்திருப்பது என் மனதுக்குப் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. இதன் முகத்தான் '**வாழையடி வாழையாக**' எனும் புதிய நூலினைப் படைத்துள்ள அவருக்கு என் வாழ்த்துகளும் பாராட்டுகளும் உரித்தாகும்.

இந்த இரு அருளாளர்களும் செய்த தன்னலமற்ற இறைச்செயல்பாடுகள், விசுவாச முயற்சிகள், மக்களை மையப்படுத்திய செயல்பாடுகள், இன்னும் இப்பகுதியில் மக்களை விசுவாச ஒளியில் வளர்த்து வருவது கண்டு பெரிதும் மகிழ்கிறேன்.

அவர்களின் வாரிசாக தமிழகம் முழுவதும் பணியாற்றும் எல்லா இயேசு சபையாளர்களின் சார்பாக, இம்முயற்சியினைப் பெரிதும் பாராட்டுகிறேன். விசுவாசம் வளர்த்த இப்பூமியில் இன்னும் மக்களின் வளமான வாழ்வு வேண்டி இறைஞ்சுவதோடு இம்முயற்சியை வாழ்த்தி மகிழ்கிறேன்.

தோழமையுடன்,

தேவதாஸ் சே.ச.

**அருள்தந்தை மு. தேவதாஸ், சே.ச.,**
மதுரை மாநில இயேசுசபைத் தலைவர்

# வாழ்த்துரை

அருட்பணி முனைவர் அந்தோனி பாப்புராஜ் சே.ச.,
அதிபர்,
தூய சவேரியார் கலைமனைகள்
பாளையங்கோட்டை.

## கலைமனைகள் களிகூர்கின்றன



இந்தியாவில் இயேசுவின் ஆன்மீக ஒளி பரப்ப ஆதவனாக வந்த பாரதப் புனிதர் புனித சவேரியாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றியே தமிழகத்தில் பல இறையடியார்கள் இறைப்பணி ஒளியைப் பரப்பி இருக்கிறார்கள். பாளையங்கோட்டையில் இயேசு சபை எழுப்பியுள்ள கலைமனைகள், புனித சவேரியாரின் திருப்பெயரையே மணி முடியாகச் சூட்டியுள்ளது.

சருகணியில் சவேரியாரால் ஆட்கொள்ளப்பட்ட இரு மாமனிதர்கள் துயில் கொண்டிருப்பது நம் தமிழ்மண் பெற்றிருக்கும் பெரும் பேறு. அருட்தந்தை ஜேம்ஸ் டிரோசி சே.ச., அவர்கள் மக்களால் 'சின்ன சவேரியார்' என்றழைக்கப்படுகிறார் என்றால், அருட்தந்தை மரிய லூயிஸ் லெவே, சே.ச., அவர்கள் 'சின்ன அருளானந்தர்' எனப் போற்றப்படுகிறார் - செம்மண் புனிதர் அருளானந்தரும் புனித சவேரியாரை மாதிரியாகக் கொண்டு அருட்பணி செய்தவர்தான் என்பதை நாமறிவோம்.

தந்தை லெவே அவர்கள் இக்கலைமனைகளின் கடைக்குட்டியான தூய சவேரியார் மேனிலைப் பள்ளியின் திரு இருதய விடுதி உதவிக் காப்பாளராக நான்காண்டுகள் பணிபுரிந்தவர். மாணவர்களே ஆசிரியர்களாகி இவருக்குத் தமிழைக் கற்றுத் தந்திருக்கிறார்கள்.

**'வாழையடி வாழையாக'** எனும் நூல் இவ்விரு மாமனிதர்களுக்கென எழுதப்பட்ட நூல். இந்நூலாசிரியர்கள் இக்கலைமனையினர். அருட்பணி Y.S. யாகு, சே.ச., தந்தை லெவேயிடம் நேரடியாக நெருக்கம் கொண்டிருந்தவர், தூய சவேரியார் மேல்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியர். திருமிகு SVL மைக்கேல் அவர்கள் சிறந்த பேச்சாளர்; எழுத்தாற்றல் மிக்கவர். ஒட்டு மொத்தமாக இப்படைப்பு கண்டு இக்கலைமனைகள் களிகூர்கின்றன.

'காற்றினால் கிழியும் இலைகளுக்கு எல்லாம்
காற்றிடம் கோபம் இல்லை'

என்ற கவிஞனின் சித்தாந்த வரிகளுக்கு ஏற்ப, எதிர்ப்புக் காற்றினால் கிழிபட்டாலும் என்றுமே குருத்துவிடும், நற்செய்திக் கனிதரும் வாழைக்கன்றுகள் தான் இவர்கள். இவர்களின் பெருமையையும், புகழையும் நாம் உணர்ந்து அவர்கள் வழி நடக்க உதவிய ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது இனிய நன்றிகள்.

வாழையடி வாழையை
நாளும் வாசித்து
நாமும் வளர்வோம்

அன்புடன்
**ஆ. அந்தோனிபாப்புராஜ், சே.ச.,**

# பாராட்டுரை

**PARISH PRIEST**
Sacred Heart Church,
Sarukanei - 623 405, Sivagangai Dist.

## இதயங்களின் இமயங்களே வாழ்க



சிவகங்கை மாவட்டத்திலே சருகணி என்ற ஊரை அறியாதோர் எவரும் உண்டோ? இல்லை. ஏன்?..... தமிழக வரலாற்றிலே,

"உலகிற்கெல்லாம் சென்று நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற்கு 16: 15) என்ற இயேசுவின் வார்த்தைக்கு வித்திட்ட, கண்டம் விட்டு கடல் கடந்து வந்த வெளிநாட்டுப் பாதிரியார்களின் விஞ்ஞானம் வித்திடப்பட்ட புண்ணியப் பூமிகள் இந்திய திருநாட்டிலேயிருக்க, இதில் எம் சருகணி மிகச்சிறப்படைகிறது.

மாரனி என்ற பெயரைத் தாங்கிய இந்தச் சின்னக்கிராமம் மருதுவுக்குச் செய்த உதவியின் நிமித்தம் சர்வ காணியாக, சருகணியாக சிறப்பு பெறுகிறது. சின்னசவேரியார் என்றழைக்கப்படும் அருட்தந்தை ஜேம்ஸ் டிரோஸி இங்குள்ள மக்கள் மத்தியில் நீங்கா நினைவாகத் திகழ்ந்து, இப்பெரும் புகழ் கொண்ட தேவாலயத்தை எழுப்பி மக்கள் நினைவுகளில் தவழ்கிறார்.

"கார்த்திகை மாச திருவிழாவுக்குக் கிளம்பிட்டியா?" என்று சுற்றுப்புறங்களும் அலை அலையாகத் திரண்டு, டிசம்பர் மாதம் 3-ம் தேதி சருகணி விழாக்கோலம் காண்பது அனைவரும் அறிவர்.

இவரின் வழிவந்தவராக "வெள்ளைக்காரச் சாமி" என்று மக்கள் மனதில் நெகிழ்வு கொண்டிருக்கும் சருகணியின் புனிதம் லெவே. விவசாயிகளின் துணையாளராக, மழையின்றி வறண்டு கிடக்கும் பகுதிகளுக்கு மழைக்கொடுக்கும் கொடையாளராக, இயேசுவின்

வழித்தோழனாக இன்றும் இறவாப் புகழுடன் மக்கள் மனங்களில் வாழும் தந்தை லெவேயின் நினைவாக சுற்றுப்புறமே மார்ச் - 21ல் சருகணியில் ஒரே குடும்பமாக, சமுதாயமாக கூடி விழா எடுத்து அறுசுவை அன்னதானத்தில் சங்கமிக்கும் என்பதும் அனைவரும் அறிந்ததே.

இத்தந்தையர்களின்;

மனிதம் புனிதம் பெற,
இறைமகிமை இவ்வுலகில்
நல்லாட்சி செய்திட -
மக்கள் மனங்கள் - இறைவனில்
துதிபாடிட - இவர்களின் நினைவு

இருக்கையில் அன்றும் இன்றும் என்றும் லெவேயின் சீடனாக, பாசமுள்ள மறையாளராக, இவரைப்பற்றியே எந்நேரமும் எண்ணி மகிழ்பவராக, இவரையே இறைவனுக்கடுத்து முதலும் முடிவுமாக கொண்டுள்ள அன்பு மறைப்பணியாளர் யாகுவை நினைத்துப் பெருமைப்படுகிறேன். இவர் எடுக்கின்ற அனைத்து முயற்சிகளையும் பாராட்டுகிறேன் - பல புத்தகங்கள் மத்தியில் இவர் வழியாக இறைமகிமையை உணரச் செய்தாலும் இன்று இவர் தொகுத்துள்ள வாழையடி வாழையாக - மக்கள் மனதில் ஒரு புதுமுகத் திருப்பம் ஏற்படத் துணையாகும். மேலும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட லெவே பதிப்பகம் சிறப்புடன் செயல்படவும், இதில் முதல் பதிப்பு பெறுவது இப்புத்தகம் என்பதும் பெருமைக்குரியதாகும். அருள்தந்தையின் இந்த சீரிய பணி மேன்மேலும் தொடரவும், அருட்தந்தை ஜேம்ஸ் டிரோஸி, அருட்தந்தை லெவே புனிதர்பட்டம் பெறவும் இடைவிடாது செபிப்போம். மனிதத்தில் புனிதம் காண்போம்.

இவண்
பங்கு அருட்பணியாளர்
**S. செபஸ்தியான்**

# என்னுரை

**அருட்பணி Y.S. யாகு, சே.ச.,**
தலைமையாசிரியர்,
தூய சவேரியார் மேல்நிலைப்பள்ளி
பாளையங்கோட்டை.

## என் நன்றி உணர்வினை உங்கள் நடு மனதில் நட்டு வைக்கிறேன்.



'சருகணி மாசி மாசத்திருவிழாவுக்குப் போகணும்' சருகணி சவுரியார் கல்லறையில் எது கேட்டாலும் கிடைக்கும்' 'சவுரியாருக்கு வாரத்துக்கு இருந்து நேர்த்திக்கடன் வச்சால் போதும்' போன்றவை சருகணியைச் சுற்றியுள்ள பகுதி வாழ் மக்களுக்குப் பழகிப்போன, வாழ்வில் ஊறிப்போன வார்த்தைகள். இவ்வார்த்தைகளால் பெரிதும் கவரப்பட்டு சருகணி சவேரியாரைத் தரிசிக்க நான் தவமாய் தவம் கிடந்த காலங்களை நினைத்துப் பார்க்கிறேன்.

அறுபதுகளின் இறுதியில் அதே சருகணிக்கு விடுதி மாணவராய்ச் சென்ற போது இவ்வார்த்தைகளுக்கு விளக்கம் பெற்றேன். இருந்தாலும் 'கோவா சவேரியாரா?' அல்லது 'சருகணி சவேரியாரா?' என்ற தீராத குழப்பம் எனக்குள் இருந்தே வந்தது.

அந்நாட்களில் எனக்கு வழிகாட்டியாக, தன் திருப்பலிகளுக்கு உதவி செய்யும் பீடச் சிறுவனாக மற்றும் நேர்முக உதவியாளனாக என்னை ஏற்றுக் கொண்டவருமான 'சருகணியின் புனிதம்' அருட்தந்தை லூயிஸ் லெவே , சே. ச., அவர்கள் சவேரியார் பற்றிய என் குழப்பத்தைத் தீர்த்து வைத்தார்கள்.

மாறணியை சருகணியாய் மாற்றி ஏழு கிழமைகளுக்கும் 371 புதுமைகளைத் தனித்தனியே ஏழு நூல்களில் வடித்து, ஆன்மீக வேள்வி நடத்திய அருட்தந்தை ஜேம்ஸ் டி ரோசி, சே.ச., அவர்கள் தான் சருகணி சவேரியார் 'சின்ன சவேரியார்' என்பதே நான் பெற்ற விளக்கம்.

இந்த இடைவெளியில், அருட்தந்தை லெவே அவர்களின் புனிதமான வாழ்வை நேரடியாகப் பார்த்து அனுபவித்ததினாலும்,

அவர்தம் சொந்த வாழ்விலும், பணி வாழ்விலும் ஓரியூர் செம்மண் புனிதர் அருளானந்தரே மையம் கொண்டிருந்தார் என்பதினாலும் அவரைச் 'சின்ன அருளானந்தர்' என அழைப்பது வெகுவும் பொருத்தமானதாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

இந்நூல் உருவாக்கத்திற்குத் திரைக்குப் பின்னிருந்து இயங்கியோர் பலர்.

★ முகப்பு அட்டை, பதிப்பக வடிவமைப்பு மற்றும் பல படங்கள் அமைத்து இந்நூலை அழகு பார்த்திருக்கும் எம்பள்ளி மூத்த ஓவிய ஆசிரியர் திருமிகு ஜே. அமல ஜேசுராஜ்.

★ இறுதி வடிவத்திற்குக் கொள்வன கொண்டும், விடுப்பன விடுத்தும் பேருதவி புரிந்த என் நண்பர் தாவரவியல் வல்லுநர் முனைவர் திரு. ஜான் டி பிரிட்டோ.

★ எம்பள்ளித் தமிழாசிரியர் ச. சூசை அமல்ராஜ் மற்றும் இடைநிலை ஆசிரியர் சே. ஆரோக்கியசாமி.

★ தரவுகள் தந்துதவிய அருட்பணி சேவியர் மாம்ப்ரா சே.ச., மற்றும் எட்வர்ட் ஜெகநாதன் சே.ச., மற்றும் புலவர் வெட்டிவயல் வளவன்.

★ எம் பள்ளி கணினி ஆசிரியர் திரு. டி. ராஜ்குமார்

இவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றி மலர்களை மாலையாகத் தொடுக்கிறேன்.

**"இறைவன் அதிமிக மகிமைக்காக, இன்னும் அதிகமாக"** என்னும் உயரிய உணர்வுகளோடு மக்களிடையே கரைந்திட்ட இந்த மாமனிதர்கள் வாழையடி வாழையாக இன்றும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

'இறைவா, என்னால் செய்ய முடியாத செயலை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தைத் தா;

செய்ய முடியும் செயல்களைச் செய்ய தைரியம் தா;

இவ்விரண்டையும் பிரித்துப் பார்க்கின்ற ஞானத்தைத் தா'

\- என்ற மூதுரையின் படி

தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்களாக வாழ்ந்திட்ட இவ்விரட்டையர் தம் வாழ்வு நம்மில் திடமான விசுவாசத்தையும், தொலைநோக்குப் பார்வையையும், மனித நேயத்தையும் வளர்ப்பதாக.

என்றென்றும் தோழமையுடன்
**Y.S. யாகு, சே.ச.,**

# I. சிலுவை சகோதரிகள்

## 1. [illegible]

### இத்தாலியிலிருந்து இந்தியா நோக்கி.....

[illegible] 1710 [illegible] இராமநாதபுரம், சிவகங்கை, அறந்தாங்கி பகுதியில் அருட்பணியாற்றினார்.

### துன்பங்களும்..... துயரங்களும்.....

இக்காலங்களில் அவர் அனுபவித்த துன்பங்கள், துயரங்கள் எண்ணிலடங்கா. அக்காலத்தில் இராமநாதபுரத்தை ஆண்ட கட்டத்தேவர் ஆட்சிப்பொறுப்பில் இருந்த மகாராணிக்குத் தெரியாமல் அரசன் தன் மந்திரிகளுடன் சேர்ந்து அருட்தந்தைக்கு நிறையத் தொல்லைகள் கொடுத்து வந்தான். அடி, உதைகள், ஏளனங்கள் ஏராளம், ஏராளம். அத்தனையையும் பொறுமையோடு தாங்கிக் கொண்ட அருட்தந்தை, இறுதியாக [illegible] கட்டத்தப்பட்டார். ஆனால், அத்தனைத் துன்பங்களையும் தாங்கியவராய், பொறுமையுடன் [illegible] சென்று அங்கும் தன் ஆன்மீகப் பணியை ஆற்றினார் அருட்தந்தை.

இச்சமயத்தில், கட்டத்தேவர் அருள்தந்தைக்கு இழைத்த கொடுமைகளைக் கேள்விப்பட்ட இராமநாதபுர ராணி தந்தையை அழைத்து, அவருக்குச் செய்யப்பட்ட அனைத்துச் செயல்களுக்கும் மனம் வருந்தி மன்னிப்புக் கேட்டாள். அதோடு மட்டுமல்லாமல், தந்தையை இராமநாதபுரத்திற்கு அழைத்து அவருக்கு பொன்னாடை வழங்கி கௌரவித்து, தன் பணிகளைத் தொடர்ந்து செய்ய எல்லா உதவிகளையும் தந்தைக்குச் செய்து கொடுத்தாள். கட்டத்தேவரால் பறிமுதல் செய்யப்பட்ட கிறிஸ்தவ மக்களின் சொத்துக்களைத் திரும்பத் தரவும், சேதமடைந்த தந்தையின் பொருள்களைச் சரி செய்யவும் உத்தரவிட்டாள்.

## சில காலம் பூமியே சருகணி:

தற்போதைய சருகணிக்கு மேற்கே செல்லும் மணிமுத்தாறு அன்று ரோகிணி ஆறு என்றழைக்கப்பட்டது. அப்பகுதியில்தான் யாதவர்கள் பெரும்பான்மையாய் குடியிருந்த மாறன் எனும் ஊர் இருந்தது. இந்த மாறனியே இடையர் சருகணி என இடைக்காலத்தில் வழக்கிலிருந்தது. இன்றைய கோட்டைமாநகரத்தின் பூர்வீகமாக அது இருந்தது. வெள்ளைமருது நாள் கைப்பற்றப்பட்டதால் சருகணியாய் 1784ல் கொடுத்த சருகணி புதிதான இன்று சருகணியாய் மருவி நிற்கிறது.

## அருட்தந்தையின் ஆன்மீகத் தாகம்......

* ஆன்மீகப் பணியை அழுத்தமாகச் செய்ய பல ஆலயங்களை எழுப்பினார். சிவகங்கையை அடுத்துள்ள பனையூரைச் சேர்ந்த காளசாமி எனும் பெயரோடு முஸ்லீமாக மாறிய மருதநாயகம் போற்றுக்கிய பெண்ணை மணந்து மாசா எனும் பெயரில் கிறிஸ்துவத்தில் தன்னை இணைத்துக்கொண்டார். 500 பிரெஞ்சுப் படைத் தலைவராகவும் விளங்கினார். கிறிஸ்தவர்கள் தாங்கள் வழிபட கோவில் கேட்டபோது காளசாமி சருகணி தந்தை டிரோசியின் உதவியை நாடினார். அவரின் ஆலோசனைகளின்படி மதுரை டவுன் ஹாலில் உள்ள செபமாலை அன்னை ஆலயம் (ரோசரி சர்ச்) வீரர்கள் வழிபட 1756ல் கட்டப்பட்டது.
* ஒரியூரில் உள்ள ஆரோக்கிய அன்னை ஆலய முகப்பு 1734ல் தந்தை டிரோசியால் கட்டப்பட்டது. இந்தக் குறிப்பு 1735ஆம் ஆண்டிற்கான சேசு சபை ஆண்டு மலரில் காணக்கிடக்கிறது. தமிழகத்தின் இன்னாசியார் என்றழைக்கப்பட்ட சீ சே.ச., இந்தக் கோவில் முகப்பு எட்டு மூலைத் திக்குள்ளது என்கிறார்.
* நம் தந்தை டிரோசி அவர்கள் தனது நண்பரான சிவகங்கை மன்னர் உதவியுடன் 1751ல் ஆரம்பித்து 1773ல் முடிக்கப்பட்டது தான் சருகணியில் உள்ள இரு இருதயங்களின் (இயேசுவின் திருஇருதயம், மரியாவின் மாசற்ற இருதயம்) ஆலயம். தமிழகத்தில் உள்ள ஆலயங்களில் இது ஒன்றுதான் இரு இதயங்களின் ஆலயமாக இன்றும் சான்று பகர்கின்றது. இந்த ஆலயம் 1773ல் கொச்சின் ஆயரால் அர்ச்சிக்கப்பட்டது (பின்பக்க அட்டைப்படம்).
* கொக்கூரணி புனித செபஸ்தியார் ஆலயம் எழுப்ப கர்னல் மார்டின் என்பவர் தந்தை டிரோசியின் உதவியை நாடினார். சருகணி ஆலய முகப்பில் வேலை செய்த மேஸ்திரியையே கொக்கூரணிக்கும் அனுப்பி வைத்தார். எனவே கொக்கூரணி செபஸ்தியார் ஆலயம், சருகணி திரு இருதயங்களின் ஆலயம், ஒரியூர் ஆரோக்கிய அன்னை ஆலயம் ஆகிய மூன்றின் முகப்பும் ஒரே மாதிரியாக இருப்பது இந்த வரலாற்று உண்மையைப் புலப்படுத்துகிறது.

★ தந்தை டிரோசி அவர்கள் சிவகங்கை, பெரியகோட்டை வழியாக இடைக்காட்டூர் வந்து சில நாட்கள் தங்கி பணியாற்றி பலருக்குத் திருமுழுக்கு அளித்துள்ளார். இது தந்தையின் ஆன்மீகபணியின் சான்றாக இன்றும் விளங்குகிறது.

★ நம் தந்தை டிரோசி அவர்கள் மறைப்பணி செய்வதற்காக குதிரையில் பல்வேறு இடங்களுக்கு சென்றதாக நாம்அறிகிறோம். அதற்குச் சான்றாக நாம் காண்பது தான் முன் அட்டையிலுள்ள படம்.

இடையர் சருகணிக்கு அருகில் உள்ள மாறணிக்கு வந்த தந்தை, வியாகுல அன்னை ஆலயத்தை எழுப்பித் தன் பணிகளை ஆற்றி வந்தார். பிற மதத்தினர் அங்கேயும் தந்தைக்குப் பல தொல்லைகள் தந்ததால், சிவகங்கை மன்னர் சசிவர்ணத் தேவரிடம் அனுமதி பெற்றுச் சருகணிக்குச் சென்று தன் பணிகளைத் தொடர்ந்தார் தந்தை.

சருகணியில் 33 ஆண்டுகள் பணியாற்றி சருகணி பூமியைச் செம்மைப்படுத்தி, காடு மேடாய் இருந்த இடத்தை மக்கள் மகிழ்வுடன் வாழும் ஊராய் மாற்றினார். எதிரிகளும் ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு அன்னை மரியின் ஆசீராலும், புனித சவேரியாரின் புனிதத் தீர்த்தத்தாலும், புனித அருளானந்தரின் மகிமையாலும் எண்ணற்ற புதுமைகளைச் செய்தார் அருட்தந்தை.

## வீரமாமுனிவரின் சம காலத்தவர் சின்ன சவேரியார்:

இயேசு சபை தடை செய்யப்படுவதற்கு முன் இந்தியா வந்து உழைத்தவர் அருள்தந்தை ஜேம்ஸ் டி ரோசி. இவர் மனதில் எரிந்திட்ட ஆன்மீகத்தீயின் அடர்த்தி புனித சவேரியாரின் மனதில் எரிந்திட்ட ஆன்மீக நெருப்பின் நீள அகலங்களை விட அதிகம். இவரின் சம காலத்தில் தமிழகத்தின் வடபகுதியில் பணியாற்றியவர் தமிழ் மாமுனிவர் வீரமாமுனிவர். தமிழ் மொழியின் காவலராக விளங்கிய வீரமாமுனிவரின் தமிழ்ப் பணியைப் போன்று சின்ன சவேரியார் ஜேம்ஸ் டிரோசி அவர்களின் தமிழ்ப் பணியும் வியந்து பாராட்டக்கூடியது.

## தமிழ் மொழி மேல் கொண்ட பற்று:

தந்தை ஆன்மீகப் பணியோடு நின்றுவிடவில்லை. நம் தமிழ் மொழி மேல் பற்று கொண்டு அதை ஆர்வமுடன் கற்றுத் தேர்ந்து, பல நூல்களை எழுதி ஆவணப்படுத்தியிருக்கிறார். புண்ணிய முயற்சி, ஏழு நூல்கள், வருடத்தியானம் மூன்று பிரிவுகள் போன்ற ஆவணங்களோடு **கிழமைப் புதுமைகள்** என்ற ஏழு நாட்களும் நாம் தியானிக்க வேண்டிய ஆன்மீகப் பயிற்சியை வழங்கினார். தந்தையின் இத்தகைய தணியாத ஆன்மீகப் பணிக்கு மொழி ஒரு தடையாக நிற்கவில்லை. இது மட்டுமல்லாது மறவ நாட்டின் பல ஊர்களின் வரலாறுகளை

ஓலைச் சுவடியில் எழுத்தாணி கொண்டு எழுதி ஆவணப்படுத்தியிருப்பது தந்தையின் பணிக்கு ஒரு சான்றாகும். இன்றும் அந்த ஆவணங்கள் சருகணியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கின்றன.

## அதிசயங்கள் ........ புதுமைகள்.........

இக்காலங்களில் தந்தையைச் சந்தித்து ஆசி பெறுவதற்குப் பல ஊர்களிலிருந்து மக்கள் வருவார்களாம். சிவகங்கை மன்னர் சசிவர்ணத் தேவர் கூட தந்தையின் இறை வல்லமையைச் சோதிக்க நினைத்து, சில பாத்திரங்களில் தண்ணீர் நிரப்பித் தந்தையிடம் அனுப்பி மந்திரித்து வாங்கி வரும்படி சிலரை அனுப்பியிருக்கிறார். தந்தையால் மந்திரிக்கப்பட்ட தண்ணீர் ஒரு வாரம் கழித்து அரசனிடம் சென்றடைந்த போதும் நறுமணவாசனையுடன் இருந்ததைக் கண்டு மன்னர் வியந்து போனாராம். இதனால் மன்னருக்குத் தந்தையின் மீது மதிப்பும் மரியாதையும் கூடியது. தந்தையும் மன்னரோடும் சிற்றரசர்களோடும் நெருங்கியத் தொடர்பு வைத்திருந்தார்.

## அஞ்சா நெஞ்சர் டிரோசி.....

ஒரு சமயத்தில் மருது பாண்டிய சகோதரர்களில் ஒருவரான சின்ன மருதுவை ஆங்கிலப் படை பிடிக்க வந்தபோது சின்ன மருது எதிரிகளிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ள சருகணியில் வாழ்ந்த நம் தந்தையை அணுகி உதவி கேட்டார். நம் தந்தை மருதுவைத் தன் இருப்பிடத்துக்குக் கீழே மறைத்து வைத்துவிட்டு ஆங்கிலப்படையினரிடம் உண்மையைக் கூறினார். பாதிரியார் கேலி செய்கிறார் என ஆங்கிலப்படையினர் போய்விட்டனர். நம் தந்தை பெட்டியை திறக்கவும் மருது மகிழ்ச்சியுடன் வெளியே வந்தார். அஞ்சா நெஞ்சத்துடன் மன்னருக்கு அடைக்கலம் தந்து அவரை, எதிரிகளிடமிருந்து காப்பாற்றியிருக்கிறார் அருட்தந்தை. இதைக் கண்டு மனம் நெகிழ்ந்த மருது தன் நன்றியைத் தெரிவிக்க மாறணி என்ற கிராமத்தை சர்வகாணியாக கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்தார். அத்துடன் இயேசுவின் வரலாற்றை பாஸ்காவாக நடத்துவதற்குத் தேவையான பொருளுதவியுடன், லட்சம் ரூபாயில் ஒரு தேரை வடிவமைத்து, கிறிஸ்து அரசரைப் பவனியாக எடுத்துவர தானமாகத் தந்தான். கோவில் பணிகளுக்காக அரசு மானியத்தையும் வழங்கினார் அரசர்.

## சின்ன சவேரியார் ஜேம்ஸ் டிரோசி...

இத்தனைத் பணிகளையும் சிறப்பாகச் செய்த அருட்தந்தை ஜேம்ஸ் டிரோசி, சரித்திரப் புகழ் பெற்ற சருகணி பேராலயத்தைச் சீரும் சிறப்புமாகக் கட்டி முடித்தார். தன் எளிமையாலும், கடின உழைப்பாலும், மக்கள் மீது கொண்ட அன்பாலும், இறை யேசுவின் மேல் கொண்ட ஆழ்ந்த நம்பிக்கையாலும் மக்களுக்காகப் பல பணிகளைச் செய்த அருட்தந்தை தான் இறக்கும் தேதி, நேரம்

இவற்றை முன்கூட்டியே அறிந்த வல்லமை உள்ள தந்தை அவர்கள் 1774 ஆம் ஆண்டு அக்டோபர் 12ம் நாள் இறைவனின் இல்லம் சேர்ந்தார்.

தந்தையின் மறைவுச் செய்தி அறிந்த மருதுபாண்டியர்கள் அருட்தந்தையின் அடக்கத்திற்காக வண்டிகளில் சந்தனக்கட்டைகளையும், நெய்க்குடங்களையும் எடுத்து வந்தனர். ஆனால் அப்போது அங்கிருந்த அருட்தந்தை ஜோசப் பெர்னார்டு அவற்றைத் தாழ்மையோடு வாங்க மறுத்து, தந்தையின் உடலை மலர்கள் தூவி, மலர்ப்படுக்கையில் அடக்கம் செய்தார்.

தந்தையின் கல்லறை சருகணியில் ரோகிணி நதிக்கரையில், சிங்கார மணி மண்டபத்தில் ஆன்மீகப் பணிகளுக்குச் சான்று பகர்ந்து கொண்டிருக்கிறது. இறந்து 240 ஆண்டுகள் ஆகியும் இன்னும் சிவகங்கைச் சீமையின் மக்கள் மத்தியில் நீங்காத இடம் பிடித்த தந்தையாக 'சின்ன சவேரியார்' என்ற பெயருடன் மக்கள் மனங்களில் வாழ்ந்து வருகின்றார்.

"சின்ன சவேரியார்" என்று அழைக்கப்படும் ஜேம்ஸ் டி ரோசியிடம் விளங்கிய ஆன்மீகத் தாகம், எளிமை, கடின உழைப்பு, இறைபக்தி, ஏழைகள் மேல் கொண்ட இரக்கம் தூய்மை, துணிவு போன்ற பண்புகள் தான் "சின்ன அருளானந்தராக" அருட்தந்தை லூயிஸ் லெவேயை மாற்றியது என்று வரலாறு சொல்கின்றது.



**சின்ன சவேரியார் கல்லறை**

# 2. கிழமைப் புதுமைகள்

## சின்ன சவேரியார்: ஏன்?

ஒவ்வொரு நாளும் இறையருளை எண்ணி தியானிக்க வேண்டும் என்ற மதிப்பீடுகளை மக்களுக்குத் தர விரும்பினார். எனவே வருடம் முழுவதும் தியானிக்க உதவியாக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சிந்தனைகளைத் தரவேண்டி ஏழுநாட்களுக்கும் தனித்தனி புதுமைகளை எழுதியிருக்கிறார். வருடத்தில் 52 ஞாயிற்றுக்கிழமை இருப்பதால் 52 ஞாயிற்றுகிழமை புதுமைகளும் அதைப்போன்று எல்லா நாட்களுக்கும் 52 புதுமைகளைத் தந்திருப்பது ஆன்மீகப் பணியில் அவருக்கிருந்த ஈடுபாட்டினை நமக்குத் தெளிவுபடுத்தும்.

ஞாயிற்றுக்கிழமைகளில் உலகப் படைப்பு, திங்கட்கிழமைகளில் உத்தரிக்கஸ்தல ஆத்துமாக்கள், செவ்வாய்கிழமைகளில் வானதூதர்கள், புதன்கிழமைகளில் சூசையப்பர், வியாழக்கிழமைகளில் திவ்யநற்கருணை மற்றும் திருப்பலி, வெள்ளிக்கிழமைகளில் இயேசுவின் பாடுகள், சனிக்கிழமைகளில் கன்னிமரியாள் என புதுமைகளை முறைப்படுத்தி ஏழு நூற்களாக் எழுதியுள்ளார்.

இந்த ஏழு புத்தகங்களிலுள்ள முன்னூற்றி அறுபத்து ஐந்து புதுமைகளையும் இங்கே குறிப்பிடுவது இயலாத காரியம். எனவே ஒவ்வொரு கிழமைக்கும் உரிய முன்னுரையை இங்கே தூய தமிழில் தர முயற்சித்திருக்கிறேன். புதுச்சேரி மிஷன் அச்சகத்தின் பதிப்பாகிய இந்நூல்களை வாசகர்கள் படித்து பயனடையலாம்.




சின்ன சவேரியார் குருசடி

# 1. ஞாயிற்றுக்கிழமை புதுமை

பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் உலகத் தோற்றம் பற்றிய செய்திகளெல்லாம் உண்மைதானே தவிர அவை சந்தேகத்திற்குரியனவாக இல்லை. உலக உயிரினங்கள் தோற்றம் பற்றிய செய்திகளை நம்புவதற்குச் சில சமயங்கள் எதிர்ப்புகள் வரும். அவையெல்லாம் தப்பறைக் கொள்கை உடைய மனிதர்களின் சிந்தனைகளாக இருக்கும். ஆனால் நற்செய்தியில் கூறப்பட்டிருக்கும் அனைத்தும் உண்மை தான். எனவே அவற்றை நாள்தோறும் படித்து அதனால் கிடைக்கும் ஞானபலன்களைப் பெறுவது அனைவரின் கடமையாகும்.


ஞாயிற்றுக்கிழமைகளில் கூறப்பட்டிருக்கும் புதுமைகள் எல்லாம் ஞாயிற்றுக்கிழமைகளில் நடந்திருக்கவில்லை. ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாளாக இருப்பதாலும், இத்தகு வேத சத்திய வார்த்தைகளையும் அத்தகு புதுமைகளையும் வாசித்துத் தியானிப்பதற்கு ஞாயிற்றுக்கிழமை ஏற்ற நாளாகயிருப்பதால் இவை ஞாயிற்றுக்கிழமை புதுமையாக எடுக்கப்பட்டிருக்கிறது.

இதை வாசிக்கும் போது கிடைக்கும் நன்மைகளுக்கு அளவில்லை. இவ்வுலகில் மனிதன் இறைவனை நேரடியாகப் பார்க்கவியலாதெனினும், நற்செய்தியிலே அவரைப் பற்றி சொல்லியிருப்பதைக் கொண்டும், அவர் செய்த புதுமைகளைப் பற்றி அறிந்த பின்பும், அவரின் வல்லமையை அதிகமாக அறிய முடியும். அந்தப் புதுமைகளை வாசிக்கும்போது அவருடைய வல்லமை, ஞானம், நீதியான செயல்பாடுகள், அவரின் தெய்வீகக் குணங்கள் ஆகியவை வெளிப்படுகின்றன. இதன் மூலம் உலகம் மீதும், மனிதர் மீதும் அவருக்கிருக்கும் அக்கறையும், பாசமும் விளங்குகிறது. நம் முன்னோர்களைக் கவனமுடன் வழிநடத்தி அந்தப் பாசமிகு நேச நிகழ்வுகளைக் கண்டு அவர்மேல் பிரியம் அதிகமாகிறது என்பதை உணர வேண்டும்.



# 2. திங்கட்கிழமை புதுமை

இறைவன் ஏழைகளுக்கு உதவுவதற்காகவே நிறைய பேர்களை பணக்காரர்களாக இருக்க ஆசி வழங்கியிருக்கிறார். அதுபோல உத்தரிக்கும் ஸ்தலத்திலிருக்கும் ஆத்துமாக்களுக்கு அவர்கள் செய்த பாவங்களை உலகில் வாழும் மக்களின் செபங்கள் மூலமாகவே தீர்ப்பதற்கு ஆசையாயிருக்கிறார். பணக்காரர்கள் ஏழைகளுக்கு உதவாவிட்டால் அவர்கள் ஏழைகளாக துன்பப்படுவார்கள். அதுபோலவே உலகில் வாழும் மக்களின் செபங்களும், பிரார்த்தனைகளும் இல்லாவிட்டால் உத்தரிக்கும் ஆத்துமாக்கள் தங்களின் பாவங்களுக்காகத் துன்பப்பட்டுக் கொண்டிருப்பார்கள். பணக்காரர்களில் சிலர் ஏழைகளின் மேல் இரக்கம் கொண்டு உதவும் நிலையில் இல்லாதிருப்பது போல, பலர் உத்தரிக்கும் ஸ்தலத்தில் இருப்பவரைக் கண்டு கவலைப்படாமல் இருக்கிறார்கள். அவர்களின் மேல் நமக்கு இரக்கமும் ஈர்ப்பும் ஏற்பட வேண்டும். திங்கட்கிழமை உத்தரிக்கிற ஸ்தலத்திலிருக்கும் ஆத்துமாக்களுக்கு உகந்ததாகயிருக்கிறபடியால் உத்தரிக்கிற ஸ்தல ஆத்துமாக்கள் மூலம் நிகழ்ந்த புதுமைகளில் ஐம்பத்திரெண்டு புதுமைகளைத் திங்கட்கிழமை புதுமைகளில் தியானிக்கலாம். இத்தகுப் புதுமைகளைக் கேட்கிற போது உத்தரிக்கிற ஸ்தல ஆத்துமாக்களின் மேல் இரக்கம் உண்டாவதோடு அவர்கள் படுகிற வேதனைகளை அறிந்து இந்நிலைகளுக்குப் பயந்து பாவத்தை விட்டுப் புண்ணியம் தேடும் வாழ்க்கை முறைகளை நாம் ஏற்பதற்கு நம் மனம் இசையும் என்று உறுதியாக நம்புகிறேன்.




# 3. செவ்வாய்க்கிழமை புதுமை

இறைவன் நட்சத்திரங்களுக்கு இயற்கையிலே அதிக ஒளியை அளித்திருக்கிறார். நட்சத்திரங்களைக் காணும்போது ஏற்படும் சந்தோசமும் மகிழ்ச்சியும் எண்ணிக்கையிலடங்காதவை. இவைமூலம் இறைவன் மனிதனுக்குச் செய்யும் உதவிகளும் அதிகம். ஆனால் சிலர் நட்சத்திரங்களைப் பார்த்தாலும் அதன் அமைப்பையும் அழகையும் அவை அளிக்கும் ஒளி வெள்ளத்தையும் கண்டு மகிழாதிருக்கின்றனர். அதுபோல இறைவனால் படைக்கப்பட்ட தேவதூதர்களின் பெருமைகளைக் கண்டு ஆச்சரியப்படுவதோடில்லாமல் தேவதூதர்கள் மீது மிகவும் அன்பாயிருப்பார்கள். புனித தாமஸ் சொன்னபடி உலகில் வாழும் மனிதர்களைவிட தேவதூதர்கள் எண்ணிக்கையில் அதிகமாயிருப்பார்கள். ‘வானில் தோன்றும் நட்சத்திரங்களை விட கடற்கரையிலிருக்கும் மணல்களைவிட, அனைத்து மரங்களின் இலைகளை விட தேவதூதர்களின் எண்ணிக்கை அதிகம்’ என்று சுவாரெஸ் என்பவர் தன் நூலில் எழுதியிருக்கிறார்.

அவர்களின் வல்லமையைப் பார்க்க ஒரே ஒரு தேவதூதனின் பெருமைகளைச் சொன்னாலே போதும். முற்காலத்தில் பாளையத்திலிருந்த 1,85,000 சேவகர்களை ஒரே ஒரு தேவதூதர் ஒரு இரவுக்குள் கொன்று போட்டார். தேவதூதர்கள் மீது இறைவனுக்கு இருக்கும் நம்பிக்கை அளவிட முடியாது. அவர்களும் மனிதர்கள் மீது மிகவும் அன்பாய் இருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, அவர்களுக்குப் பலவகைகளில் உதவியும் செய்பவர்களாகயிருக்கிறார்கள். இருப்பினும் இன்னும் பலர் தேவதூதர்கள் மீது நம்பிக்கையில்லாமலும் அவர்கள் வழங்கும் உதவிகளை அறியாமலும், பக்தியில்லாமலும் இருப்பது மிகவும் பாவமான செயலாகும்.

இப்படிப்பட்ட துன்பங்கள் உங்களுக்கு நிகழாமல் இருப்பதற்கு தேவதூதர்கள் வழியாக நிகழ்ந்த புதுமைகளைச் செவ்வாய்க்கிழமைகளில் வெளிப்படுத்த எண்ணியுள்ளோம்.



# 4. புதன்கிழமை புதுமை

இறைவனின் சித்தத்தை உடைய புனித சூசையப்பரைச் சிறந்த புனிதராக்கி அவருக்கு எண்ணிக்கையற்ற வரங்களை அளித்திருந்தாலும், அவரிடத்தில் ஏராளமான ஞான வரங்கள் இருப்பினும் அவரைப்பற்றி அறியாத ஒருசிலர் அவரும் மற்ற புனிதர்கள் போலத்தான் என்று மிகச் சாதாரணமாக எண்ணுகின்றனர். தன்னை நம்பி வருபவர்களுக்கு அவர் அளிக்கும் நன்மைகளை அறிந்தவர்களாயில்லை. ஆனால் அவரை நம்பி அவர் வழியாக வேண்டினால் நிறைய நன்மைகள் கிடைக்கும் என்பதே உண்மை.

எனவே இறைமக்களே! அப்படியொரு சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிற புனித சூசையப்பர் செய்த பல அதிசயங்களில் ஒரு சிலவற்றை நீங்கள் கண்டிப்பாகக் கேட்க வேண்டும். புதன்கிழமை புனித சூசையப்பருக்கு உகந்த நாளாக இருப்பதால் அவரைப்பற்றிய மறைபுண்மைகளை வெளிப்படுத்துவோம். வருடத்திற்கு ஐம்பத்திரெண்டு புதன்கிழமை இருக்கிறபடியால் ஐம்பத்திரெண்டு புதுமைகளை வெளிப்படுத்துவோம்.

இதன் மூலம் அவரின் புனித குணங்களையும் அவரை நம்புவர்களுக்கு ஏற்படும் உதவிகளையும் அவரைக் குறித்துச் செய்யவேண்டிய நல்ல செயல்களையும் வெளிப்படுத்துவோம். இவற்றைக் கவனமுடன் நீங்கள் கேட்கும் போது அவர் மேல் பக்தி ஏற்படுவதையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் உணர முடியும். இவர் பற்றிய புனித நிகழ்வுகளைச் சொல்வதற்கு நான் தகுதியில்லாதவன் என்றாலும் புனித சூசையப்பரின் மனைவியான புனித தேவ அன்னையின் அருளினால் முடியும் என்று உறுதியாக நம்பி அத்தகு அருளை இறைவன் எனக்குத் தர வேண்டுகிறேன்.




# 5. வியாழக்கிழமை புதுமை

இறைவனாக இருந்து கொண்டு மனிதனாகவும் உருவெடுத்து வாழ்ந்த இறைஇயேசு திவ்யநற்கருணையை உருவாக்கித், திருப்பலியை நிறைவேற்றி அவற்றை நாமும் செய்யப்பணிக்கிற அந்த நிறை நெஞ்சம் நன்மைகளின் மொத்த வடிவம் என்பதே உண்மை.

திருப்பலியில் பங்கு பெறுவதன் மூலமும் தேவ நற்கருணையை ஆராதிப்பதன் மூலமும் கிடைக்கிற நன்மைகளைக் கணக்கிட முடியாது. ஆனால் ஒரு சில கிறிஸ்தவர்கள் தேவநற்கருணை மீதும் திருப்பலியின் மீதும் பக்தியில்லாமல் இருக்கிறார்கள். பலர் இயேசுவின் உடலை உண்ணாமலும், பூசையில் பங்கு பெறாமலும் இருக்கிறார்கள். திவ்ய நற்கருணை, திருப்பலி இவற்றின் மீது பக்தியின் அடிப்படையிலேதான் நன்மைகளை அடைகிறார்கள். இவற்றின் மீது பக்தியில்லாமலிருப்பவர்களுக்கு எந்தவித நன்மையும் கிடைத்துவிடுவதில்லை. உணவு உட்கொள்ளாதவர்கள் பலவீனமாக அடிக்கடி கீழே விழுவது போல திருப்பலி மற்றும் திவ்விய நற்கருணை மீது பக்தியில்லாதவர்கள் அடிக்கடி பாவத்தில் விழுந்து உழல்கிறார்கள். இது மட்டுமல்லாது பசாசு நம்மிடத்தில் இவை பற்றிய சந்தேகங்களை அதிகமாக உருவாக்கும். இப்படிப்பட்ட துன்பங்களில் நாம் உழலாமல் இருப்பதற்குத் திவ்ய நற்கருணை மீதும் திருப்பலி மீதும் பக்தியை உருவாக்குவோம்.

இயேசுநாதர் பாடுகளை அனுபவிப்பதற்கு முன் வியாழக்கிழமை தான் திவ்வியநற்கருணையை உண்டாக்கியதால் திருப்பலி மற்றும் தேவ நற்கருணை பற்றிய புதுமைகளை வியாழக்கிழமைகளில் சிந்திப்பது பொருத்தமுடையதாயிருக்கும். இவை பற்றிய நிறைய புதுமைகள் இருப்பினும் திருப்பலிபற்றிய இருபத்தாறு புதுமைகளையும் சிந்திப்போம்.



# 6. வெள்ளிக்கிழமை புதுமை

மெய்யான தேவனாயிருக்கிற இயேசுகிறிஸ்து பட்ட பாடுகளின் தீ அனைவருக்கும் பக்தி உண்டாகும் படியாக பெரிய ஆல்பேர்த் என்பவர் "ஒருவ ஒரு வேளை மட்டும் உணவு உண்டுவிட்டு வருடம் முழுதும் ஒ சந்தியாயிருப்பதும், தன் உடம்பைச் சங்கிலியால் இணைத்துக் கொண்டு ரத்த வெளியேறுவது போல் அடிப்பதும் நாள் ஒன்றுக்கு மூன்று வேளை செப செய்வதும் ஆன்மாவுக்குப் பலன் உண்டாகும். ஆனால் இதைவிட இயேசுவின் பாடுகளைப் பற்றித் தியானம் செய்தால் ஆன்மாவிற்கு மிகுந்த ஞானப்பலனை உருவாக்கும் என்கிறார்.


இயேசு ஜெர்த்ருத்தம்மாளுக்குக் காட்சி தந்து "நம் பாடுபட்ட சுரூபத்தை பக்தியோடு ஒருவன் எத்தனை முறை பார்ப்பானோ அத்தனை முறையு நம்முடைய அளவில்லாத கருணை பொழியும் திருக்கண்ணாலே அவனை பார்ப்போம்" என்று திருவுளம் பகர்ந்தார்.

இறைமக்களே! உங்கள் ஆன்மாவுக்கு இப்படிப்பட்ட உத்தம ஞான பயன் உண்டாகும்படி வியாகுல அன்னையின் ஆசீரால் வெள்ளிக்கிழமைதோறு யேசுநாதர் பட்ட பாடுக்களைச் சிந்திக்கும் விதமாக எடுத்துக் கூறுவோம் எனவே ஐம்பத்திரண்டு புதுமைகளை ஐம்பத்திரண்டு வெள்ளிக்கிழமைகளில் தொகுத்துள்ளோம். இந்தப் பக்தி முயற்சிகளில் சிந்தித்தால், வாசித்து தியானித்தால், உங்களை தவமுயற்சிகளில் ஈடுபடுத்தினாலும், நாள் ஒன்றுக்கு மூன்று மணி நேரம் செபம் செய்வதினால் இவைகளினால் ஆன்மாவுக்கு வருகின்ற நன்மைகளை விட இப்போது கேட்கிற வாசித்துச் செய்கின்ற தியானங்களினால் அதிக நன்மை கிடைக்கும். இயேசுநாதர் அடைந்த துன்பங்களின் பேரில் தியானங்கள் செய்தால் அதிக அளவு நன்மை கிடைக்கும்.

ஒரு சந்தி இருப்பதாலும், தன் பாவத்திற்கு தகுந்தத் தண்டனைகளைக் கொடுத்துக் கொள்வதிலும், அதிக நேரம் செபம் சொல்வதற்கும் மனமில்லாமல் இருக்கிறார்கள். ஆனால் நம் இறைமைந்தன் இயேசுபட்ட பாடுகளின் பேரில் தியானம் செய்தால் ஆன்மாவுக்கு ஏராளமான நன்மை உண்டாகும்.

இயேசு தன் உயிரைச் சிலுவையில் விட்டபோது ஏராளமான புதுமைகள் நிகழ்ந்தன. அதுபோலவே இந்தத் தியானத்தினால் உங்கள் ஆன்மாவிலும் அதிக நன்மைகள் நடைபெறும். இயேசுநாதர் உயிர்விடும் போது பூமி நடுங்கியது அப்படியே நமது ஆண்டவராகிய கிறிஸ்து இயேசு நம்மைப் பாவத்தில் இருந்து

[illegible]விக்க எவ்வளவு துன்பங்களை அடைந்தாரென்பதை இந்தத் தியானத்தின் மூலம் உணரலாம். சிந்தித்தால் பாவத்துக்குப் பயந்து ஆன்மாவும் உடலும் நடுங்கும். யேசு உயிர்விடும்போது கற்கள் ஒன்றோடொன்று மோதி உடைந்து போயின. இதன்படி பாவத்தினால் கல்லைப்போன்றிருக்கிற சிலரின் மனது தியானத்தின் வழியாகத் தாங்கள் செய்த பாவத்திற்கு வருந்தினால் அந்த மனஸ்தாபத்தினால் மனம் உருகிப் போகும். இதுவும் தவிர இயேசு உயிர்விட்ட போது அநேகக் கல்லறைகள் திறக்கப்பட்டு மரித்த பலர் எழுந்திருந்தார்கள். அதுபோல பாவத்தினால் மரித்த ஆன்மாக்களுக்கு இந்தத் தியானத்தின்போது [illegible]கிற உத்தம மனஸ்தாபத்தைக் கொண்டு ஞான உயிராகிய அருள் அளிக்கப்படவே பாவமாகிய மரணத்தை விட்டு யேசுவோடுகூட எழலாம். ஆகையால் இந்தத் தியானத்தில் மேலான நன்மை கிடைக்கும் என்று நினைத்து மிகுந்த ஆசையோடு இத்தியானத்தைக் கேட்டு வாசித்துப் பலன் அடையுங்கள்.




# 7. சனிக்கிழமை புதுமை

இவ்வுலக வாழ்வில் மனிதனை வருத்தும் நோய்கள் பல இருக்கின்றன. அந்நோய்களைக் குணப்படுத்தும் அரிய மருந்துகளும் இறைவனால் நமக்கு அருளப்பட்டிருக்கின்றன. உடலை வருத்தும் நோய்கள் போல மனதை வருத்தும் துன்பங்களும் நிறைய உண்டு. நாம் வருத்தங்களில் சிக்கும் போதெல்லாம் நம்மை அவற்றிலிருந்தும் அவற்றின் பிடியிலிருந்தும் காப்பாற்ற இறைவன் தனது தாயை நமக்குத் தந்திருக்கிறார். அத்தாயும் நம்மீது மிகவும் பாசமும், கருணையும் கொண்டுள்ளார்கள். அவர்களின் இரக்கம் நமது துன்பங்களையெல்லாம் விரட்டும். துன்பங்களும் மறைந்துபோகும்.

இறைமக்களே! தேவதாயின் இரக்கம், அவர்களின் கருணை மீதான சந்தேகம் உங்களுக்கு ஏற்பட்டால் இந்நூலில் சொல்லப்போகும் புதுமைகளை வாசியுங்கள். உங்கள் சந்தேகம் நீங்கும். அவர்கள் மீது நம்பிக்கை உண்டாகும். தேவதாய் பிறந்தது சனிக்கிழமையென்பதால் அவருடைய திருவருளை எண்ணிச் சிந்திக்கும் நாளாக சனிக்கிழமையைத் தெரிவு செய்துள்ளோம். வருடத்தில் ஐம்பத்திரெண்டு சனிக்கிழமைகள் இருப்பதால் தேவதாய் மூலம் நிகழ்ந்த புதுமைகளில் ஐம்பத்திரெண்டு புதுமைகளை மட்டும் எடுத்துக் கொள்வோம்.

இப்புதுமைகளை மிகவும் பக்தியோடு வாசித்து உங்களுடைய தேவைகளுக்காய் தேவதாயை இரந்து மன்றாடுங்கள். அவர்களின் வழியைப் பின்பற்றுங்கள். அவர்களின் வழிநடத்துதல் உங்களை அனைத்துத் தீமைகளினின்றுக் காப்பாற்றி நன்மைகள் பலவற்றை உங்களுக்குச் செய்வதோடு அனைத்து ஆசீர்வாதங்களையும் தந்து உங்களை நித்திய மோட்ச பாக்கியத்திற்கும் அழைத்துச் செல்லும்.



# 3. கடிதங்கள்

## தந்தை சின்ன சவேரியார் சேசு சபையைச் சேர்ந்த தன் அண்ணனுக்கு எழுதிய கடிதம்

மதுரை ராஜ்ஜியம்
20-5-1739

என் மந்தையின் கண்காணிப்பு ஒரு பெரும் சுமையாய் உள்ளது. இயேசுவின் அன்பால் ஏவப்பட்டு, கடின உழைப்பிலும் வறுமையிலும் வாழும் போதகன் என் சிறு குறிப்புகளை வாசிக்க விரும்புவீர்கள் என்பது திண்ணம். இன்று ஒரு சில விஷயங்களை மட்டும் குறிப்பிடுகிறேன். நம் மோட்ச அன்னையின் பாதுகாப்பாலும், இந்தியரின் அப்போஸ்தலரான புனித சவேரியாரின் உதவியாலும், நான் இந்த மதுரை மிஷனில் பூரண சுகத்துடன் இருக்கிறேன்.

என் சேவைத்தளம் மிகவும் பரந்தது. அது நான்கு சிறு ராஜ்ஜியங்களால் ஆனது (இராமநாதபுரம், சிவகெங்கை, அறந்தாங்கி, பட்டுக்கோட்டை) இந்த ராஜ்ஜியங்கள் மொத்தத்தில் 60 ஆயிரம் படைவீரர்களைத் திரட்ட சக்தி படைத்தவை. இப்பகுதியில்தான் வணக்கத்திற்குரிய ஜான் பிரிட்டோ அடிகள் இயேசு கிறிஸ்துவில் தாம் கொண்ட விசுவாசத்தைத் தம் இரத்தத்தால் முத்திரையிட்டார்.

இந்த விரிந்த நிலத்திலே இறைவனின் சிறந்த பாதுகாப்பாலும் உதவியாலும் என் உழைப்புகள் வெற்றிகரமாக நடக்கின்றன. மற்றைய ஞானப் பலாபலன் ஒருபுறமிருக்க, நான் 325 ஆண்களையும், 1822 குழந்தைகளையும் கிறிஸ்துவின் பிள்ளைகளாய் ஆக்கியிருக்கிறேன். 25,120 பாவசங்கீர்த்தனங்கள் கேட்டிருக்கிறேன். இதிலிருந்து இங்குள்ள போதகர்களுக்குத் தாங்க முடியாத உழைப்பு இருக்கிறது என்பதை நீங்கள் யூகித்துக் கொள்ளலாம்.

புனித கன்னிகைக்குக் கிறிஸ்தவ மக்கள் விசேஷ வணக்கம் காட்டுகின்றனர். அவர்களின் தேவைக்காலத்தில் பூரண நம்பிக்கையுடன் அவளை நாடுகின்றனர். அவளிடமிருந்து உதவிகள் நிறையப் பெறுகின்றனர். அநேக உதாரணங்களை நான் இங்கே குறிப்பிடக்கூடும். ஆனால் பெரேரா சுவாமிகள் ஏற்கனவே விரிவாக தம் “வருடாந்தர வெளியீடுகளில்” வெளியிட்டுள்ளார்கள். ஆகவே அவற்றையும் என் கிறிஸ்தவ மக்கள் புனித பிரான்சிஸ் சவேரியாரிடமிருந்தும், முத்துப் பேறுபெற்ற அருளானந்தரிடமிருந்தும் பெற்றுவரும் உதவிகளையும் நான் சொல்லாமல் விட்டுவிடுகிறேன். அவர்கள் மேற்கூறிய சக்திவாய்ந்த பாதுகாவலர்கள் மட்டில் ஆழ்ந்த பக்தி கொண்டுள்ளார்கள். எப்பொழுதும் கிறிஸ்துவர்களும். இதர மதத்தினரும் தங்களுடைய சுகக்கேட்டில் புனித சவேரியாரின் தீர்த்தத்தையும் முத்துப்பேறுபெற்ற அருளானந்தருடைய இரத்தம் தோய்ந்த மண்ணையும் உபயோகிக்கின்றார்கள்.

முத்துப்பேறுபெற்ற அருளானந்தர் உயிர்நீத்த நாளான ஒவ்வொரு புதன்கிழமையும் கிறிஸ்துவர்களும், கிறிஸ்தவர் அல்லாதவர்களும் சாரை சாரையாக அவர் வேதசாட்சி முடிபெற்ற ஸ்தலத்திற்கு வருகின்றார்கள். இதையெல்லாம் பார்ப்பது வெகு ஆறுதலாக இருக்கிறது. சிறிய ஜெபத்திற்குப்பின் வியாதியஸ்தர் வேதசாட்சியின் தலை விழுந்த மண்ணைக் கொஞ்சம் எடுத்து தங்கள் வாயில் போட்டுக் கொள்கிறார்கள். அவர்களுடைய விசுவாசத்திற்கேற்ப அநேகமாக உடனே சுகமடைகிறார்கள். இதேபோல் வியாதியாய் உள்ள கால்நடைகளுக்கும் சுகமளிக்கும் அற்புதங்கள் நடக்கின்றன. நான் அங்கிருந்தபொழுது சில இந்து மக்கள் நடக்கவும் நிற்கவும் முடியாத ஒரு மனிதனைக் குதிரையின்மீது ஏற்றிக் கொண்டு வந்தார்கள். அவன் இப்பக்கம் அப்பக்கம் திரும்ப முடியாத நிலையில் இருந்தான். தனக்கு அவ்வேதசாட்சி குணமளிக்க வேண்டி வந்தான். நான் நெருங்கிப் போக இயலவில்லை. ஏனெனில் எதிர்கள் என்னைப்பின்பற்றி நிழல்போல் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

பின்பு ஒரு சமயம் அந்த மனிதன் சுகசேமத்துடன் என்னை வந்து சந்தித்தான். குதிரை உதவியில்லாமல் நடந்தே வந்திருந்தான். மக்கள் எல்லோரும் அப்புதுமைக்கு சாட்சி சொல்லி ஊர்ஜிதப்படுத்தினர். எல்லோருமே வணக்கத்துக்குரிய அருளானந்தர் சுவாமிகளின் அர்ச்சயசிஷ்ட பட்டத்திற்குப் பேராவலுடன் காத்திருக்கிறார்கள்.

"தன் மந்தைக்கு ஆண்டவர் அளிக்கும் சகாயங்களின் வழியாக ஒரு வேதபோதகன் ஊக்கமடைகின்றான்." இந்நாட்டின் நிலைமையால் அவன் பெறும் துன்ப துயரங்களும், சேவையின் தன்மையும், அவனுக்குத் தாங்கக் கூடியது மட்டுமல்ல, இனிமையானதுமாக இருக்கின்றன. அவனுடைய அன்றாட உணவு, இப்பகுதிகளில் அவன் அடையும் கஷ்டங்கள், வறுமை, பயம், கவலைகளே. அவன் நோய்வாய்ப்பட நேர்ந்தால் மருந்தில்லை; மருத்துவர் இல்லை. துன்பங்கள் வந்தால் அல்லது தன் உள்ளம் சீர்குலைந்தால் அவனுக்கு ஆறுதல் அளித்து தைரியத்தையும் நம்பிக்கையையும் ஊட்ட ஞானத் தகப்பன் இல்லை.

என்னைப் பற்றிய அளவில் 4 நாள் பயணம் செய்தே பாவசங்கீர்த்தனம் செய்ய வசதி உண்டு. ஆனால் எல்லோருக்கும் இவ்வதிர்ஷ்டம் இல்லை. பசியினால் வருந்தும்போது ஒரு போதகனுக்கு உணவில்லை. இங்கு பழம் கிடைக்காது. மீனோ முட்டையோ இல்லை. சோறு மட்டும் அவனது உணவு. நான் திராட்சை ரசம் குடித்து அறியேன். ஒரு மேலைநாட்டவரால் தாங்க முடியாத வெப்பத்தால் அதிகரிக்கும் தாகத்தைத் தீர்க்க, தண்ணீரைத் தவிர வேறு ஒன்றுமில்லை. இந்தத் தண்ணீரோ அசுத்தம் நிறைந்தது. குடிக்கும்போது அதில் உள்ள கிருமிகளைப் பார்க்காதபடி கண்களை மூடிக்கொள்ள வேண்டும். மரணத்தருவாயில் கிடக்கும் ஒருவரைச் சந்திக்க வெகுதூரம் பயணம் செய்ய வேண்டும். பாதையோ மிகக் கஷ்டம். கணக்கற்ற பாவசங்கீர்த்தனங்களைக் கேட்பது. அநேக மொழிகளைப் படிப்பது. முன்பின் அறியாதவருடன் பேசிப்

பழகுவது, தன் சகோதரரோடு உரையாட வாய்ப்பில்லாமல் இருப்பது ஆகியவையே வேதனை அளிக்கும் காரியங்கள். இவைகளையெல்லாம் விடத் தாங்கமுடியாத வேதனை கொடுப்பது, தொடர்ந்து நடைபெறும் வேதகலாபனைகளே.

இரு மாதங்களுக்கு முன் என் வீட்டையும் கோவிலையும் ஒரு பூசாரி நான் திவ்விய நன்மை கொடுத்துக் கொண்டிருக்கும்போது நெருப்பிட்டுக் கொளுத்திவிட்டான்.

இப்படியெல்லாம் இருப்பினும், சகலவித வசதிகளும் ஆடம்பரமும் நிறைந்த, இன்பகரமான, ராஜரீகப்பட்டணமான நேப்பிள்ஸ் நகரத்தில் இருப்பதைவிட ஆயிரம் மடங்கு இங்கு வாழ்வதில் நான் ஆனந்தமடைகிறேன்.

# சேசு சபை ஆண்டறிக்கை

## தந்தை சின்ன சவேரியார் பற்றிய 1745-ம் வருடத்திய சேசு சபை ஆண்டு அறிக்கை

இரு மறவ அரசர்களுக்கு இடையே நடந்த சண்டைகளின் காரணமாக டி ரோஸி சுவாமி 5 மாதங்கள் தளத்திலிருந்து விலகி நிற்க வேண்டியதாயிருந்தது. பின் புனித சுவர்க்கீனார் சிற்றாலயத்திற்குத் திரும்பினார். (குருமிலாங்குடி) எப்பக்கங்களிலிருந்தும் கிறிஸ்தவர்கள் அவரிடம் வந்தனர். 8 நாட்களில் 1203 பாவசங்கீர்த்தனம் கேட்டார். 64 முதியவர்களுக்கும் 101 குழந்தைகளுக்கும் ஞானஸ்நானம் கொடுத்தார்.

இவ்வருடம் புனித சவேரியாரிடமிருந்து பெற்ற 688 உதவிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றைப் பெற்ற ஊர்கள்: சருகணி, அநுமந்தக்குடி, சரானநம்பல், தக்கலம், பலம்தனி அறை, காவூர், தச்ச நெல்லி, ரவிங்க மங்களம், திருவம்பட்டி, செத்துத்திடல், மூலாக்கோட்டை, வெள்ளக்காடு, பிலிகுத்தி முதலியன.

முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் அருளால், மன்றாட்டுக்கள் பெற்ற ஊர்கள்: வெற்றியூர், பில்லூர், பட்டமங்களம், முத்துநாடு, செஜண்ணம் முதலியன.

தந்தை டி ரோஸி சுகமற்று இருக்கிறார். எனினும் 1800 பாவசங்கீர்த்தனம் கேட்டுள்ளார்; 88 அவஸ்தை பூசுதல். ஞானஸ்நானம்: 603 முதியோர், 1356 குழந்தைகள்.

அரிசிக்கோ, மழைக்கோ பஞ்சமில்லை. எனினும், பஞ்சநிலை நிலவியது. காரணம், இதர நாடுகளிலிருந்து பஞ்சம் பிழைக்க மக்கள் திரளாக வந்ததால், அல்லது வணிகர்கள் நெல்லை வெளியே கடத்தியதால். டி ரோஸி

சுவாமிகள் தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்ற வெகுவாய் உழைக்க வேண்டியிருக்கிறது. புனித சவேரியாராலும், முத்துப்பேறுபெற்ற அருளானந்தர் வழியாகவும்பெற்ற உதவிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. முதியோர் 344; குழந்தைகள்; 1340 மறவ நாட்டிலேயே அலோசியஸ் அமதேவி என்ற இராயப்பர் சுவாமிகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் போதகராக, மாறணியில் உள்ள வியாகுல அன்னையின் கோவிலில் சேவை செய்துவருகிறார்.

## சேதுதேசம் உதயம்:

தென்தமிழகத்தின் கடைக்கோடியிலுள்ள இராமேஸ்வரத்திற்குச் செல்லும் பக்தர்களுக்குப் பாதுகாப்பும் உரிய வசதிகளும் செய்து கொடுப்பதற்காக மதுரையைத் தலைமையகமாகக் கொண்டு ஆட்சி புரிந்த திருமலை நாயக்கர் 1604 ஆம் ஆண்டில் இராமநாதபுரத்தைத் தலை நகராகக் கொண்டு சேதுதேசம் என்ற சுதந்தர நாட்டை உருவாக்கினார். அந்தத் தேசத்தின் முதல் அரசனாக சடைக்கத் தேவர் என்ற உதய இரகுநாதன் பதவியேற்றார். 1795 ஆண்டு முதல் ஆங்கிலேயர்களின் உதவியால் தென் தமிழகத்தை நவாப்மன்னர்களுக்கு அரசன் முத்துராமலிங்க சேதுபதி கப்பம் கட்டி வந்தார். 1801 ஆம் ஆண்டிலிருந்து ஆங்கில ஆட்சியின் கீழ் அப்பகுதி ஒரு ஜமீன் பகுதியாக இருந்து வந்தது. நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, நிகழ்ந்த ஜமீன் ஒழிப்பினால் சேது தேசம் ஒரு ரயத்துவாரி மாவட்டமாக மாற்றப்பட்டது.

## கிறிஸ்தவத்தின் நாற்றுகள் நடப்பட்ட நாள்:

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்து விண்ணகம் சென்றபிறகு நற்செய்தி மதிப்பீடுகளை உலகெங்கும் அறிவிக்கவேண்டும் என்ற உன்னத நோக்கோடு புனித தோமையார் இந்தியாவிற்கு வந்து கேரளா பகுதிகளில் நற்செய்தி அறிவித்து தமிழகத்தின் வடபகுதியிலுள்ள மைலாப்பூரில் தன் இன்னுயிரை நீத்தார். 16ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இம்மாவட்டத்தில் உள்ள வேதாளையில் போர்த்துக்கீசியர் முகமதியரை கடற்சண்டையில் தோற்கடித்து கோவாவில் இறந்தும் தன் அழியா உடலால் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிற சவேரியாரின் பணியை இங்கு வாழ்ந்து வந்த பரதகுல மக்களுக்கு கிடைக்கச் செய்தனர். சவேரியார் ஏற்றி வைத்த விசுவாச தீபத்தினால் தமிழகத்தின் தென் கோடிப்பகுதியில் நற்செய்தி மதிப்பீடுகள் மக்களின் மனதில் விளைந்தது. புனித சவேரியார் யாழ்ப்பாணத்திலிருந்து மைலாப்பூருக்குக் கடல் வழியாகப் பயணம் செய்யும் போது இராமநாதபுரத்திற்கு வடக்கே உள்ள தேவி பட்டணத்தில் இறங்கித் திருப்பலி நிறைவேற்றிய தினம்தான் இராமநாதபுரத்தில் கிறித்துவ மறை தோன்றிய நாளாகும். கி.பி 1600 ஆம் ஆண்டில் முத்துப் பேட்டைக்கு அருகிலிருந்த பெரிய பட்டணமான தூத்துக்குடியிலிருந்து வந்த குருக்களால் கிறித்துவ மறை வளர்ந்தது. அங்கிருந்து திருப்பாலக்குடியிலும் கிறித்துவ போதகம் நடந்து வந்தது.

## விழுதுகள் விட்ட விசுவாச விதைகள்:

17ஆம் நூற்றாண்டில் மறவ நாடு என்றழைக்கப்பட்ட சேது பதியின் தேசத்தில் கிறிஸ்தவ மறை வளர்ந்து வந்தது. ஆயிரக்கணக்கில் இயேசுவின் போதனையை ஏற்று கிறிஸ்தவ மறையை மக்கள் ஏற்றனர். நற்செய்தி மதிப்பீடுகளைத் தன் வாழ்க்கையில் கடைப்பிடித்து அப்போதனையை மக்கள் தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும் என்று வலியுறுத்திய காரணத்தினால் 1693ஆம் ஆண்டில் புனித அருளானந்தரை இரகுநாத சேதுபதி ஓரியூர் திட்டையில் தலையை வெட்டிக் கொன்றான். ஆனால் கிறிஸ்தவமதம் ஆல்போல் தலைத்து அருகுபோல் வேரூன்றியது. இருந்தும் கிறிஸ்தவ மதிப்பீட்டின் படி வாழ்ந்ததால் நிறைய கிறிஸ்தவர்கள் தங்களின் வாழ்வை இழந்தனர். புனித அருளானந்தர் இறந்ததற்குப் பிறகு 15 வருடங்கள் வேறு எந்த குருக்களும் இப்பகுதியில் கிறிஸ்தவ மறை போதகத்திற்காக வரவில்லை. 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிறிஸ்துவ மறைக்கு உருவான எதிர்ப்பையும் வெறுப்பையும் தைரியமுடன் சந்தித்து கிறிஸ்தவ மறையை வளர்க்கும்பொருட்டு தேவர்த்தநாதர் என்ற பீட்டர் மார்ட்டின் என்ற பிரெஞ்சு நாட்டு குருவும் அவரோடு துணையாக இருந்து கிறித்தவ மறையை வளர்த்தெடுத்த சத்தியநாதன் என்ற உதவியாளருடன் இப்பகுதிக்கு வந்தனர். மறவ நாட்டின் மையமான இடையர் சருகணியை மையமாகக் கொண்டு தங்கள் பணியைச் செய்ய ஆரம்பித்தனர். முதலில் பொன்னலிக் கோட்டையிலுள்ள சிற்றுமன் சேர்வை என்ற மறவர் தலைவனைக் குணமாக்கி இயேசுவின் மறைக்கு வளம் சேர்த்தனர். இவரைப் பின்பற்றி இப்பகுதியில் உள்ள பெரும்பாலான கிராமத்தலைவர்களும் மக்களும் அதிக அளவில் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினர்.

## கிளைகள் பரப்பிய கிறிஸ்தவம்:

இப்பகுதியிலுள்ள இருதேசங்களை ஆண்டுவந்த கட்டத்தேவர் மற்றும் சசிவர்ணத் தேவர் ஆகியோர் சுகவீனம் அடைந்த போது சத்திய நாதன் சிறந்த மருத்துவச்சிகிச்சை அளித்ததால் அவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். இதனால் கிறிஸ்தவ மக்களும், குருக்களும் மகிழ்ச்சி அடையுமாறு அரசர்களின் உதவிகள் தொடர்ந்தது. சேதுபதி பட்டத்திற்கு உரிமையில்லாத பவாணி சங்கர் இவர்களை எதிர்த்து நின்றதால் இவர்கள் இருவரும் தஞ்சாவூர் சென்று மன்னர் துக்கோஜியிடம் ஆதரவு வேண்டினார்கள். திருச்சியில் ஆவூர் குருவான பெர்டோலி என்ற சஞ்சீவி நாதர் இவர்கள் இருவரின் பரிதாப நிலையைக் கேட்டறிந்து 'நீங்கள் உங்கள் பகுதிகளில் மன்னராகத் தொடர்வீர்கள்' என்று தீர்க்கதரிசனமாக முன்மொழிந்தார். அவர் சொன்னபடியே நடந்ததாலும் இவர்கள் இருவரும் கிறிஸ்தவ மறைக்குத் தங்களின் ஆதரவினைத் தந்தனர். எனவே தான் தங்கள் பகுதிகளில் கிறிஸ்தவ சமயக் கொள்கைகளைப் பரப்பவும் பின்பற்றவும் உதவி செய்தனர். இந்தச் சாதகமான சூழ்நிலையில்தான் சின்னசவேரியார் என்றழைக்கப்படும் ஜேம்ஸ் டி ரோசி இப்பகுதிக்குக் கிறிஸ்தவ மதிப்பீடுகளை நாடறியச் செய்தார்.

## II. சின்ன அருளானந்தர் - மரிய லூயி லெவேல் சே.ச.,

# 1. பிறப்பும் இளமையும்

### புண்ணிய பூமி பிரான்சு:

பிரான்சு தேசம் ஒரு புண்ணிய பூமி; ஐரோப்பாக் கண்டத்தின் அழகு மிகு தேசம்; இலக்கிய மேதைகளையும், உலக மகா வீரர்களையும் உலகிற்குத் தந்த நாடு. திருச்சபையின் வரலாற்றில் எண்ணற்றப் புனிதர்களைத் தந்த நாடும் பிரான்சு தான். இந்தப் பிரான்சு தேசத்தின் ரென்ஸ் மறை மாவட்டத்தின் லாலியர் என்ற ஊர் ஒரு புண்ணியத்தைப் பெற்றெடுத்த பூமியாகக் கருதப்படுகிறது. இந்த ஊரில் ஒரு பாலகனாக உதித்த உத்தமர் தான் தந்தை லெவே ஆவார். புனித சவேரியார், அருளானந்தர் ஆகியோரின் அடிச்சுவட்டில் வீர விசுவாசம் பொங்கியவராய் பாரதம் வந்த இவரைப் பெறுதற்கரிய பேறு பெற்றது சிவகங்கைச் சீமையின் மறவநாடு ஆகும்.

### முத்தாகப் பிறந்த பத்தாவது குழந்தை:

இவ்வூரில் வாழ்ந்த ஜோசப் லெவே கிறித்துவ மறையில் மிகுந்த ஆவல் கொண்டிருந்த ஒருவர். இவர் ஜூலியானா லெபினே என்ற அம்மையாரைத் திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்குச் சொத்தாக இருந்ததெல்லாம் மிகவும் சொற்பம் தான். நான்கு குதிரைகள், ஒரு வண்டி, ஒரு சிறிய வீடு, ஒரு சிறிய தோட்டம். சொத்துக்கள் சிறியவையாயிருப்பினும் மிகுந்த மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர். அவர்களின் வாழ்வில் ஒரு சிறிய குறை ஒன்றும் இருந்தது. திருமணமாகி ஆறு ஆண்டுகள் ஆயினும் எந்த மழலைச் செல்வங்களையும் பெற்றார்களில்லை. வேண்டாத தெய்வங்களில்லை. எனவே லெவே தம்பதியினர் தங்களின் ஊரிலிருந்து 100கி.மீ தூரத்திலுள்ள புனித அன்னம்மாள் கோவிலுக்குப் பாதயாத்திரை சென்றனர். குழந்தைகள் வேண்டினர். என்னே ஆச்சரியம்! ஆறு ஆண்களும், நான்கு பெண்களும் பிறந்தனர். அவர்களில் பத்தாவது குழந்தையாக லூயிஸ் லெவேயும் பிறந்தார். 1884 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6ஆம் தேதி உலகெங்கும் குருத்தோலைகளை ஏந்திக் கிறிஸ்தவர்கள் ஆர்ப்பரித்து பவனி வரும் அந்த இனிமையான நாளில் பாலகன் லெவே பிறந்தார்.

### சோகத்தின் உச்சத்தில் பெற்றோர்:

பாலகன் லெவே பிறந்தபோது மகிழ்ச்சியால் பெற்றோர்கள் ஆர்ப்பரிக்கவில்லை. மாறாக வாய்விட்டு அழுதனர். ஏனெனில் பாலகன்

பிறந்தபோது மிகவும் மெலிந்தவனாய் எடைகுறைந்தவனாக இருந்தான். பார்த்தவர்கள் 'இக்குழந்தை பிழைப்பது கடினம்' என்று பேசிக் கொண்டனர். இதைக் கேட்ட தாயின் இதயம் சுக்கு நூறாகி உடைந்து போனது. பத்து மாதம் தவமிருந்து பெற்றெடுத்த இக்குழந்தைக்கு இந்த நிலையா? ஏங்கிப் போனார் ஜூலியானா. இருப்பினும் கடவுளின் பாதத்தில் ஒப்படைத்து மனதுருகி வேண்டினார். கண்கள் மூடி வாடி வதங்கிய மலராக இருந்தான் அந்த மெல்லிய பாலகன்.

## திருமுழுக்குத் தந்த வாழ்வு:

இயேசுவின் கரத்தில் ஒப்படைத்து திருமுழுக்கு தந்தால் பாலகன் பிழைத்துக் கொள்வான் என்று உறுதியாக நம்பினாள். எனவே தன் கணவரிடம் குழந்தைக்குத் திருமுழுக்கு தந்திட வேண்டி ஆலோசனைகள் செய்தார். வேளையை ஏந்திக்கொண்டு ஆலயம் விரைந்தனர் பெற்றோர்கள். பிறந்த அன்றே பிற்பகல் 3.30 மணிக்குப் பாலகனுக்குத் திருமுழுக்கு வழங்கப்பட்டது. லூயிஸ் மரியலெவே என்ற பெயரை உச்சரித்துப் புனித நீரை அள்ளிக் குழந்தை மீது தெளித்த மறுகணமே குழந்தையின் உடலில் ஒரு சிலிர்ப்பு. அதுவரை எந்தவித சத்தத்தையும் எழுப்பாத அந்தப் பாலகன் தன் கைகால்களை ஆட்டி அழ ஆரம்பித்தான். அதுவரை சோகத்தின் உச்சத்தில் இருந்த அனைவரும், குறிப்பாக குழந்தையின் பெற்றோர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர். இறைவனின் அதிசயத்தை எண்ணி அக்களித்தனர்.

## இயற்கை அனுபவம் செதுக்கிய இறை அனுபவம்:

குடும்பத்தில் கடைக்குட்டியாக இருந்ததால் தங்கள் குடும்பத்திற்குக் கிடைத்த சொத்து என்று எல்லோரும் மகிழ்ந்து குழந்தை லூயிஸ் லெவே மீது மிகுந்த அன்பு வைத்திருந்தனர். குடும்பமும் மிகுந்த விசுவாசத்தில் திளைத்திருந்த படியால் இறைநம்பிக்கையும், மனித நேயமும் இல்லம் முழுவதும் நிறைந்திருந்தது. பெற்றோர்கள் ஒழுக்க நெறிகளை, மனித நேயச் சிந்தனைகளை எல்லாக் குழந்தைகளுக்கும் தவறாது கற்பித்து வந்தனர். அதுமட்டுமல்லாது அவர்கள் கடின உழைப்பாளிகளாகவுமிருந்தனர். எனவே அவர்கள் தங்களின் வாழ்வை மகிழ்ச்சியாக நடத்தி வந்தனர். வீட்டில் எல்லோரும் தோட்டத்தில் உழைக்கும் போது குழந்தை லெவே வயலின் வரப்பு மீது அமர்ந்திருப்பான். லூயிஸ் லெவே அழகிய நீரோடை, தெள்ளிய வான்வெளி, பல்விதப் பறவைகளின் இன்னிசை மொழிகள், நதிகள் ஓடும் மெல்லிய சத்தம் இவற்றோடு வளர்ந்தான். இந்த இயற்கை அனுபவத்தை இந்தியா வந்த பிறகும் நினைத்து நினைத்து மகிழ்வாராம் லூயிஸ் லெவே.

## அமலோற்பவ மாதா தந்த அற்புத அனுபவம்:

ஹூபிஸ் லெவேயின் வீட்டில் அவர் படுக்கும் படுக்கைக்கு அருகில் இருக்கும் அமலோற்பவ அன்னையின் உருவப்படமும் அவரின் குழந்தைப் பருவத்தை மிகவும் பாதித்தது மட்டுமல்ல பக்குவப்படுத்தவும் செய்தது. படுக்கையில் படுத்துக் கொண்டே அந்த மாதாப்படத்தில் தன் கண்களை நிலைநிறுத்திக் கொள்வாராம். அன்னையின் முகத்தில் தவழும் சாந்தப் புன்னகை குழந்தையை வெகுவாகக் கவர்ந்தது. அப்படத்தைப் பார்ப்பதிலேயே தன் அதிக நேரத்தைச் செலவழிப்பாராம். அது மட்டுமல்ல இரவு படுக்கப் போவதற்கு முன்பு வெகுநேரம் அப்படத்தின் முன்பு முழங்கால்படியிட்டு செபிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தாராம். தான் குருவான பிறகும் இம்மாதா படத்தின் மகிமையை சிலாகித்துப் பேசுவாராம் ஹூபிஸ் லெவே. இவரின் புனித வாழ்வைச் செதுக்கியதில் இந்த அமலோற்பவ மாதாவின் உருவப்படத்திற்கும் அது தந்த இறை அனுபவத்திற்கும் மிகுந்த பங்குண்டு.

## துயரத்தின் உயரம் குறைத்த தாயவள்:

லெவே சிறு குழந்தையாக இருந்தபோது அவரின் தொடையில் ஒரு சிறு கட்டி தோன்றியது. துடித்துப் போயினர் குடும்பத்தினர். நடக்க முடியாமல் குழந்தை பட்ட துயரங்களைக் கண்ணுற்ற பெற்றோர்கள் வருத்தங்களில் தோய்ந்தனர். துள்ளித்திரிய வேண்டிய பருவத்தில் படுக்கையிலே வளர ஆரம்பித்தார். குழந்தையை அழைத்துக்கொண்டு மருத்துவமனைக்குச் சென்றனர் பெற்றோர். பரிசோதித்த மருத்துவர் அறுவைச்சிகிச்சைக்கு நாள் குறித்தார். அந்த நாளும் வந்தது. தேவமாதாவின் படத்தின் முன்பு அமர்ந்து செபிப்பதிலேயே முழுநேரமும் செலவு செய்த லெவே முற்றிலும் குணமடைந்தார். துள்ளி ஓடிப் பெற்றோரின் துயரத்தைக் குறைத்தார்.

## பட்ட காலிலே படும்:

பாசத்தின் பிடியில் சிக்குண்டு கிடந்தவர் ஹூபிஸ் லெவே. சகோதர, சகோதரியர் அனைவரும் கடைக்குட்டியான லெவே மீது அன்பை அதிகமாகப் பொழிந்தனர். அவரை அன்பு செய்தவரில் முதலிடம் அவரின் இளைய அக்காள் தான். திடீரென அவரை மரணம் தாக்கியது. இதனைத் தொடர்ந்து அவரது சிறிய அண்ணனும் இறையடி சேர்ந்தார். இதனால் சிறுவன் லெவே உட்பட குடும்பத்தினர் அனைவரும் சோக வெள்ளத்தில் மூழ்கினர். இருப்பினும் அவரது பெற்றோர் அவர்களைக் கண்ணின் கருமணியாகக் காத்து வந்தனர். மரணத்தை மரணமாகப் பார்க்காமல் இறைப்பிறப்பாகப் பார்க்கும் பார்வையைக் கற்றுத்தந்தனர் பெற்றோர்.

இரண்டு பிள்ளைகளின் இறப்பால் ஜோசப் லெவேயை இதயநோய் தாக்கியது. தனது 54ஆவது வயதில் இதயநோய் முற்றி அவர் மரணமடைந்தபோது லூயிஸ் லெவேயின் இதயம் சுக்கு நூறாகிப் போனது. குடும்பத்தைத் தன் இதயத்தில் சுமந்து வந்த அந்தத் தூய தந்தை மூச்சு விட மறந்தபோது ஒட்டுமொத்தக் குடும்பமும் துயரத்தை உடுத்திக் கொண்டது. குடும்பத்தைக் காக்கும் முழுப் பொறுப்பை மூத்த மகன் ஏற்றுக் கொண்டார். இந்நிலையில் குழந்தைகளை வளர்க்கும் முழுப்பொறுப்பு தாயிடம் கை மாறியது. முழுப் பொறுப்பையும் தன் தோளில் சுமந்து வந்த மூத்த மகன் ஒரு விபத்திலே தன் உயிரை இழந்தபோது ஒட்டுமொத்தக் குடும்பமே வியாகுலமாகிப் போனது. இருப்பினும் வீரமுள்ள அந்ததாயின் விசுவாசம், குடும்ப ஜெபம் மற்றும் ஆன்மீக அறிவுரைகள் லெவேயைப் புடம்போட்டது.

## சகோதரி மூட்டிய அழைத்தல் வேள்வி யாகம்:

இறைபக்தியுள்ள குடும்பம். தினசரி இரவு செபம், அனுதினமும் நற்கருணை நாதரை ஆலயத்திற்குச் சென்று சந்திக்கும் ஆவல், புண்ணிய வாழ்வு, பாசமிகு சகோதர சகோதரியரின் கள்ளமில்லாத அன்பு, இவற்றின் நடுவினில் புண்ணியங்களின் பிள்ளையாக வளர்ந்தார் லெவே. அவரின் மூத்த சகோதரி விக்டோரியா அவர்கள் தம்பி லெவேயை மிகவும் அன்பு செய்தவர். நாள்தோறும் தம்பியைக் கோவிலுக்கு அழைத்துச் சென்று திவ்ய நற்கருணை நாதரைச் சந்திக்க உதவுவார். வெள்ளிக்கிழமைகளில் சிலுவைப் பாதை செய்யும் வழக்கத்தை உடையவராக லெவே வளர்ந்தார். வயலில் வேலைக்குப் போகும் போது தம்பி லெவேயையும் அழைத்துச் செல்வார். ஒரு முறை அவர் வயலில் வேலை செய்யும்போது தம்பியைப் பார்த்து **'லூயிஸ்! நீ ஒரு குருவாக வேண்டும்'** என்று தன் விருப்பத்தைச் சொன்னபோது தன் சகோதரியின் விருப்பத்தை நிறைவேற்ற உறுதி ஏற்றார்.

## கல்வரப்படுத்திய காளைமாடு:

ஒருநாள் சகோதரர்கள் அனைவரும் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருக்க வயல்வரப்பில் லெவே அமர்ந்திருந்தார். சற்றுத் தொலைவில் ஒரு நாய் குரைத்து பக்கத்தில் மேய்ந்துகொண்டிருந்த மாட்டை விரட்ட, அம்மாடு வெறித்து எக்காளமிட்டுக் கொண்டு பாய்ந்து ஓடிவந்தது. அந்த பேரிரைச்சல் கேட்டு தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த சகோதர சகோதரியர், பயத்தில் நாலாபக்கமும் ஓடினர். சிறுவன் லெவேயால் ஓடமுடியவில்லை. பயத்தில் உறைந்திருந்த லெவே கீழே விழுந்தார். காளை மாடு வெறித்தனமாக ஓடிவந்தது. யாரும் காப்பாற்ற வழியின்றி, சிறுவன் லெவேக்கு ஒன்றும் நேர்ந்துவிடக்கூடாது என்று அஞ்சினர். வேகமாக ஓடிய மாடு லெவேயைக்

கடந்து சென்றபிறகு தான் சகோதர சகோதரியர் நிம்மதி பெருமூச்சுவிட்டனர். காளை மாடு ஓடியபின் அனைவரும் ஓடி வந்து சிறுவன் லெவேயைக் கட்டியணைத்து முத்தமிட்டனர். சிறுவன் லெவேயோ ஒன்றும் நடக்காதவர் போல மிகவும் அமைதியுடனிருந்தார்.

## தனிமைப்படுத்திய தமையனின் பிரிவு:

கல்வி பயிலும் காலம் வந்தது. அவரின் தாய் லெவேயைப் பள்ளியில் சேர்த்துச் சிறப்பான கல்வி தரவிரும்பினார். சிறுவன் லெவே பயந்த சுபாவம் உள்ளவராக இருந்தபடியால் இது சிறுவனின் கல்விக்கு இடைஞ்சலாக இருந்து விடக் கூடாதென்று அவரின் தாய் வருந்தினார். தன் குடும்பத்தில் அடுத்தடுத்து ஏற்பட்ட மரணங்களினால் மிகவும் வருந்தினான் சிறுவன். அதிலும் குறிப்பாக தன் அண்ணன் பில்பெர்ட்டின் மரணத்தினால் மிகவும் துவண்டிருந்தான். அன்பு அண்ணனோடு உறவாடிய அந்த மகிழ்ச்சியான நிமிடங்களை நினைத்து நினைத்து ஏங்கினான். ஒருநாள் பள்ளிக்குச் சென்ற லெவே மாலை வீட்டுக்குத் திரும்பவில்லை. பிள்ளையைக் காணாமல் பயந்து போயினர் அவரின் தாயும் சகோதர சகோதரியரும். எல்லா இடங்களிலும் தேடித் திரிந்தனர். கடைசியாக பள்ளிக்குப் போகும் வழியில் உள்ள அடர்த்தியான புதரின் பின்னே அமர்ந்து அழுதுகொண்டிருந்த சிறுவன் லெவேயைக் கண்டு மிகவும் மகிழ்ந்தனர். காரணம் கேட்டபோது, அண்ணனை இழந்த துயரம் மற்றும் தனிமை ஆகியவையே சிறுவன் லெவேயை இச்சூழ்நிலைக்கு ஆட்படுத்தியது என்று அறிந்து எல்லோரும் வருந்தினர்.

## இதயத்தில் விழுந்த இறையழைத்தல்:

ஒரு நாள் திருப்பலிக்குச் சென்றபோது திருப்பலி காண்பதற்கு முன் அப்பங்கின் உதவிப் பங்குத் தந்தையிடம் ஒப்புரவு அருட்சாதனம் பெற முயன்றார் லெவே. அப்போது அத்தந்தை சிறுவன் லெவேயிடம் உன் வாழ்வின் அழைத்தல் என்ன? என்று கேட்டபோது, அதைப் பற்றி எதுவும் தெரியாத லெவே வீட்டிற்கு வந்து தாயிடம் அருள்தந்தை கேட்ட கேள்விக்கு அர்த்தம் என்ன? என்று கேட்டார். தாயும் சிறுவன் லெவேக்கு அக்குரு வழியாக இயேசு கிறிஸ்து தான் அக்கேள்வியை உன்னிடம் கேட்கிறார் என்று தன் மகனுக்குக் கூறி தேவ அழைத்தல் பற்றி சில குறிப்புகளைக் கொடுத்தார். சிறுவன் லெவேக்குக் குருவாக வேண்டும் என்ற எண்ணம் துளிர்விட ஆரம்பித்தது.

ஆண்டுகள் இரண்டு உருண்டோடின. சிறுவனுக்கு வயது 14. மாலை நேரம் சிறுவன் வயலில் வேலை செய்து கொண்டிருந்தான். அப்போது ஒரு குரல் அவனுக்குக் கேட்டது. **'லூயிஸ் லெவே! நீ ஒரு குரு'**என்பதே அக்குரல்.

மீண்டும் கேட்டகுரலையே மனதுக்குள் இருத்தி அசைபோட்டு அதைப்பற்றி தன் தாயிடம் விவரித்துப் பேசினார். இக்குரலை நனவாக்க வேண்டும் என்னும் எண்ணத்தை மனத்தில் நிறுத்தினார். மனதில் மிகவும் மகிழ்ந்தவராக அதைப்பற்றி இன்னும் அறிந்து கொள்ள எண்ணி அவ்வூரின் பங்குத்தந்தையைச் சந்திக்கச் சென்றார். தன்னிடம் வந்து பேசிய சிறுவன் லெவேக்கு தேவ அழைத்தல் இருக்கிறது என்று நிச்சயம் நம்பிய பங்குத்தந்தை தன்னிடமிருந்த இலத்தீன் இலக்கணப்புத்தகத்தைக் கொடுத்து அதிலுள்ள முதல் ஐந்து பக்கங்களை நன்றாகப் படித்து வந்து தன்னிடம் ஒப்புவிக்க வேண்டும் என்று வேண்டினார். வீட்டிற்கு வந்து லெவே அப்புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்தார். இலத்தீன் சொற்களை வாசிக்க ஆரம்பித்தார். இலத்தீன் சொற்களை வாசிக்க, மனப்பாடம் செய்ய மிகவும் கஷ்டமாக இருந்தது. இருப்பினும் அந்த உதவிப் பங்குத்தந்தை அளித்த ஆறுதல் மொழிகளினால் இலத்தீன் மொழியைச் சரிவரக் கற்க ஆரம்பித்தார். சிறுவன் லெவேயின் ஆர்வம் பங்குத்தந்தையை நிமிர்ந்து நிற்க வைத்தது. வயது பதினாறைக்கடந்த இளைஞன் லெவே 1900ல் லிட்ரே நகரில் உள்ள திருச்சிலுவை பள்ளியில் சேர்ந்து படித்தார்.

## நெஞ்சில் அடைகாத்த ஆன்மீக அக்கினி:

அந்த நாளும் வந்தது. 1904 ஆம் ஆண்டு ரென்னஸ் நகரில் உள்ள குரு மடத்தில் சேர்ந்தார். குருவாகித் தன் பணியை பிரான்சு நாட்டிற்குள் செய்வதா? அல்லது வெளிநாடுகளில் மறைபரப்பிடச் செல்வதா? என்ற சந்தேக எண்ணத்தை மனதில் போட்டு காத்து வந்தார். அதற்கும் ஒரு நாள் விடை கிடைத்தது. அவர் படித்துக் கொண்டிருந்த குருமடத்திற்கு வந்து 'யேவேல்' என்ற மதுரை மிஷினில் பணிபுரிந்து கொண்டிருந்த குரு ஒருவர் மறையுரை நிகழ்த்தினார். அவர் அப்போது 'இந்தியாவில் நற்செய்தி அறிவிப்பு பணிபுரிய அக்னி நெஞ்சங்கள் தேவை' என்ற விதையை விதைத்தார். கனன்று கொண்டிருந்த ஆசை லெவேயின் மனதில் பற்றியெரிய ஆரம்பித்தது. சவேரியார் பாதம் பதித்த மண்ணில் தானும் பணிபுரிய ஆவல் கொண்டார். அதுமட்டுமல்ல இந்தியா சென்று பணிபுரிந்து திரும்பிய பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த அருள்தந்தை ஒருவரின் கடிதங்களைப் படித்தபோது இந்த ஆசை கொழுந்து விட்டுளரிய ஆரம்பித்தது. இந்த ஆவலை மனதில் தினமும் அடைகாத்தவராக 1908ஆம் ஆண்டில் அக்டோபர் 6ஆம் நாள் டூலூஸ் மாநிலத்தின் இயேசு சபை நவதுறவற இல்லத்தில் சேர்ந்து குருத்துவப் பயிற்சி பெறத்தொடங்கினார். அங்கு இலத்தீன், பிரஞ்சு, கிரேக்கம், ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்க ஆரம்பித்தார். அங்கு கல்விபயின்ற 50 குரு மாணவர்களில் 13ஆவது மாணவராகத் தேர்வில் வெற்றிபெற்ற லெவேக்கு வயது அப்போது 22.

## தாயை இழந்த தனயனாய்.....

லெவே குருமடத்தில் படித்துக் கொண்டிருந்த அந்த நேரத்தில் அவரது தாய் ஜூலியானா கடும் நோய்வாய்ப்பட்டார். லெவேயும் தன்னை மிகவும் அன்பு செய்த தன் தாயைச் சந்திக்க விரும்பி மருத்துவமனைக்குச் சென்றார். அவருக்கு ஜெபங்களின் மூலம் ஆறுதல் மொழிகள் தந்தார். தாயின் நோய் முற்றிக் கொண்டே வந்தது. இருப்பினும் ஆதாரவற்ற சிறுகுழந்தைகளுக்கு அந்த நேரத்திலும் உதவிகள் புரிந்த தாயின் தயாள எண்ணத்தைக் கண்டு மிகவும் மகிழ்ந்தார் லூயிஸ் லெவே. இருப்பினும் தாயின் மரணம் அவரை மிகவும் உலுக்கியது. மீண்டும் நவதுறவு மடம் வந்து தன் பயிற்சியை மிகச் சிறப்பாக முடித்தார். இறையழைத்தல் அர்ப்பண தவ வாழ்வு பற்றியும் ஐயந்திரபறக் கற்றார். இந்தியா சென்று மறைப்பணி புரியவேண்டும் என்ற அவரின் வேண்டுகோள் ஏற்கப்பட்டு அதற்கான அனுமதி கிடைத்திடவே மிகவும் மகிழ்ந்து போனார். அந்த நாளை ஆவலுடன் எதிர்பார்த்தார். வீட்டிற்குச் சென்று சில நாட்கள் தங்கி அவர்களிடம் செல்லவிருக்கும் நாடு, பணிகள் பற்றிச் சொல்லி பெருமையாகப் பேசுவாராம் லூயிஸ் லெவே. சகோதர சகோதரிகளின் அனுமதி பெற்று 1908ஆம் ஆண்டு செப்டம்பர் 8ஆம் தேதி அங்கிருந்து இந்தியா நோக்கிப் புறப்பட்டார்.

**தந்தை லெவேயின் மூன்று பாக்கிய செல்வங்கள்**

1. திவ்விய நற்கருணை பக்தி
2. நற்செய்தி அறிவிக்கும் தாகம்
3. புனிதர்களின் முன்மாதிரிகையைப் பின்பற்றுதல்

# 2. பயிற்சியும் ஆன்மீக வேள்வியும்

## தண்ணீரில் விசாரித்த மரணம்:

மார்சல்ஸ் கப்பல்தளத்திலிருந்து புறப்பட்ட அந்தக் கப்பல் ஒரு மாத கடற்பயணத்திற்குப் பின்பு அக்டோபர் மாதம் 14ஆம் நாள் மும்பை துறைமுகம் வந்து சேர்ந்தது. மும்பையிலிருந்து புறப்பட்டுக் கொடைக்கானல் செண்பகனூர் திரு இருதய குருத்துவக்கல்லூரிக்கு வந்து சேர்ந்தார். அங்கே தத்துவஇயல் கற்க ஆரம்பித்தார். படித்துக்கொண்டிருக்கும்போது ஒரு நாள் தன் நண்பர்களுடன் பழனி மற்றும் பூம்பாறை பகுதிகளுக்குச் சுற்றுலா சென்றார். அங்கு ஓடிக் கொண்டிருந்த நீரோடையில் இறங்கி நீந்த ஆரம்பித்தார். நீச்சல் தெரியாத லெவே திடீரென்று ஒரு குழியில் மூழ்கிவிட தன் உயிருக்கு மிகவும் போராடினார். கை கால்களை உதறி அவர் தப்பிக்க வழி தேடினார். ஓடும் தண்ணீரின் வேகம் அதிகமாகயிருந்ததால் லெவேயை அக்குழியினின்று தூக்கிப் போட்டது வெள்ளம். மரணத்தின் வாசல் வரை சென்று திரும்பி உயிர் பிழைத்தார் லெவே. பாவக்குழியில் அனுதினமும் விழுந்து திளைக்கும் எண்ணற்ற பாவிகளை மீட்கவே அந்தத் தண்ணீர்க் குழியிலிருந்து லெவேயை இறைமகன் இயேசு மீட்டார் போலும்.

## தென்னிந்திய ஆக்ஸ்போர்டில் களப்பணிகள்:

தத்துவயியல் மிகச்சிறப்பாகப் படித்து இறையியல் கற்கப்போகுமுன் களப்பணி செல்லவேண்டுமென்ற இயேசுசபை ஒழுங்கின் காரணமாக தூய சவேரியார் உயர்நிலைப்பள்ளிக்கு அனுப்பப்பட்டார். 1912ஆம் ஆண்டு முதல் 1916ஆம் ஆண்டு வரை நான்காண்டுகள் அறிவியல் ஆசிரியராகவும் மாணவர் விடுதிக்காப்பாளராகவும் பணிபுரிந்தார். அந்த நான்காண்டுகளில் அவர் பெற்ற அனுபவங்கள் அளப்பரியன.

## மாணவர்களில் மனிதத்தை விதைத்தவர்:

பாளையங்கோட்டை புனித சவேரியார் பள்ளி உள் விடுதி மாணவர்களோடு இரண்டறக் கலந்து போனார். மாணவர்களோடு தமிழிலும் ஆங்கிலத்திலும் உரையாடுவார். தந்தையின் தமிழ்ப் பேச்சு மாணவர்களைப் பெரிதும் கவர்ந்தது. மாணவர்களோடு உரையாடுதல், அவர்களுக்கு அறிவுரை கூறி வழிகாட்டுதல், அவர்களுக்காகச் செபித்தல், அவர்களது உடல், அறிவு, ஆன்ம நலன்களில் அக்கறை காட்டுதல் ஆகிய பணிகளில் தன்னை ஈடுபடுத்தினார் தந்தை லெவே. இயேசுவிடம் நிறைவாக விளங்கிய பொறுமை, பரிவு, கனிவு, சாந்தம் ஆகிய நற்பண்புகளைத் தன்னிடம் கொண்டிருந்தார் லெவே.

அதனால் மாணவர்களும் அவரிடம் உரையாடுவதில் மிகவும் விருப்பமுடையவராயிருந்தனர். அவர்களிடமிருந்து தமிழ் மொழியைக் கற்க அவரும் இவரிடமிருந்து ஆங்கில மொழியைக் கற்க அவர்களும் விருப்பமாகயிருந்ததால் எப்போதும் அவர்களுக்கிடையே மிகுந்த நட்புறவு இருந்தது. மாணவர்களும் அவரிடம் அன்புடனும் பாசத்துடனும் மரியாதையுடனும் நடந்து கொண்டனர். எந்த மாணவரும் தந்தை லெவே மனம் வருந்தும் படி நடந்து கொண்டதில்லை. மாணவர்களைத் தன் கண்களில் வைத்துக் காத்து வந்தார் தந்தை லெவே. அவர்களின் ஆன்மநலன், உடல்நலன் ஆகியவற்றை உள்ளடக்கிய முழு மனித வளர்ச்சியை மாணவர்களிடம் கொண்டுவர முழு மனதுடையவராக இருந்தார் தந்தை லெவே. ஆகவே விளையாட்டு, கல்வி மற்றும் ஆளுமை வளர்ச்சிகளில் அதிக ஈடுபாடு கொள்ளும் மாணவர்களாக அவர்களை வளர்த்தார். தன்னிடமிருந்த 300 மாணவர்களையும் ஒன்பது குழுவாகப் பிரித்து அனைவரையும் விளையாட்டில் ஈடுபடுத்தினார். அடிக்கடி விளையாட்டுப் போட்டிகளையும் நடத்தினார். அதற்குரிய பரிசுகளையும் அவர்களுக்குக் கொடுப்பார். வெளிநாடுகளிலிருந்து தனக்குவரும் வாழ்த்து அட்டைகள், படங்கள் ஆகியவற்றை அவர்களுக்குப் பரிசாகக் கொடுக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்.

## கோடைகாலத்து அனலை விரட்டிய ‘ஆதவன்’ :

அங்கிருந்த நான்காண்டுகளிலும் கோடைக்காலங்களில்தான் துவண்டு போவாராம் தந்தை லெவே. ஏப்ரல், மே மாதங்களில் சுட்டெரிக்கும் வெயிலால், உஷ்ணமான காற்றால், கடுமையான வெயிலால் மிகவும் துன்பப்படுவாராம். விடுதியில் உள்ள 300 பேருக்கும் தேவைப்படும் தண்ணீர் போதுமான அளவு கிடைக்காதாம். குடிப்பதற்கு மட்டும் தண்ணீர் கிடைத்ததால் மாணவர்கள் நாள்தோறும் குளிக்க முடியாத சூழ்நிலை கண்டு வருத்தப்படுவாராம் தந்தை லெவே. நாள்தோறும் குளிக்க முடியாததால் மாணவர்களுக்கு ஏற்படும் தோல் நோய் கண்டு மனம் வெதும்புவாராம். ஏப்ரல் தொடங்கி அக்டோபர் வரை நீளும் இந்த நீண்ட வெயில் காலத்தினால் ஏற்படும் பாதிப்புகளை மாற்ற, இன்னும் தண்ணீர் பெற வேண்டியதைக் கருத்தில் கொண்டு பள்ளி வளாகத்தில் பெரிய கிணறு தோண்ட தேவைப்படும் நிதி கேட்டு நண்பர்களுக்குக் கடிதம் எழுதினார்.

## மாணவர்களைச் செதுக்கிய மனிதச் சிற்பி:

உள்விடுதியில் சிலசமயங்களில் மாணவர்களிடம் முரண்பாடு ஏற்படும் சமயங்களில் மிகவும் கவனமாக செயல் படுவாராம் அருள்தந்தை. சண்டைகளில் ஈடுபடும் மாணவர்களை அழைத்து அவர்களிடம் பேசி பிரச்சனைகளைத் தெரிந்துகொண்டு அதற்குரியத் தீர்வுகளையும் மாணவர்கள் மகிழும்படி

கூறுவாராம். மாணவர்களிடம் பேசும்போது எந்த சமயங்களிலும் கோபப்படாத உத்தம மனிதராக வாழ்ந்த அவர் பரிவு, பாசம், அன்பு, பொறுமை ஆகிய நற்பண்புகளோடு மாணவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் அருள்தந்தை. மாணவர்களின் குறைகளை மிகவும் பக்குவமாக எடுத்துச் சொல்லி அவர்களின் உயர்வுக்கு வழிவகுத்தார். அவர் அங்கிருந்த நான்காண்டுகளிலும் ஒட்டுமொத்த மாணவர்களின் அபிமானம் பெற்ற சிறந்த கண்காணிப்பாளர் என்று மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் மிகவும் பாராட்டப்பட்டார். பாளையங்கோட்டையில் இருந்தபோது அங்கு பணிபுரிந்த அருள்தந்தை கௌசானல் அடிகளாரைச் சந்தித்துப் பேசுவாராம். அவர்கள் இருவரும் திருஇருதய சபை தோற்றம், பணிகள் பற்றி அளவளாவுவார்களாம். அந்த அறிமுகம் தான் திருஇருதய சபை சகோதரர்களைத் தன் பணிக்கு அழைக்க உதவியது.

### இலட்சிய இயேசு சபை குருவாக தந்தை லெவே:

நான்காண்டுகள் களப்பயிற்சிக்குப் பின் இறையியல் கற்க இமயமலை அடிவாரத்தில் உள்ள கர்சியாங் என்ற இடத்திற்கு அனுப்பப்பட்டார். அங்கே தன் இறையியலைக் கற்றார். நான்காண்டுகள் இறையியல் படிப்புக்குப் பின் தந்தை லெவே குருவாக அருட்பொழிவு பெற்றார். தன் ஆசை நிறைவேறிய நாள் அந்த அருட்பொழிவு தான். தாய் மற்றும் ஒட்டுமொத்தக் குடும்பத்தின் ஆசையை அன்று நிறைவேற்றினார். அதுபோல சவேரியார் தந்த, அருளானந்தர் அளித்த ஆன்மீக உந்துதலால் இயேசுசபைக் குருவாக அருள்பொழிவு பெற்ற அருள்தந்தை லெவே தன் தணியாத் தாகத்தை அன்று தான் நிறைவேற்றினார். இயேசுசபை குருவானதற்குப் பின்னால் 1921 ஆம் ஆண்டு மதுரை சேசு சபை இல்லத்திற்கு அனுப்பப்பட்டார்.

# 3. ஆண்டாவூரணியில் ஆன்மீக அக்கினி

### தியாக தீபங்களை நெஞ்சில் ஏந்திய வீரம்:

இறைவனில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டதும் 1921 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் நாள் மக்கள் பணி செய்ய சிவகெங்கைச் சீமைக்கு வந்து சேர்ந்தார். அன்றைய காலத்தில் மறவநாட்டிலே விசுவாச விதை விதைத்த தன் முன்னோர்கள் வணக்கத்திற்குரிய தந்தை கிரிமினாலி, தந்தை அருளானந்தர் ஆகியோரின் வழிகளைப்பின்பற்றி சிவகெங்கைச் சீமையில் விசுவாசம் வளர்க்க தளராத மனதோடு அடியெடுத்து வைத்தார் அருள்தந்தை லூயிஸ் லெவே. இவர் இரு தியாகதீபங்களைத் தன் மனதில் நிறுத்தியவராய்த் தனக்கு அளிக்கப்பட்ட பங்கான ஆண்டாவூரணிக்கு வந்து சேர்ந்தார்.

## சமத்துவச் சூரியன் கட்டிய மனிதக்கோவில்:

மிகவும் பின்தங்கிய கிராமமாக இருந்தது ஆண்டாவூரணி. சாலை, குடிநீர், கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள் போன்ற வசதிகள் இல்லாத தன்னிறைவற்ற கிராமமாக இருந்தது ஆண்டாவூரணி. ஆண்டாவூரணி வடக்கூர், தெற்கூர் என்று இரு ஊராகி நின்றது. ஒவ்வொரு ஊரிலும் தனித்தனி கோயில்கள் 'பங்குத்தந்தை எந்த ஊருக்கு பூசை செய்ய செல்வது?' என்று ஓயாத சண்டைகளே அவ்வூரில் இருந்தது. இப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதே தன் முதல் பணி என்பதை முற்றிலும் உணர்ந்தவராய் செயல்படத்தொடங்கினார். இதையே மனதில் இருத்தி புனித குழந்தைத் தெரசாளிடம் மன்றாடினார். இவரின் தொடர் செபத்தில் மனமிரங்கிய புனிதை இவரின் கனவில் வந்து இவரைக் கரம்பிடித்து அழைத்துச் சென்று இரண்டு மலைகளுக்கு நடுவே ஒரு குறுகிய பாதையின் வழியாக வழிநடத்தி ஒரு சிலுவையின் அடியில் கொண்டுபோய் விட்டாராம். இந்த இடத்தில்தான் இரண்டு ஊர்களுக்கும் பொதுவாக கோவில் ஒன்றைக் கட்டினாராம். இதைத் தன் ஓய்வுகாலத்தில் சொல்லிச் சொல்லி இறைவன் திருவுளத்தைப் போற்றுவாராம். இயேசுவின் இதயத்தில் பற்றியெரிந்த ஆன்மீகத் தாகமும் மக்கள் மீது கொண்ட அன்பும் அருட்தந்தையை 'மக்கள் பணியாளராக வளர்த்தெடுத்தது. பங்கிற்கு உட்பட்ட அனைத்துக் கிராமங்களுக்கும் சென்று மக்களைச் சந்தித்தார். நற்செய்தி மதிப்பீடுகளின்படி மக்களை ஒருங்கிணைத்தார்'.

## குழந்தை தெரசாளின் பக்தி முயற்சிகள்:

1923ஆம் ஆண்டு ஏப்ரல் 29ஆம் நாள் ஆண்டாவூரணிக்கு அருகிலிருக்கும் ஒரு கிராமத்தில் குழந்தை தெரசாள் முத்திப் பேறு பெற்றதற்காக வழிபாடுகள் நடத்தி மக்களோடு செபித்தார். தந்தை லெவே குருமடத்தில் இருந்தபோதே புனித தெரசாளின் புனித வாழ்வை அறிந்திருந்தார். இறையன்பிற்காகவும் மக்களின் ஆன்மீக ஈடேற்றத்திற்காகவும், சிறிய காரியங்களிலும் மிகவும் நம்பிக்கையாகவும் இருந்த புனித தெரசாளின் மீது மிகுந்த பக்தி ஏற்பட்டது.

மரித்த சில நாட்களிலே தொடர் புதுமைகள் செய்த புனித தெரசாளின் மீது மிகுந்த பக்தி கொண்டு அவர் புனிதர் பட்டம் பெறுவார் என்று உறுதியாக நம்பினார். அதன்படி 1925 ஆம் ஆண்டு பாப்பரசர் 11ஆம் பத்திநாதர் குழந்தை தெரசாளுக்குப் புனிதர் பட்டம் கொடுத்தார். இதனால் அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. எனவே அவர் மக்களை ஒன்றினைத்து நற்கருணைப்பவனி நடத்தி நன்றி செலுத்தினார். தந்தை லெவே அவர்கள் குழந்தை தெரசாளின் மீது பக்தி வைத்திருந்தார். அவரின் திருவுருவப்படத்தை எப்போதும் தன்

செபப்புத்தகத்தில் வைத்திருந்தார். அதோடு அவர் பெயரில் சிற்றாலயங்கள் கட்டினார்.

சருகணியில் இருந்தபோது கூட குழந்தை தெரசாள் பீடத்திற்கு முன்புதான் தன் தினசரி திருப்பலியை நிறைவேற்றுவாராம். தான் இறந்த பின்பு குழந்தை தெரசாள் பீடத்தின் முன்புறம்தான் தன்னை அடக்கம் செய்ய வேண்டுமென்று விரும்பினாராம். அதுபோல் நிறைவேற்றும் எல்லாத் திருப்பலிகளிலும் குழந்தை தெரசாள் நோக்கி மன்றாடுவாராம். குழந்தை தெரசாளின் அருளிக்கம் ஒன்றைக் கழுத்தில் எப்போதும் அணிந்திருந்தார். புனித குழந்தை தெரசாள் மீது அளப்பரிய பக்தியை வைத்திருக்கும் தந்தை குழந்தை தெரசாள் பக்தியைப் பரப்பினார்.

## அறியாமை மற்றும் பெண்ணடிமையை நீக்கியப் பகலவன்:

சிறுவர் சிறுமியர்களைப் பக்தி, ஒழுக்கம் ஆகிய மதிப்பீடுகளில் வளர்த்தார். அவர்களுக்குக் கல்வி தந்திடல் வேண்டும் என்பதை மனதில் நிறுத்தியவராய் ஆண்டாவூரணியில் பனைமர ஓலையினால் எளிமையாக ஒரு பள்ளிக் கூடத்தைக் கட்டினார். பின் பலரின் உதவியுடன் புதிய கட்டிடம் ஒன்றையும் அமைத்தார். தந்தை லெவே 'பெண்ணடிமைத்தனம்' ஒழிய 'பெண்கல்வி அவசியம்' என்று உணர்ந்தவர். அவர்களுக்குக் கல்வி கொடுக்கத் தனியாகப் பள்ளியொன்றையும் அமைத்தார். தன்னுடைய எல்லாப் பணிகளிலும் பெண்களை முன்னிறுத்தினார். இந்தப் பணிகளை இன்னும் விரைவுபடுத்திட மதுரை அமலோற்பவ மாதா சபைக் கன்னியர்களை அழைத்து வந்து இப்பணிகளில் பங்குபெற வைத்தார். சகோதரியர்களும் அவரின் அழைப்பை ஏற்று வந்து தந்தையின் விருப்பப்படி கிராமங்கள் தோறும் சென்று நோயாளிகளுக்கு மருத்துவ சிகிச்சையும் அளித்தனர். வியாதியால் துயருறும் எல்லாருக்கும் வீடு வீடாய்ச் சென்று ஆறுதல் தந்தனர்.

இந்த அமலவைக் கன்னியர்களின் சேவையை விரிவுபடுத்தவேண்டி அவர்கள் தங்கிட 1929இல் உள்ளூரிலேயே அழகிய கட்டடம் ஒன்றைக் கனவில் தோன்றிய புனித குழந்தை தெரசாளின் வழிகாட்டுதலின் படி கட்டினார். 1937இல் ஏழை மாணவர்களுக்காக கருணை இல்லம் ஒன்றைக் கட்டி பெற்றோர்களை இழந்த குழந்தைகளை ஆதரிக்க ஆரம்பித்தார். தந்தையின் எல்லாப் பணிகளும் வெற்றிகரமாக நடந்து வந்தது. பெரியவர்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர் ஆகிய எல்லோரையும் விசுவாசத்தில் வளர்த்தெடுத்தார். மக்கள் அனைவரும் அவரின் அன்புமிக்க பேச்சிலும் பணிகளிலும் கட்டுண்டு கிடந்தனர்.

## விசுவாசப்பயிர் வளர்த்த வித்தகர்:

1941ல் புதிதாக மதுரைப் பேராயராகப் பொறுப்பேற்றார் ஆயர்களுள் 'அரிமா' எனப் போற்றப்பட்ட பேராயர் லெயோனார்டு ஆண்டகை. அருள் தந்தையின் ஆன்மீகப் பணிகளைப்பற்றி அதிகம் அறிந்த பேராயர் தன் முதல் பங்கு விசாரணையை ஆண்டாவூரணியில் தான் தொடங்கினார். தந்தை லெவே மற்றும் அருள் சகோதரிகளின் பணிகளை வியந்து பாராட்டினார் பேராயர். தந்தை லெவே நகரிகாத்தான், அறுநூத்தி வயல், கடம்பூர், நெடுமரம், குஞ்சங்குளம் சுக்கிராபுரம், நானாக்குடி, பாசாணி, சித்தாமங்கலம், சம்ப நெட்டி, கூகுடி, பிராந்தன் வயல், அரிமாத்தூர், இடைச்சிதம்பரம், சிறுநல்லூர் ஆகிய ஊர்களிலும் சிற்றாலயங்களை அமைத்து மக்களின் விசுவாச வாழ்வினை வளப்படுத்தினார்.

## காலரா நோயிலும் காலனை விரட்டியவர்:

1939ஆம் வருடம் ஆண்டாவூரணியிலும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் காலரா நோய் பரவியது. ஒவ்வொரு வீட்டிலும் இந்த நோய் தன் உக்கிரத்தைக் காட்டியபோது மிகவும் அச்சமடைந்தனர். தந்தை லெவே அவர்களுக்குக் காவல் தெய்வமாக நின்று காத்தார். தன்னையும் அந்த நோய் பற்றிக் கொள்ளுமோ? என்ற சந்தேகம் எதுவுமின்றி அஞ்சிடாத வீரத்தோடு மக்களைக் காப்பாற்றுவதிலே மிகவும் குறியாக இருந்தார். காலராவின் கொடுமையால் மூன்று நாட்களில் 66பேர் இறந்துபோயினர். நோயினால் தாக்கப்பட்டவர்களை வீடுகளில் கிடத்தி விட்டு மற்றவர்கள் ஊரைவிட்டுப் போய் விடுவார்களாம். தந்தை லெவே அவ்வீடுகளுக்குச் சென்று அம்மக்களைக் காப்பாற்றி வருவாராம். ஆண்டாவூரணியைச் சுற்றியுள்ள 15 கிராமங்களிலும் அந்த நோய் தன் கோரமுகத்தைக் காட்டியபோது மாட்டுவண்டியில் பயணித்து மழைக்காலங்களிலும் அங்கு சென்று மக்களைக் காத்து வருவாராம். செல்லும்போது வழிகளில், சகதிகளில் ஆழத்தில் அமிழ்ந்து வண்டிச் சக்கரங்களும் சிக்கிடும் போது வண்டியை விட்டு இறங்கி அவரே வண்டிச் சக்கரத்தைப் பிடித்துத் தள்ளி வண்டியை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவாராம். இந்தச் செயல் தந்தையை மக்கள் மனதில் மிகவும் உன்னத நிலைக்கு உயர்த்தியது.

## விவசாயிகளின் நண்பன்:

வானம் பார்த்தத பூமியான இப்பகுதியில் மக்கள் மழையில்லாமல் கஷ்டப்பட்டபோது, விரும்பி அழைத்த மக்களின் வேண்டுகோளின் படி கண்மாயில் இறங்கி வேண்டுவாராம். அருள்தந்தை காலடிபட்டால் கண்மாயே நிரம்பும் என்று மக்களும் உறுதியாக நம்பினர். மழையில்லா நேரங்களில் பள்ளி மாணவ மாணவியரோடு சேர்ந்து ஊரின் நடுவில் செபித்துக் கொண்டே

நடப்பாராம். அப்போதெல்லாம் ஊரில் மழை பெய்யும். ஊருணியும் நிறைந்து மக்களின் உள்ளமும் குளிரும். நிலத்தை மக்கள் உழுது பயிரிட்டு களையெடுத்துவரும் நேரத்தில் பூச்சிகள் தாக்கி பயிர்கள் வாடும் போதெல்லாம் ஒரு பனைஓலையில் இலத்தீன் செபம் எழுதி அதை மந்திரித்துஅதை விவசாயிகளிடம் அளித்து வயலின் நடுவே சிலுவைக்கம்பு நட்டு அதில் செப ஓலையைக் கட்டி புனித நீரைத் தெளிக்கச் சொல்வாராம். அடுத்த நாளே பூச்சிகள் ஒழியும்.

## கால்நடைகளையும் காக்கும் கருணைக்கடல்:

கால்நடைகளுக்கு நோய் எதுவும் வந்துவிட்டால் தந்தை லெவேயிடம் அழைத்து வருவார்களாம் விவசாயிகள். கால்நடை மருத்துவரிடம் அழைத்துச் சென்றறியாத மக்கள் அருள்தந்தை லூயிஸ் லெவே மீது மிகவும் நம்பிக்கை வைத்திருப்பார்களாம். இப்போதும் கூட மழையில்லாக்காலங்களிலும் வயலில் பூச்சிகள் விழும் போதும், கால்நடைகளுக்கு நோய்கள் ஏற்படும் போதெல்லாம் தந்தை லெவேயின் செபத்தையும் கருணையையும் எதிர்பார்க்கின்றனர்.

## ஓரியூர் திருத்தலத்திற்கு மகுடம் சூட்டிய மகான்:

இன்று ஆண்டு தோறும் மதுரை மறைமாவட்டத்திலிருந்தும் சிவகெங்கை மறைமாவட்டத்திலிருந்தும் திருயாத்திரை செல்லும் வழக்கத்தைத் தொடங்கி வைத்தவரே தந்தை லூயிஸ் லெவேதான். 1693 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 4ஆம் நாள் அருளானந்தர் நற்செய்தி மதிப்பீடுகளுக்காக ரத்தம் சிந்தி உயிர் விட்டார். அருளானந்தரின் திருத்தலமான ஓரியூர் ஆண்டாவூரணியிலிருந்து சுமார் 6கி.மீ தொலைவில் உள்ளது. 1929ஆம் ஆண்டில் ஓரியூர் ஆண்டாவூரணிப் பங்கின் ஆளுகைக்குள் வந்தது. இயேசுவுக்காகத் தன் இன்னுயிரை ஈந்த அருளானந்தர் உயிர் துறந்து 250 ஆண்டுகளாகியும் இன்னும் புனிதர் பட்டம் தரப்படவில்லையே என்றெண்ணி வருந்தினார். எனவே அருளானந்தருக்கு புனிதர் பட்டம் கிடைக்க வேண்டி அனைத்து மக்களையும் அவர் உயிர்துறந்த ஓரியூரில் ஒருங்கிணைய வைத்துச் செபிக்கவும் அவரின் வல்லமையால் புதுமை நிகழுவதை எல்லோரும் காணவும் வழி வகை செய்தார். மக்கள் கூடும் கூட்டங்களிலெல்லாம் அருளானந்தரின் புனிதம் பற்றிப் பேசலானார். மக்களும் அவரின் மறையுரையை விரும்பிக் கேட்டனர். ஆண்டாவூரணியிலிருந்து இறைமக்களை திருயாத்திரையாக ஓரியூருக்கு அழைத்து வரும் பழக்கத்தை உருவாக்கினார். ஆராதனை, தியானம் போன்ற பக்தி முயற்சிகளை ஆரம்பித்தார். ஒப்புரவு அருட்சாதனம், நற்கருணைப் பவனி ஆகிய பக்தி முயற்சிகளை நடத்தி மக்களுடனே இரவில் தங்கியிருந்து காலைத்திருப்பலிக்கு முன் தன் பங்கு இல்லம் செல்வாராம். இவ்வாறு பலபங்கு

மக்களை ஒன்று கூட்டி இவர் நடத்திய இத்திருயாத்திரையைப் பேராயர் லெயோனார்டு பெரிதும் பாராட்டினார். இந்த முயற்சி இன்றும் தொடருவது தந்தை லெவேக்குக் கிடைத்த வெற்றியாகும். தொடர் செபம் வெற்றிபெறும் என்பது போல் தந்தை லெவேயின் இந்த ஆன்மீக முயற்சியின் காரணமாக 1947 ஆம் வருடம் ஜூன் 22ஆம் தேதி அருளானந்தர் புனிதராக அறிவிக்கப்பட்டார். இந்த அறிவிப்பு 22 ஆண்டுகளாக ஆண்டாவூரணியில் பணியாற்றி இராமநாதபுரத்திற்கு பணி மாற்றலாகிச் சென்ற தந்தை லெவேக்கு இன்ப அதிர்ச்சி தந்தது.

## புனித வாழ்வின் புடம் போட்ட தங்கமென....

தான் பங்குத்தந்தையாக இருந்த சமயத்தில் அனைத்து மக்களும் புனித வாழ்வு வாழவேண்டுமென்று விரும்பி அதை நடைமுறைக்குக் கொண்டுவர பல முயற்சிகளை மேற்கொண்டார். அதற்கு இந்தச் சம்பவம் எடுத்துக்காட்டாய் அமையும்.

அவ்வூரில் கிறிஸ்தவக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மனிதர் கிறிஸ்தவ போதனைகளுக்கு எதிராக வாழ்ந்து வந்தார். திருப்பலி காண்பதில்லை. தவறான பழக்க வழக்கங்கள், ஊதாரித்தனமான வாழ்வு, திருமணம் முடிந்து குழந்தைகள் பிறந்த பின்பும் பெண்கள் பலரோடு சகவாசம். இதனால் கிறிஸ்தவ வாழ்வைத் தொலைத்தவராய் வாழ்ந்த தன் கணவனைத் திருத்த முடியாமல் அவதிப்பட்ட அவர் மனைவி ஒருநாள் தன் இல்லத்தில் முன்பு அழுதுகொண்டிருந்ததைப் பார்த்த அவர், ‘என்னம்மா! ஏன் அழுகிறாய்? என்ன சிரமம்?’ என்று வினவினார். தந்தை கேட்டதும் இதயத்திலுள்ள கவலைகளை ஒன்று திரட்டி கண்ணீர் விட்டவளாய், சுவாமி என் கணவன் இப்போது எங்களோடில்லை ‘இந்நிலை நீடித்தால் நான் தற்கொலை செய்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை’ என்றாள். தந்தையும் அமைதியாகச் செல். உன் கணவனை நான் திருத்தி விடுகிறேன் என்று சொல்லி வழியனுப்பினார். பின் தன் உதவியாளர் மூலம் அம்மனிதனை அழைத்து வரவிரும்பினார். சுவாமி அழைத்ததும் உடனடியாக வந்தவனிடம் தந்தை அன்பாகப் பேசி நீ மனந்திரும்பி பொறுப்புள்ள மனிதனாக வாழ வலியுறுத்தினார். உன மனந்திரும்புதலுக்காக நான் மன்றாடுகிறேன்’ என்று சொல்லி அனுப்பினார். சுவாமியின் வார்த்தைகள் அவனை ஊடுருவிச் சென்றன. திருந்தி வாழ்வதாக உறுதியளித்துச் சென்ற அவனால் திருந்தமுடியவில்லை. இருப்பினும் அவரது குரல் அவனின் மனதில் எதிரொலித்துக் கொண்டிருந்தது. திருந்தாத அவனை மீண்டும் தன் இல்லத்திற்கு வரவழைத்தார். வந்தவனை நிற்க வைத்துத் தன் மேலாடையைக் கழற்றி ஒரு கசையைக் கையிலெடுத்து அக்கசையால் தன்னைத் தானே ஓங்கி அடித்தார். கசையடிச்சத்தம் கேட்டவன் தந்தையைப் பார்த்தபோது தந்தையின் தோள்பட்டையிலிருந்து ரத்தம் வடிய ஆரம்பித்தது. ‘அடிக்காதீங்க!

சுவாமி! உங்களையே ஏன் அடித்துக் கொள்கிறீர்கள்' என்று கேட்டான். தன்னுடைய கைகளை இறுகப் பிடித்துக் கொண்டு அழுத அந்த மகனை உற்று நோக்கி, 'நீ உனது பாவ வழிகளை விட்டு மனம் திரும்ப வேண்டும் என்று செபித்துக் கொண்டிருந்தேன். நீ திருந்தவில்லை. உனக்காக நான் ரத்தம் சிந்தினால் தான் நீ திருந்துவாய் என்றால் அதற்கும் தயார்' என்று அமைதியான குரலில் பேசினார். லெவே சுவாமியின் கரங்களைப் பற்றிக் கொண்டு சுவாமி மன்னிச்சிடுங்க. இனிமேல் எப்பாவமும் செய்யமாட்டேன். நல்ல கிறிஸ்துவனாக வாழ்வேன் என தந்தையிடம் உறுதியளித்தார். அவனை இரக்கநாயகி மாதா சுரூபத்தின் முன் அமர வைத்து அவனுக்கு பாவமன்னிப்பு வழங்கினார்.

## தொடர் பணிக்கு ஒரு தடை: பணிமாற்றம்:

இருபத்திரெண்டாண்டுகள் ஆண்டாவூரணியின் வளர்ச்சியில் தன்னைக் கரைத்து மக்கள் பணியாற்றியவர் ஊர் மக்களுக்கு உற்றத் துணையாய் உறவினராய், நண்பராய், வழிகாட்டியாய் விளங்கினார். இத்தொடர்பணி தந்தையின் உடல் நலத்தைக் கெடுத்தது. 60 வயதைத் தொட்டுவிடவும் ஓரளவு வசதியான வாழ்க்கை வாழவும் அக்காலத்தில் வசதிகள் நிறைந்த இராமநாதபுரம் பங்கிற்கு 1943 ஆம் ஆண்டு மாற்றப்பட்டார். தந்தையின் அளப்பரியப் பணிகளையும் அவர் ஆற்றிய அருந்தொண்டுகளையும் கண்ணுற்ற ஆண்டாவூரணி இறைமக்கள் கண்ணீரும் கம்பலையுடன் தந்தை லெவேயை இராமநாதபுரம் பங்கிற்கு அனுப்பி வைத்தனர்.

## தந்தை லெவேயின் பிரியமிகு புனிதர்கள்

1. புனித லூர்தன்னை
2. புனித அருளானந்தர்
3. குழந்தை இயேசுவின் புனித தெரசாள்

# 4. முகவை மண்ணில் மனிதப் புனிதர்

## இராமநாதபுரம் : ஊரின் பின்னணி

இராமநாதபுரம் சரித்திரப்புகழ் வாய்ந்த ஒரு ஊர். அக்காலத்தின் மறவர் பூமியின் தலைநகராக இருந்தது. மன்னர்கள் தலைநகராக வைத்து ஆண்ட ஊர். அக்காலத்திலே வசதிகள் நிறைந்த ஊராகவும் இருந்தது. இவ்வூரில் புனித அருளானந்தரும் தொடக்கக் காலத்தில் தங்கி பணிபுரிந்திருக்கிறார். அருளாநந்தருக்கு மரணத்தண்டனையும் இங்கே தான் வழங்கப்பட்டிருக்கிறது. அதுபோல் 16ஆம் நூற்றாண்டில் புனித சவேரியாரால் மனந்திரும்பப்பட்ட கிறிஸ்துவர்களான வாரிசுகளும் இங்கே வாழ்ந்துவந்தனர். இலங்கைக்குச் செல்பவர்களும் இவ்வழியாகத் தான் செல்ல வேண்டும். இவ்வூரில் 20,000 பேர் வாழ்ந்து வந்தனர். அதில் 200 பேர் மட்டுமே கிறிஸ்துவர்கள். மற்றவர்களெல்லாம் இந்துக்களும், பிரிந்த சபை சகோதர்களும் தான். கடற்கரைக் கிராமங்களில் ஓரளவு முஸ்லீம் மக்களும் வாழ்ந்து வந்தனர். இத்தகு ஒரு வித்தியாசமான சூழலில் இராமநாதபுரத்திற்குப் பணிபுரிய ஆன்மீக வேட்கையுடனே வந்தார் தந்தைலெவே.

## பணிகளில் மக்களே மையம்:

இராமநாதபுரம் கடல் வாணிபத்திற்குப் பெயர் பெற்ற ஊர். இங்கு வரும் வணிகர்கள் தங்கிக் கொள்ள கோயிலுக்கு அருகேயே சில அறைகளைக் கட்டி அவர்கள் தங்கிக் கொள்ள வசதிகள் செய்துகொடுத்தார். இவரின் இந்தச் செயல் வணிகர்களின் மத்தியில் மிகப்பெரிய வரவேற்பினைப் பெற்றுத் தந்தது. அக்காலத்தில் ராஜா தினகர் பின் தங்கிய குழந்தைகளுக்கென ஒரு பள்ளியைக் கட்டத் தொடங்கினார். ஆனால் கட்டி முடியும் முன் மன்னர் இறந்துவிட, அவரின் துணைவியார் மேரி நாச்சியார் கட்டிடத்தைக் கட்டி முடிந்து கிறிஸ்துராஜா தொடக்கப்பள்ளி என்று பெயரிட்டார். இதைப் பெற்றுச் சிறப்பாக நடத்திட விரும்பினார். தந்தை லெவே. எனவே மன்னர் குடும்பத்திற்கு நெருக்கமான நண்பரும் கப்பல் தலைவருமான திரு மிக்கேல் கோமக அவர்களைச் சந்தித்து ஆசையைத் தெரிவித்தார். மக்கள் நலத்தில் அக்கறை கொண்ட மன்னரும் இந்த விருப்பத்திற்கு இசைவு தெரிவித்து அப்பள்ளியை தந்தை லெவே அவர்களிடம் அளித்தார். 1944ல் அப்பள்ளிக்கு ராஜா M. தினகர் ஆர்.சி. பள்ளி என்று பெயரிட்டு பள்ளியைச் சிறப்பாக நிர்வகிக்க ஆரம்பித்தார். அப்பள்ளியை அமலவைக் கன்னியர்களின் சிறப்பான நிர்வாகத்தில் அளிக்க விரும்பி அக்கன்னியர்களை இராமநாதபுரத்துக்கும் வரவழைத்தார். அவர்கள் தங்குவதற்குக் கோயிலுக்கு அருகில் திரு. மிக்கேல் கோமக அவர்களின் உதவியுடன் இடம் வாங்கி அழகியதொரு இல்லமும் கட்டுவித்தார். பள்ளியும் வளர்ச்சிகாண ஆரம்பித்தது.

பெண்களின் சிறப்பான வளர்ச்சிக்கான தனியாக பள்ளி ஒன்றையும் ஆரம்பித்து அதையும் அவர்களின் நிர்வாகத்தில் அளிக்க விரும்பினார். இரண்டு நிர்வாகத்தையும் ஒரு சேர நிர்வகிக்கத் தயங்கினர். எனவே சிறப்பான கல்விப்பணியாற்றுவதற்காகத் தனக்கு பாளையங்கோட்டையில் களப்பணிப்பயிற்சியின் போது அறிமுகமான திருஇருதய சபைச் சகோதரர்களை அழைக்க விரும்பினார். தந்தையின் அழைப்பை ஏற்ற சபையின் தலைவர் சகோ. ஆஞ்சலோ அவர்களின் வழிகாட்டுதலின்படி திருஇருதயசபைச் சகோதரர்கள் இராமநாதபுரத்திற்கு வந்தனர். கல்விப் பணியோடு நற்செய்தி அறிவிப்புப்பணிகளையும் சிறப்பாகச் செய்யும் அவர்கள் தந்தை லெவேயோடு சேர்ந்து உழைக்க ஆரம்பித்தனர். கல்வியிலும் விளையாட்டிலும் மிகச் சிறப்பானதொரு இடத்தைப் பெற்றது அப்பள்ளி. அவர்கள் தங்குவதற்கும் அழகிய இல்லம் ஒன்றை திரு மிக்கேல் கோமசு அவர்களின் ஆதரவோடு கட்டினார். இவ்வளவு கல்விப்பணிகளை மிகவும் ஆர்வத்தோடு செய்திட்ட தந்தை லெவே பெயரில் பள்ளியில் சிறப்பான கலையரங்கம் ஒன்றையெழுப்பி அதற்கு தந்தை லெவே கலையரங்கம் என்று பெயரிட்டனர்.

## நற்செய்தி மாநாடுகளின் பிதாமகர் தந்தை லெவே:

தந்தை லெவே இறைமக்களைச் சந்திப்பதிலும் அவர்களின் ஆன்மீக காரியங்களில் சிறப்பாக உதவுவதிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டார். நற்செய்தி மதிப்பீடுகளை மறையுரைகள் மூலம் நாள்தோறும் அவர்களுக்கு அளிப்பார். 1950ல் நற்செய்தி மாநாடு ஒன்றை மிகச்சிறப்பாக நடத்தி முடித்தார். மறைமாவட்டத்திலிருந்து மிகத் திரளாக வந்த அனைவருக்கும் அனைத்து வசதிகளையும் திரு. மிக்கேல் கோமசு அவர்கள் மூலம் செய்தளித்தார். நற்செய்தி மாநாடுகளின் முன்னோடி என்று இதனால் தான் இன்றும் தந்தை லெவே போற்றப்படுகிறார்.

## நற்செய்தி மதிப்பீடுகளை மக்களின் மனதில் நட்டவர்:

தந்தையின் ஆன்மீகப் பணிகளும் இறைவாழ்வும் மிகவும் போற்றுதற்குரியது. ஞாயிற்றுக்கிழமை காலை இராமநாதபுரத்தில் திருப்பலி நிகழ்த்திவிட்டு சுற்றியுள்ள கிளைப் பங்குகளில் திருப்பலி நிறைவேற்ற 20கி.மீ தூரமுள்ள கிராமங்களுக்கும் நடந்தே செல்வாராம். செல்லும்போது கையில் ஜெபமாலையைச் செபித்துக் கொண்டே செல்வாராம். வெயில், குளிர் எந்த நிலைகளிலும் மிகுந்த மகிழ்ச்சியுடனே நடந்து கொண்டும் மக்களைச் சந்தித்துக் கொண்டும் செல்லும் அருள்தந்தை லெவேயின் வருகையை எண்ணி கிராமங்களில் மக்கள் காத்துக் கிடப்பார்களாம். கிராமங்களில் மக்களைச் சந்தித்தவுடன் அவர்களை பாவமன்னிப்பு வழிபாட்டிற்குத் தயாரிப்பாராம். பின்

திருப்பலி நிறைவேற்றி நற்செய்தி மதிப்பீடுகளை மக்களை தன் மறையுரை மூலம் அளிப்பார். திருப்பலி முடிந்து குடும்பங்களைச் சந்திக்க ஆரம்பித்து நோயாளிகளுக்கு நன்மை வழங்கி மக்களின் மகிழ்ச்சியில் பங்குபெற்று மீண்டும் இராமநாதபுரம் நோக்கி நடந்து பகல் 1 மணியளவில் தன் இல்லம் செல்வார். ஞாயிற்றுக்கிழமைகளில் சுற்றியுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் நடந்து சென்று மக்களைச் சந்திக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தவர் தந்தை லெவே. தன்னிடம் பயிற்சிக்காக அனுப்பப்படும் குரு மாணவர்களையும் தன்னுடனே அழைத்துச் சென்று தன் வாழ்க்கையையே அவர்களுக்குப் பயிற்சியாக்கினார்.

## ஆன்மீகம் நிமிர்ந்து நின்றது!

1950 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 12ஆம் தேதி இராமநாதபுரம் பங்கின் பாதுகாவலியாம் ஜெபமாலை அன்னைக்குத் திருவிழா எடுத்தார். ஒன்பது நாள் நவநாள், மறையுரை, அன்னையின் திருவுருவப்பவனி என்று பல வழிகளிலும் ஆன்மீக ஒளியை அளித்தார். இவ்விழாவிற்கு எல்லாக்கிராமங்களிலும் இருந்து சாதி மத பேதமின்றி மக்கள் பெருந்திரளாகக் கூடுவர். அன்னையின் திருவுருவப்பவனியில் மதபேதமின்றி எல்லாமக்களும் கலந்து கொண்டு கரம் கூப்பித் தொழும் அபூர்வக் காட்சியும் நடைபெறும். ஆன்மீக எழுச்சி பெற்றது இராமநாதபுரம் பங்கு.

## கண்ணீர் விட்டுக் கதறிய நெஞ்சம்:

1953ல் முதிர்ந்த வயதில் உழைத்து வந்த தந்தை லெவேக்கு உதவிபுரிய சேசுசபைத் தந்தை அருள்திரு. அராங்கோ அனுப்பப்பட்டார். தந்தை அராங்கோவும் தந்தை லெவேயின் மனதறிந்து அவருக்குப் பணிகளில் உதவினார். ஏழை மக்கள், கைவிடப்பட்டோர், பெண்கள் ஆகியோரின் வாழ்க்கையை முன்னேற்றுவதற்கு திட்டங்கள் பலவற்றைத் தீட்டி அவற்றிற்கெல்லாம் நிதியுதவி பெறுவதற்காகத் தன் தாய் நாடான கொலம்பியா சென்றார். அங்கு நடந்த ஒரு விபத்தில் சிக்கி அருள்தந்தை அராங்கோ இறந்தபோது தந்தை லெவே கண்ணீர் விட்டுக் கதறினார். தந்தையின் நட்பையும் பாசத்தையும் எண்ணி எல்லோரும் வியந்து போயினர்.

## கடலோர மக்களின் காவலர் தந்தை லெவே:

கடலில் மீன் பிடித்துப் பிழைக்கும் ஏழை மீனவர்க்கு வலையும், படகும் வாங்கப் பொருளுதவி செய்வார். அவர் ஆசீர் பெற்றுக் கடலுக்குச் சென்றால் நிறைய மீன் கிடைக்கும் என்பது கடற்கரை மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. மக்களின் அன்றாடத் தேவைகளையும் மிகவும் அறிந்து

வைத்திருந்தார் அருள்தந்தை லெவே. மதுரைப் பேராயர் இல்லத்திலிருந்து பெறப்படும் கோதுமை, பால்மாவு, எண்ணெய் ஆகிய உணவுப் பொருள்களை ஏழை எளிய மக்களுக்குப் பகிர்ந்தளிப்பார். கடலோர மக்களின் காவலராகவே வாழ்ந்தார் தந்தை லெவே.

## விடுதலைப் பணியின் விளை நிலமாய் தந்தை லெவே:

சுரண்டிக் கொழுக்கும் பண்ணையார்களின் பிடியில் இருந்து மக்களைக் காக்கும் பணிகளையும் நிறைய செய்திருக்கிறார். இந்த விடுதலைப் பணியில் அவர் நெஞ்சுரத்தோடு எதிர் நிற்பதற்கு அவரின் ஆன்மீகப் பலமே காரணமாக இருந்திருக்கிறது. சித்தார்கோட்டை என்ற கிராமத்துப் பண்ணையாரிடம் கிறிஸ்தவர்கள் பலர் கொத்தடிமைகளாக இருந்திருக்கிறார்கள். அதையறிந்த தந்தை லெவே அவர்களை அழைத்து அவர்களின் துயரக் கதைகளைக் கேட்டார். வாங்கியகடனை அடைக்க முடியாததால் கொத்தடிமைகளாகிப் போன அவர்களின் பரிதாப நிலை கண்டு வருந்தினார். அவர்களை மீட்க எண்ணி அவர்களின் கடன் விபரங்களை அறிந்து அந்தத் தொகையை பணக்காரர்களிடம் வசூலித்து பண்ணையாரிடம் கொடுத்து மக்களை விடுவிக்க எண்ணினார். இந்தச் செயலை செய்வதற்கு முன்பு பேராயருக்கு தெரிவித்துவிட்டு நற்கருணை முன்பு நீண்ட நேரம் செபித்தார். பணம் கொடுக்கப்பட்டவுடன் மக்கள் பண்ணையாரிடம் வேலைக்குச் செல்லவில்லை. இதையறிந்த அந்தப் பணக்காரர் தந்தை லெவே மீது கோபம் கொண்டான். தந்தை லெவேயைக் கொன்று போட்டால் மீண்டும் மக்களை வேலைக்கு அழைத்துச் செல்லலாம் எனக்கருதி கடற்கரை பக்கம் தந்தை லெவே வரும் போது அவரைப் பிடிக்க கடற்கரையில் ஒரு பெரிய குழியை வெட்டி அரிவாளோடு காத்திருந்தான். இந்தச் சதித் திட்டம் பற்றி தந்தை லெவேக்கு அறிந்திருப்பினும் தைரியமாக தனியாகத் திருப்பலி முடித்து நடந்து வந்தார். கரங்களில் ஜெபமாலையோடு நடந்து வந்த தந்தையைத் தூரத்திலே பண்ணையார் பார்த்து விட்டான். வீரமாக அரிவாளைத் தூக்கிக் கொண்டு நின்றவன் தந்தையை மிக அருகே பார்த்தவுடன் கைகள் நடுங்க அரிவாள் கீழே விழுகிறது. அருகே வந்த தந்தை 'என்னைக் கொன்று விடு, மக்களை வாழவிடு' என மன்றாடினார். அவன் அப்படியே அவரின் காலில் விழுந்து மன்னிப்பு வேண்டினான்.

## பிஞ்சு மனதில் விழுந்தது நல் விதை:

திருப்பலி நிறைவேற்றும் போது எல்லோரும் தொடக்கம் முதல் பங்கெடுக்க வேண்டும் என்று தந்தை விரும்புவார். கிராமங்களில் திருப்பலி முடித்து விட்டு பங்கு இல்லம் நோக்கி வரும்போது விளையாடும் குழந்தைகளைக் கூட்டிச்சென்று நற்கருணையை சந்தித்து செபம் சொல்லி பின் ஓய்வு எடுக்கச்

செல்வதை வழக்கமாக வைத்திருந்தார். ஒரு முறை தெருக்கள் வழியாக நடந்து வரும்போது விளையாடிக் கொண்டிருந்த சிறுமிகளைக் கோயிலுக்குள் அழைத்தாராம். விளையாடிக் கொண்டிருந்த ஒரு சிறுமி 'நான் செபிக்க வரவில்லை. வீட்டிலே போய் செபிப்பேன்' என்று சொன்னாளாம். அவளைப் பார்த்து தந்தை 'நீ வீட்டிலிருக்கும் போது உன் அம்மாவிடம் பசிக்கிறது.' என்கிறாய் வெளியே பிச்சைக்காரன் ஒருவன் 'அம்மா! பசிக்கிறது' என்கிறான். 'உன் அம்மா என்ன செய்வார்கள்?' என்றார். 'என் அம்மா எனக்கு உணவு கொடுப்பார்கள். பிச்சைக்காரனுக்கும் சிறிது உணவு கொடுப்பார்கள்' என்றாள் 'நீ சொல்வது சரிதான். நீ கோயிலுக்குப் போய் கேட்கும்போது கடவுள் நிறைய கொடுப்பார். வீட்டில் போய் செபிக்கும் போது கொஞ்சமாகத்தானே கொடுப்பார்!' என்றார். சுவாமி லெவே. மறுகணம் ஓட்டமும் நடையுமாய் கோவிலுக்குள் விரைந்தாள் சிறுமி!

## கடல் கொந்தளிப்பைக் கையமர்த்தியவர் தந்தை லெவே:

மீனவர்கள் மீது மிகுந்த வாஞ்சையுடன் இருந்தவர் தந்தை லெவே. அவர்கள் தந்தையைத் தங்களின் படகில் ஏற்றிச் செல்ல வேண்டும் என்றும் அவர் வந்தால் தங்களுக்கு நிறைய மீன்கள் கிடைக்கும் என்றும் உறுதியாக நம்பினர். அவர்கள் அவரிடம் கேட்டபோது தந்தையும் சம்மதித்தார். மீனவர்களும் மிகுந்த சந்தோசமடைந்தனர். தந்தையைப் படகில் ஏற்றிய மீனவர்கள் மகிழ்ச்சியோடு கடலில் படகைச் செலுத்தினார்கள். நீண்ட நேர பயணத்திற்குப் பின் 'அப்பத்தீவு' என்ற இடத்திற்குத் தந்தையை கூட்டிச் சென்றனர். தந்தையும் அந்தத் தீவின் இயற்கை அழகைக் கண்டு ரசித்தார்; மகிழ்ந்தார். அத்தீவிலிருந்து திரும்பும் போது பெரும் இடியுடன் மழை பெய்ய ஆரம்பித்தது. காற்றும் பலமாக வீசியதால் கடல் கொந்தளிப்பு ஏற்பட ஆள் உயரத்திற்கு அலையெழும்பி படகு முழுவதும் தண்ணீர் நிறைய படகு மூழ்க ஆரம்பித்தது. மீனவர்கள் மிகவும் அஞ்சினர். அந்த இடமும் நீரோட்டம் அதிகமுள்ள இடமாக இருந்ததால் யாரும் பிழைக்க முடியாது என்பதைத் தந்தையிடம் வருத்தமுடன் கூறினர். 'யாரும் அஞ்சவேண்டாம்; அமைதியாக இருங்கள்' என்று கூறிவிட்டு தந்தை லெவே வானகத்தந்தையிடம் செபிக்கத் தொடங்கினார். என்னே ஆச்சரியம்! கடல் கொந்தளிப்பு நின்றது. காற்றும் ஓய்ந்தது.

## விளம்பரம் விரும்பாத விசால மனதுக்காரர்:

1955 ஆம் ஆண்டு தந்தை லெவே தேவிபட்டினம் என்ற ஊருக்குத் திருப்பலி நிறைவேற்றச் சென்றார். கடும் மழை மூன்று நாட்களாகத் தொடர்ந்து பெய்தது. பெருவெள்ளம் தெருக்களில் பெருக்கெடுத்து ஓடியது. இதனால்

இராமநாதபுரம் மக்களை நினைத்து கண் கலங்கினார். இராமநாதபுரம் பெரிய கண்மாய் நடு இரவில் உடைந்தது. பேரிரைச்சலோடு ஊருக்குள் தண்ணீர் புகுந்தது. உறங்கும் மக்களை எழுப்பிக் காப்பாற்ற வேண்டும் என்று கருதி இருதயம் என்பவர் கோவில் மணியை விடாமல் அடித்தார். மணியோசை கேட்டு விழித்த மக்கள் தண்ணீர் பெருகி வருவதை அறிந்து பாதுகாப்பான இடத்திற்குச் சென்றனர். வெள்ளப்பெருக்கிற்குத் தப்பிய மக்கள் கோவில் மணி தானாக அடித்துத் தங்களைக் காப்பாற்றியதாக நினைத்தனர். இச்செய்தி மறுநாள் செய்தித்தாளிலும் வந்தது. 'இது தந்தை லெவேயின் பக்தியால் விளைத்திட்ட புதுமை' எனப் பேசிக்கொண்டனர். ஆனால் உண்மையில் நடந்ததை மக்களுக்குத் தெரிவிக்க விரும்பினார். எனவே ஞாயிறு திருப்பலியில் மறையுரையின்போது மணி தானாக அடிக்கவில்லை. அது இருதயம் அவர்களின் செயல்தான் என்பதைத் தெரிவித்தார். தன்னை மக்கள் புகழ்ந்து பேசுவதை விரும்பாத எளிய மனதுக்குச் சொந்தக்காரர் தந்தை லெவே.

## நிம்மதி தொலைத்த தவ மனிதன்:

இராமநாதபுரத்தில் பங்குத்தந்தையாய் இருந்தபோது திருப்பலி முடிந்து நோயாளிகளுக்கு நன்மை வழங்க வீடுகளுக்குச் செல்வதை வழக்கமாக வைத்திருந்தார். ஒரு நாள் நோயாளி ஒருவரின் வீட்டிற்குச் சென்றபோது நற்கருணை இருந்த சிமிழைக் காணவில்லை. 'காணவில்லை' என்றவுடன் அவர் இதயம் சுக்கு நூறாகிப் போனது. வந்தவழியேச் சென்று தேடினார். கிடைக்கவில்லை. நிம்மதியிழந்து போனார். உண்ணவில்லை, உறங்கவில்லை. பேராயர் அவர்களுக்கு நற்கருணைச் சிமிழைக் காணவில்லை என்று கடிதம் எழுதினார். இதற்குப் பரிகாரமாக நாள்முழுதும் மக்களுடன் சேர்ந்து நற்கருணை ஆராதனை செய்யுமாறு பேராயர் கடிதம் அனுப்பியிருந்தார் அதன்படி நாள் முழுவதும் நற்கருணை வழிபாட்டை நடத்தினார் தந்தை லெவே. மக்களும் அதிக அளவில் கலந்து கொண்டு நற்கருணை நாதரைப் புகழ்ந்தேத்தினார். இதற்குப் பிறகுதான் தந்தையின் மனம் நிம்மதியடைந்தது.

## நீதியும் தலை வணங்கிய அதிசயம்:

தந்தை லெவே அவர்களின் புனித வாழ்வை எல்லோரும் அறிந்திருந்தனர். கிறிஸ்தவரல்லாதவர்கள் கூட தந்தை லெவேயைக் 'கடவுளின் தூதர்' என்றே அழைத்தார்கள். ஒருமுறை நீதிமன்ற நீதிபதியின் ஆலோசனை தந்தை அவர்களுக்குத் தேவைப்பட்டது. நீதிமன்றம் சென்ற அவர் 'நீதிபதியைக் காண வேண்டும்' என்று கேட்டுவர ஆள் அனுப்பினார். தந்தையை அழைத்து வருமாறு நீதிபதி சொல்ல தந்தை லெவே நீதிமன்றம் உள்ளே சென்றார். அங்கே

வழக்கறிஞர்களுடன் விவாதித்துக் கொண்டிருந்த நீதிபதி விவாதத்தை நிறுத்தி எழுந்து சென்று தந்தைக்கு வணக்கம் செய்தார். அனைத்து வழக்கறிஞர்களும் எழுந்து சென்று தந்தையை வணங்கினர். நீதிபதியும் தந்தை லெவேயைத் தன் அறைக்கு அழைத்துச் சென்று தந்தைக்குத் தேவையான உதவியைச் செய்து அனுப்பினார். இந்நிகழ்ச்சி கிறிஸ்தவரல்லாத மக்களிடம் தந்தை லெவேக்கு இருந்த மரியாதையை எடுத்துக்காட்டுவதாக இருந்தது.

## கண்ணெனக் காத்து நின்ற காவல் தெய்வம்:

இராமநாதபுரம் மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் வாழும் விவசாயிகள் தந்தை லெவேயின் ஆசீரைப் பெற்றுத்தான் வயல் வேலைகளைச் செய்வார்கள். பூச்சிகள் விழுந்து அறுவடை பொய்த்த போதெல்லாம் வருத்தமடைந்தனர். தந்தை லெவேயை வயல்வெளிக்கு அழைத்துச் சென்று செபம் செய்து புனித நீரால் மந்திரித்து பனை ஓலையில் லத்தீன் செபம் எழுதி வயலின் நடுவே சிலுவைக் கம்பு நட்டு அந்த ஓலையை அதில் கட்டச் சொல்வார். பயிர்கள் நோய்நீங்கி பசுமை பெற்றது. மகிழ்ச்சியுடன் அறுவடை செய்தனர். தந்தையின் புனிதம் கண்டு அவரைப் போற்றினார். வானம் பொய்த்து விட வறட்சி ஏற்படும் போதெல்லாம், குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டபோதெல்லாம் அன்றாட வாழ்வை மக்கள் நடத்திட முடியாமல் சிரமப்பட்டபோதெல்லாம் அவர்களுக்கு வள்ளலாய் நின்று குடும்பங்களைக் காத்தார். அவர்களுக்கு உதவ வேண்டி வெளிநாட்டு நண்பர்கள் பலருக்கு கடிதம் எழுதி அவர்களுக்கு உதவுவார். விதவைப் பெண்கள பலர் ஆதரவற்ற நிலையில் வாடிய போதெல்லாம் அவர்களைக் காத்து நின்று உதவிகள் செய்வார். இப்படி எல்லோரையும் தன் கண்மணிபோல் காத்து நின்ற காவல் தெய்வமாக விளங்கியவர் தந்தை லெவே.

## தாழ்ச்சியின் தாழ்வாரம்:

தாழ்ச்சியின் தாழ்வாரமாக விளங்கியவர் தந்தை லெவே. ஒருநாள் இரவு தந்தை தன் அறைக்குமுன் கட்டிலில் உறங்கிக் கொண்டிருந்தார். ஒருவர் ஓடிவந்து தந்தையை எழுப்பி ஒருவருக்கு நோயில் பூசுதல் அருள்சாதனம் வழங்க வருமாறு தன்னுடன் அழைத்தார். நடு இரவிலும் எந்த வித மறுப்பும் கூறாமல் அவருடன் சென்றார். திருவருட்சாதனத்தை வழங்கிவிட்டு மறுபடியும் இல்லம் வந்த பார்த்தபோது தான் படுத்த இடத்தில் வேறொருவர் படுத்திருந்ததைப் பார்த்தபோது வருத்தமோ, எரிச்சலோ அடையாமல் எந்தவித விரிப்புமின்றி வெறுந்தரையில் கையைத் தலையணையாகக் கொண்டு படுத்து உறங்கினார். கட்டிலில் படுத்திருந்த நபர் விழித்தெழுந்து தான் செய்த தவறுக்காக மன்னிப்பு வேண்டி வருந்தி நின்றார். தந்தை புன்முறுவலுடன் அவரை அமைதிப்படுத்தினார். இது தான் தந்தை லெவேயின் தியாகம்.

### கண்ணீர் மல்க பிரியாவிடை:

பதின்மூன்றாண்டுகள் செய்த அரும்பெரும் பணிகளுக்குப் பின் ஓய்வு தந்திட வேண்டி, தந்தை லெவேயை ஓய்விற்காகச் சருகணிக்கு அனுப்பினார் பேராயர். இராமநாதபுரம் பங்கில் இருந்து மக்கள் கண்ணீர் மல்கி விடைகொடுக்க அப்பணித்தளம் விட்டுப் பிரிந்து புதிய இடமான சருகணிக்கு வருகிறார் மாமனிதப்புனிதர்.

# 5. சருகணியின் சாகாத சரித்திரம்

### பட்டுப் பாதங்கள் பாக்கியமானவை!

தந்தை லெவே தன்னுடைய பணி வாழ்வின் இறுதிக் கட்டத்தினைச் சருகணியிலே தான் கழித்தார். சருகணி அக்காலத்தில் மதுரை மறைமாவட்டத்தின் முக்கிய இறைத்தலமாக இருந்தது. கிராமமாக இருந்தாலும் போக்குவரத்து வசதிகள் நிறைந்த ஊர். எனவே இந்தச் சிறிய ஊரில் தனது ஓய்வு நாட்களைக் கழிக்க வேண்டி சருகணியில் பாதம் பதித்தார்.

### குருக்களையும் வழிநடத்திய ஞானத்தந்தை:

சருகணி மறைவட்டத் தலைமையகமாக இருந்தபடியால் மாதமொரு முறை முதல் வியாழனன்று மறைவட்ட குருக்கள் சருகணியில் கூடுவர். மாலை வரை கூட்டங்கள், செபங்கள், திருமணி ஆராதனைகள் ஆகியவற்றில் குருக்கள் ஈடுபட்டு இருப்பர். குருக்களின் தியானமும் அவ்வப்போது இங்கு நடக்கும். பேராயர் ஜஸ்டின் திரவியம் ஆண்டகையும் அடிக்கடி இங்கு வருவார். தந்தை லெவேயின் மறையுரை தவறாது இருக்கும். குருக்களின் புனித வாழ்வு, ஆன்மீகப் பணிகள் பற்றி விளக்கமாக குருக்களுக்கு எடுத்துச் செல்வார். மாலை நேரம் ஒப்புரவு அருட்சாதனம் வழங்குவார். நற்கருணை ஆசிரையும் நிறைவாய் வழங்குவார். விரும்பும் குருக்களோடு உரையாடி ஆன்மீகத் தனால் பற்றி எரியச் செய்வார். தந்தை லெவேயின் வழிநடத்துதல் வேண்டுமென்பதற்காகவே சருகணியில் இப்படி பலநிலைகளில் ஆன்மீகப் பயிற்சிகளை மறைமாவட்டமும் மறைவட்டமும் ஏற்பாடு செய்து நடத்தும்.

### பாதைகள்தோறும் ஆன்மீக நடவுகள்:

தந்தை லெவே வந்தநாள் முதல் தன்னுடைய பணிகளை ஆரம்பித்து விட்டார். சருகணியைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு மாலையில் புறப்பட்டு விடுவார். செக்ககுடி, புலியடிதம்மம், உச்சாணி, மேக்காரைக்குடி, நெட்டேடை

ஆகிய ஊர்களுக்குச் சென்று திருப்பலிகள் நிகழ்த்துவார். இல்லங்களைச் சந்தித்து மக்களோடு அளவளாவி மக்களின் ஆன்மீகக் கடமைகளில் உதவினார். தனது அருளானந்தர் பக்தியை விட்டாரில்லை. பொன்னொளிக்கோட்டை என்ற கிராமத்தில் அருளானந்தர் பெயரில் ஒரு சிற்றாலயம் கட்டினார். அடிக்கடி சருகணியிலுள்ள மாணவ மாணவியரைப் பொன்னொளிக் கோட்டைக்கு அழைத்துச் சென்று அருளானந்தர் பக்தி முயற்சிகளை வளர்த்தார். ஒவ்வொரு ஊருக்கும் செல்லும்போது மக்களைத் திருப்பலிக்குத் தயாரிப்பார். பின் ஒப்புரவு அருட்சாதனம் வழங்குவார். திருப்பலி முடிந்து நோயாளிகளைச் சந்திப்பார். அவர்களுக்கு ஆறுதல் மொழிகளையும் அளிப்பார். எளிய வாழ்க்கை, குள்ள உருவம், ஜெபவாழ்வு இக்கலவையான தந்தை லெவே சருகணி மக்களின் புனிதராக மாறிப் போனார்.

## ஓய்வுக்கும் ஓய்வளித்த தந்தை லெவே:

எங்கு சென்றாலும் வாகனங்களைப் பயன்படுத்தமாட்டார். மாறாக நடைபயணம்தான். ஒருமுறை நாகமத்தி என்ற கிராமத்திற்குச் சென்று சருகணி நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தார். தீராத களைப்பின் காரணமாக அவரால் தொடர்ந்து நடக்கமுடியவில்லை. சோர்வின் காரணமாக சாலையின் ஓரத்திலிருந்த ஒரு பாலத்தில் அமர்ந்தார். யாராவது சைக்கிளில் வந்தால் அவர்களின் உதவியோடு சருகணிக்குச் சென்று விடலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தார். அப்போது ஒரு கார் வந்து அவரருகில் நின்றது. கதவைத் திறந்து தந்தையைக் காருக்குள் வந்து அமரச் சொல்லி ஒருவர் அழைக்க, அவர் யாரென்று தந்தை லெவே பார்த்தார். அவர்தான் இயேசுசபை மறைமாநில தலைவர் அவர்கள். ஓய்வு எடுக்க அனுப்பியவர் இப்படித் தன்னை வருத்திக் கொள்கிறாரே என்று தலைவர் கடிந்து கொள்வார் என எதிர்பார்த்தார் தந்தை லெவே. ஆனால் எந்தவிதப் பேச்சுமில்லாமல் சருகணி இல்லம் வந்து தந்தையை இறக்கிவிட்டார்.

## புதுமையை நிகழ்த்திக் காட்டிய புனிதம்:

தந்தை லெவே தன் தவ வாழ்க்கையால் நிறைய புதுமைகளைத் தன் வாழ்க்கையிலேயே நிகழ்த்திக் காட்டியிருக்கிறார்.

★ கோவில்பட்டியில் உள்ள ஆர்.சி. தொடக்கப்பள்ளியில் சிறிய புஷ்பம் என்ற ஆசிரியை பணியாற்றினார். அவருக்குச் சில ஆண்குழந்தைகள். கடைசியாகப் பிறந்தது பெண்குழந்தை. அக்குழந்தை நோயால் பீடிக்கப்பட்டு சாகும் தருவாயில் இருந்தது. ஏராளமான பணம் செலவு செய்தும் கூட என்ன நோய் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. நாக்கு இழுத்துக் கொண்டது. புத்தியும் பேதலித்துப் போனது. பேச்சு இழந்து ஊமையாகிப் போனது. படுத்த படுக்கையில் கிடந்த அப்பெண்குழந்தையைப் பார்த்து கண்ணீர் வடித்தாள் அந்தத்தாய். அந்த நேரத்தில்

தந்தை லெவேயைப் பற்றிக் கேள்விப்பட்டு சருகணிக்கு குடும்பத்தோடு வந்தார்கள். சருகணியிலே லெவேயைப் பார்த்து விட்டு ஓரியூர் சென்று விட்டு வேளாங்கண்ணி செல்லவேண்டும் என்ற திட்டத்தோடு தந்தை லெவேயைச் சந்தித்தார்கள். கண்ணீர் வடித்து தந்தை லெவேயின் முன்னே முழந்தாள் படியிட்டார்கள். அவர்களைச் செபம் செய்யச் சொல்லி குழந்தையை ஆசீர்வதித்து அக்குழந்தையின் நெற்றியிலே சிலுவை அடையாளம் வரைந்து 'உங்கள் குழந்தை நாளை பேசுவாள் என்று உறுதியாகச் சொன்னார். அவர்களும் ஓரியூர் சென்று விட்டு அடுத்த நாள் வேளாங்கண்ணி சென்று திருப்பலியில் கலந்து கொண்டார்கள். ஆண்டவரே இரக்கமாயிரும் என்ற பதில் பாடலை எல்லோருடனும் சேர்ந்து அவளும் சொல்ல, அப்பெற்றோர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை.

## அசுத்த ஆவியை விரட்டிய அருளாளர்:

1972 ஆம் வருடம் இறுதியில் நடந்த மற்றொரு புதுமையும் தந்தை லெவேயின் புகழை இன்னும் பறைசாற்றிக்கொண்டிருக்கிறது.

சருகணிக்கு அருகில் மினிட்டாங்குடி என்ற குக்கிராமம் இருக்கிறது. அங்கே வாழ்ந்த வாலிபர் ஒருவர் பெற்றோர்களுடன் சண்டையிட்டு விரக்தியடைந்து பக்கத்துக் கிராமமான அங்கலாங்கோட்டை என்ற ஊரின் வயல்வெளியிலிருந்த ஒரு கருவேல மரத்தில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். இதனால் இந்த இரு கிராமங்களில் இருந்த மக்களிடையே அச்சமும், பீதியும் இருந்தது. அவ்வூருக்கு ஒரு குறி சொல்லும் கோடாங்கி வந்து இறந்தவனைப் பற்றித் தெரிந்துகொண்டு 'இந்த ஊரில் இரண்டு சாவுகள் விழப்போகிறது. தற்கொலை செய்தவரின் ஆவி ஊரில் அலைந்து கொண்டிருக்கிறது'. என்று குறி சொன்னான். ஊர் மக்கள் அனைவரும் பயந்து போயினர். 'ஜக்கம்மா பெயரில் பூசை செய்தால் இந்த ஆவி ஓடிவிடும் அதற்கு பணம் நிறைய செலவாகும்' என்றும் சொன்னான். இதைப்பற்றி விசாரிக்க ஊர்க்கூட்டம் கூட்டப்பட்டது. கருவேலமரம் உள்ள வயல்காரர் பாதிப்பணத்தையும் ஊர் மீதிப் பணத்தையும் கொடுத்து பூசை செய்யலாம் என்று முடிவு செய்யப்பட்டது. திரு. ஞானபிரகாசம் என்ற வயலுக்குச் சொந்தக்காரரிடம் இந்த முடிவு சொல்லப்பட்டது. ஏற்றுக்கொள்ளாமல் தந்தை லெவேயை அழைத்து வந்து இந்த ஆவியை விரட்டி விடுகிறேன் என்று சவால் விட்டார். சருகணிக்குச் சென்று தந்தையை அழைத்து வரலாம் என்று புறப்பட்டபோது தந்தை லெவே இறந்த செய்தி கேட்டு மிகவும் வருத்தமடைந்தார் இருப்பினும் சருகணி சென்று தந்தை லெவேயின் கல்லறைமுன் நின்று மனமுருக மன்றாடினார். பின் வெளியே சென்று ஒரு மரத்தால் சிலுவை ஒன்றைச் செய்து சுவாமியின் கல்லறையில் வைத்து 'நீங்கள் தான் எங்களுக்குத் துணையாக இருக்க முடியும்' என்று பக்தியோடு வேண்டிநின்றார். பின் அந்த சிலுவையை வயலில் நட்டு வைத்தார். இதைக்

கேள்விப்பட்ட கோடாங்கியும் தந்தை வெவேயின் சக்தியை உணர்ந்து ஊரை விட்டு வெளியேறினான். மக்களுக்கு இருந்த பயம் நீங்கி மக்கள் மிக மகிழ்ச்சியுடன் இருந்தனர்.

## அவளை விட்டு விடுங்கள்:

ஒரு நாள் இரவுப் பொழுது ஊரே அமைதியாய் உறங்கிக் கொண்டிருந்தது. இருள் சூழ்ந்த அந்த நேரத்தில் ஒரு இளம் பெண் தந்தையின் இல்லம் வந்து 'எனக்கு உதவி செய்யுங்கள்' என்றார். கனிந்த இதயத்தோடும் கருணைப் பார்வையோடும் புன்னகை முகத்தோடும் இரவென்றும் பாராமல் தந்தை லெவே அவர்கள் உதவி செய்ய விரும்பினார். ஒரு கடிதம் ஒன்றினை எழுதி கையில் பதினைந்து ரூபாயும் கொடுத்து அருகிலுள்ள வியாகுல மாதா மடத்தில் கொண்டுபோய் விடுமாறு தன்னுடைய பீடச் சிறுவன் யாகுவிடம் பணித்தார். பீடச் சிறுவனும் அப்படியேச் செய்தான்.

அங்கு சென்று தங்கிய இளம் பெண் அதிகாலையில் எழுந்து மடத்திலிருந்த ஆளுயர செம்பு அண்டாவைத் திருடிச் சென்றுவிட்டாள் என்பதை வயல்வெளிக்குச் சென்ற வாத்தியார் மூலம் ஊரேத் தெரிந்து கொண்டது. ஊர் மக்கள் திரண்டு சென்று அண்டாவை மீட்டு திருடிய இளம் பெண்ணை ஊரின் நடுவிலுள்ள லந்தர்கல்லில் கட்டி வைத்து அடித்துத் துன்புறுத்தினர். கண்ணீர் பெருக்கெடுத்து உடலெல்லாம் காயங்களுடன் நின்ற அக்காட்சியை 'புலியடி தம்மம்' என்ற ஊருக்கு ஞாயிறு திருப்பலிக்குச் சென்று திரும்பிய தந்தை கண்ணுற்று மனம் கலங்கியவராய்ச் சுற்றி நின்றவர்களை நோக்கி 'அவளை விட்டு விடுங்கள்'என்று கட்டளையிட்டார். மக்களும் அவ்வாறே செய்தனர். அவள் தந்தையிடம் சென்றாள். தந்தை லெவே அவளிடம் 'ஏன் இப்படிச் செய்தாய்? என்று கேட்டார்.' அவள் தான் செய்த தவறுக்கு மன்னிப்பு வேண்டி, 'இனிமேல் இத்தகு தவறினைச் செய்யமாட்டேன்' என்று உறுதியும் தந்தாள். அன்று முதல் திருந்திய பெண்ணாய் கத்தோலிக்க மறையை ஏற்று திருமுழுக்குப் பெற்று உணர்வுள்ள கிறிஸ்தவளாய் வாழத்தொடங்கினாள்.

## ஆன்மீகப் பகலவன்:

ஒரு ஞாயிற்றுக்கிழமை சருகணி ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றிக் கொண்டிருந்தார். பூசைக்கு நிறைய பேர் தாமதமாக வந்து கொண்டிருந்தனர். பூசை முடிவில் தந்தை லெவே மக்களை நோக்கி, 'இன்று ஞாயிற்றுக்கிழமை எல்லோரும் முழுப் பூசை காண வேண்டும். இப்போது தாமதமாக வந்தவர்கள், எல்லோரும் நான் வெள்ளிகட்டி சென்று பூசை வைக்கும் போது அப்பூசைக்கு வரவேண்டும்' என்று சொன்னார். சமையலறைக்குச் சென்றவர் தன்னுடைய

உதவியாளரைப் பார்த்து 'நீ முழுப் பூசை கண்டாயா?' என்று கேட்டார். 'இல்லை சுவாமி! உங்களுக்கான காபி தயாரிக்க பூசைக்கு இடையிலே வெளியே வந்து விட்டேன்' என்று கூறினார். 'அப்படியானால் நீ என்னோடு வா! வெள்ளிகட்டி பூசைக்கு' என்று அழைத்துச் சென்றார். திருப்பலிக் கொண்டாட்டத்தில் அவருக்கிருந்தது அத்துணை ஈர்ப்பும், விருப்பமும்.

## குருத்துவப் பொன்விழா நாயகர்:

1970 ஆம் ஆண்டு ஜனவரி 13ஆம் நாள் தந்தை லெவே குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட பொன்விழா நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் கலந்துகொள்ள தந்தையின் அண்ணன் மகள் அருள்சகோதரி மரியடி சேசு பிரான்சு தேசத்திலிருந்து வந்திருந்தார். அவரை அழைத்துக் கொண்டு பேராயர் ஜஸ்டின் திரவியம் அவர்களும் சருகணிக்கு வந்தனர். பிரான்சிலிருந்து வந்ததற்குப் பின்னால் அறுபத்திரண்டு ஆண்டுகளாக தாயகம் பார்க்காத ஒரு தனிப் பெருங்குரு என்றால் அது தந்தை லெவேயாகத்தானிருக்க முடியும். அவரின் மனம் தன் அண்ணன் மகளைக் காண மிகுந்த ஆவலாக இருந்தது. இருபால் துறவியரோடும் பொதுமக்களோடும் காத்திருந்தார். பேராயரின் கார் வந்து நின்றதும் தந்தை லெவே பேராயருக்கு முன் மண்டியிட்டு மோதிரத்தை முத்தஞ்செய்து வணங்கி அவரை வரவேற்றார். தந்தையின் அண்ணன் மகள் காரை விட்டு இறங்கித் தன் சித்தப்பாவை மிகுந்த ஆசையோடு பார்த்தார். தந்தை லெவேயும் தன் அண்ணன் மகளைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தார். அருள் சகோதரி தன் சித்தப்பாவுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். குருக்களும் கன்னியரும் பொது மக்களும் பேராயரையும் அருள் சகோதரி மரியடிசேசுவையும் வாண வேடிக்கை முழங்க, மேள தாளங்கள் ஒலிக்க வரவேற்று ஆலயத்திற்குள் அழைத்துச் சென்றனர். புலியடிதம்மம் என்ற ஊரிலும் தந்தையின் பொன்விழாவை மக்கள் சிறப்பாகக் கொண்டாடினர். இதற்காக எல்லோரும் புலியடிதம்மம் வந்து திருப்பலியில் பங்கு கொண்டு தந்தை லெவேயை வாழ்த்தினர். அண்ணன் மகளும் 'இந்நிகழ்ச்சி மறக்க முடியாதது' என்று தெரிவித்தார். தன் அண்ணன் மகள் தன்னோடு இருந்த இரண்டு மாதத்தில் தான் பணியாற்றிய எல்லா இடங்களுக்கும் அழைத்துச் சென்று காட்டினார். இரு மாதங்களுக்குப் பின் தாயகம் திரும்பினார் அவரின் அண்ணன் மகள். அவர் பிரான்சுக்குத் திரும்பிச் சென்றபின் தந்தை லெவேயின் உடல்நலம் குன்றத் தொடங்கியது.

## தந்தையின் அன்றாடப் பணிப் பொறுப்பு:

சருகணிப் பகுதியில் தான் புனித அருளானந்தரால் மனந்திரும்பப்பட்ட தலைமுறையினர் பலர் வாழ்ந்து வந்ததை தந்தை லெவே அவர்கள் எண்ணி அவர்களுக்கு உழைப்பதே தன் தலையாய பணி என்று நம்பினார். வறுமை,

பஞ்சம், இயற்கை இடர்ப்பாடுகள், பணியாளர் பற்றாக்குறை இவற்றால் சோர்வுற்றுப் போன அவர்களின் ஆன்மீக வாழ்வில் புதுக்காற்றினைப் புகவைத்தவர் தந்தை லெவே.

- ★ அதிகாலை 4.30 மணிக்கு தம் பாதுகாவலர் புனித குழந்தை தெரசாளின் பீடத்தில் இலத்தீனில் தனித்திருப்பலி நிறைவேற்றுவாராம்.

- ★ 7.30 மணி வரை தியானம் செய்வார். இல்லத்திலிருந்து ஆலயம் வரும்போதும், திரும்பும் போதும் இடையில் இருக்கும் லூர்தன்னைக் கெபிக்கருகில் நின்றும் தியானிப்பார்.

- ★ காலை உணவுக்குப்பின் மாலை 5மணிவரை மக்களின் நேரமாகக் கருதப்படும். தன்னைக் காணவரும் மக்களைச் சந்தித்து அவர்களின் தேவைகளையும், ஆசைகளையும் பூர்த்தி செய்வார். நோயாளிகள் மேல் கைவைத்து செபித்தல், பூச்சிகள், எலித்தொல்லை முதலியவைகளிலிருந்து விடுபட பனை ஓலை செபம் எழுதி மந்திரித்து கொடுத்தல், கால்நடைகளை மந்திரித்தல், பல நேரங்களில் இல்லங்கள் சென்று மந்திரித்தல், தீயசக்திகளுக்காக உபவாசமிருந்து செபித்து விரட்டல், பள்ளி, கல்லூரி, ஆசிரியர் பயிற்சி, செவிலியர் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புகளுக்காக சிபாரிசு கடிதம் எழுதுதல், ஒப்புரவு அருட்சாதனங்களை நிறைவேற்றுதல் அருட்பணியாளர், அருட்சகோதரிகளுக்கு வழிகாட்டுதல், நெறிப்படுத்துதல் மற்றும் ஞான ஒழுக்கம் தருதல், தனக்குப் பரிசாகக் கிடைத்த தானியங்கள், உடைகள் பணம் ஆகியவற்றை கேட்டு வருவோருக்குப் பகிர்ந்தளித்தல், இல்லங்கள் சென்று மக்களைச் சந்தித்தல், மக்கள் இல்லாத சமயங்களில் நற்கருணைப் பேழை முன் செபித்தல், செபமாலை சொல்லுதல், ஞான வாசகம் வாசித்தல், நேரம் இருந்தால் சிறிது கண் மூடி ஓய்வு எடுத்தல் இப்படியாகத் தன் நேரத்தை மக்களுக்காகச் செலவிடுவதையே வழக்கமாகக் கொண்டிருந்தார்.

- ★ பொதுவாக மாலை 5 மணியளவில் உபதேசியார் மற்றும் பீடச்சிறுவன் ஆகியோருடன் நடக்க ஆரம்பித்து செக்ககுடி, புளியடிதம்மம், உச்சாணி மேக்காரைக்குடி, நெட்டோடை, செட்டியேந்தல் ஆகிய சிற்றூர்களுக்கு நடந்து செல்வார். கிராமங்களுக்குச் செல்லாத நாட்களில் மாலை 6 மணிக்கு ஒப்புரவு அருட்சாதனம் வழங்க ஆரம்பித்து விடுவார்.

- ★ தந்தை லெவே செபவாழ்வில் நல்ல ஈடுபாடு கொண்டிருந்தார். மின் விளக்கொளி மங்கலாக இருந்ததால் முக்காலி மேல் ஏறி பல்பினருகே நின்று

கொண்டு, கட்டளைச் செபம் சொல்வதும் இவருக்கு வழக்கமாகவே இருந்தது.

## தந்தை லெவேயின் சிலுவைப்பாடுகள்:

தந்தை லெவே தேவகோட்டை தேபிரித்தோ உயர்நிலைப் பள்ளியிலுள்ள உள்விடுதி மாணவர்களுக்கு பாவசங்கீர்த்தனம் கேட்க வருவது வழக்கம். ஒருமுறை அவ்வாறு வந்து தங்கியிருந்த போது மாடிப் படிகளில் தடுக்கி விழுந்தார். வலதுகை எலும்பு முறிந்தது. திண்டுக்கல் புனித வளனார் மருத்துவமனையில் நாற்பத்தைந்து நாட்கள் சிகிச்சை பெற்றார். மற்றொருமுறை சருகணி இல்லத்தில் தனது அறையில் படுத்திருந்தபோது படுக்கையிலிருந்து விழுந்து மறுபடியும் இடதுகை எலும்பு முறிய, ஒருமாதம் சிகிச்சை பெற்றார். மூன்றாவது முறையாக மதுரைக்கு வந்து பேராயர் இல்லம் சென்று விட்டு ஊர் திரும்பிட மதுரை சிம்மக்கல் பேருந்து நிறுத்தத்தில் நின்றார். பேருந்தில் ஏற முயன்றபோது கால் சறுக்கி விழுந்து, வலக்காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. ஆறுமாதம் திண்டுக்கல் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். இப்படி மூன்று முறை விழுந்து எழுந்தது இயேசு நடந்து சென்ற கல்வாரிப் பாதையை நினைவுபடுத்துகிறதல்லவா?

## ஆன்மீக வழிகாட்டி:

தான் இறந்த பின்பு தன் கல்லறையைப் புனித தெரசாள் பீடத்தின் முன்புறம், லூர்தன்னை கெபியில் எதிரே அமைக்க வேண்டுமென அவரே விரும்பி ஒரு மண்வெட்டியால் சிறுகுழி தோண்டி அங்கே தன்னை அடக்கம் செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டது, அவர் அன்னை மீதும், புனித குழந்தை தெரசாள் மீதும் கொண்டிருந்த அன்பைக் காட்டும்.

**தந்தை லெவேயைக் கவர்ந்த இயேசு சபைப் புனிதர்கள்**

1. வணக்கத்திற்குரிய அந்தோணி கிரிமினாலி
2. புனித சவேரியார்
3. புனித அருளானந்தர்

# 6. தந்தை லெவேயின் இறுதி நாட்கள்

## நற்செய்தி தூதுவன்:

குருத்துவப் பொன்விழா கொண்டாடியதற்குப் பின் அவரது உடல்நலிவுற்றது. கை கால்கள் எல்லாம் வீங்கின. முன்பு போல கிராமங்களுக்கு நடந்து செல்ல முடியவில்லை. இருப்பினும் கிராம மக்களின் அன்றாட நடவடிக்கைகளையும் ஆன்மீக வாழ்க்கையையும் மற்ற குருக்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வார். அவருக்கு உதவி செய்வதற்காக ரோசாரி, மற்றும் அருளானந்தர் என்ற திருஇருதய சபை சகோதரர்கள் உதவி செய்தனர். அந்நிலையிலும் திருப்பலி நிறைவேற்ற, நற்கருணைப் பேழையைச் சந்திக்க தந்தையை நாற்காலியில் வைத்து கோவிலுக்குக் கொண்டு செல்லும் நிலையேற்பட்டது. 1972ஆம் ஆண்டு பிரான்சுக்கு எழுதிய கடிதத்தில் தந்தை லெவே 'என் வாழ்நாள் முழுவதும் நற்செய்தியின் தூதனாகவே' வாழ்ந்து வந்துள்ளேன். இப்போது என்னால் பார்க்கவோ நடக்கவோ முடியவில்லை. எனது மரணம் 1973ஆம் ஆண்டில் நிகழும். அப்போது இறைவன் திருவடி சேர ஆவலாய் உள்ளேன்' என எழுதியிருந்தார். தனது மேற்பார்வையில் தானே தன் கல்லறைக் குழியியைத் தோண்டி மந்திரிக்கவும் செய்தார்.

## விண்ணகம் சென்ற தேவ தூதன்:

1973 ஆம் ஆண்டு பிப்ருவரி மாதம் தந்தை லெவேயின் உடல்நலம் மிகவும் மோசமானது. சருகணிக்கு வடக்கே 3கி.மீ தொலைவிலுள்ள ஆரோக்கிய நகரில் புனித வியாகுல அன்னை சகோதரிகள் நடத்திய மரியன்னை மருத்துவமனையில் தந்தையைச் சேர்த்தார்கள். தந்தையரைச் சகோதரியர் மிகவும் கவனமாகப் பார்த்துக் கொண்டனர். இருப்பினும் உடல் நலத்தில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. அங்கேயே இருக்க அவர் விரும்பவில்லை. தனது உயிர் பிரியப் போவதை அறிந்த அவர் அப்போது சருகணியில்தான் இருக்க வேண்டும் என எண்ணினார். தன்னைச் சருகணிக்குக் கொண்டு செல்லுமாறுக் கேட்டுக் கொண்டார். 1973ஆம் ஆண்டு மார்ச் 20ஆம் நாள் தந்தை மிகுந்த சிரமத்தோடு தனது இறுதித் திருப்பலியை நிறைவேற்றினார். அப்போது முற்றிலும் நினைவிழந்தவராகக் காணப்பட்டார். அவரைச் சக்கர நாற்காலியில் வைத்து இல்லத்திற்குக் கொண்டு வந்தனர். தந்தையின் இறுதி நேரம் நெருங்கிவிட்டதை உணர்ந்த தந்தையர்கள் பகல் 2.20 மணிக்கு அவருக்கு நோயில் பூசுதல் வழங்கினர். பகல் மூன்று மணியளவில் தந்தை பிரான்சு நாட்டிற்காகவும், என் அண்ணன்

மகளின் சபைக்காகவும் விண்ணகத்தில் செபிப்பேன் என்று கூறினார். பின்னர் 'பிரான்சு, பிரான்சு, பிரான்சு' என்று மும்முறை கூறினார். பின்னர் தந்தையின் நெருங்கிய நண்பர் அருள்தந்தோ வோஅடிகள் தந்தையின் காதருகே மெல்லக் குனிந்து 'சேசு, மரி சூசை' என்று கூறினார். தந்தை லெவேயும் அதைத் திரும்பக் கூறினார். இயேசு சபைக்குருக்கள், அருட்சகோதரிகள், இயேசுவின் திருஇருதய சபை சகோதரிகள் தந்தை லெவேயைச் சூழ்ந்து கொண்டு கண்ணீரோடு செபித்தனர். மாலை 5.15 மணியளவில் தந்தையின் உயிர் விண்ணகம் சேர்ந்தது.

## எல்லாச் சாலைகளும் சருகணி நோக்கி......

இறந்த அன்று மாலை 7.00 மணி அளவில் அவரது திருஉடல் கோவிலின் நடுவில் அலங்கரிக்கப்பட்டப் பெட்டியில் இறைமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அன்று இரவு முழுவதும் செபங்களும், பிராத்தனைகளும் நடத்தப்பட்டன. பாடல்களும் இசைக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான மக்கள் வரிசையாக நின்று தங்களின் அன்புத் தந்தைக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர். ஜாதி, மத பேதமின்றி தேவாலயத்தில் தேம்பித் தேம்பி அழுதவர் ஏராளம். தந்தையால் உதவிபெற்றவர்கள், உடல்நலம் பெற்றவர்கள், வாழ்வு பெற்வர்கள் எல்லோரும் ஆலயத்தில் அமர்ந்து அந்த சோர்வறியாத் தந்தையின் உடலைப் பார்த்துக் கொண்டேயிருந்தனர்.

அடுத்த நாள் மாலை 4.30 மணிக்கு மதுரைப் பேராயர் மேதகு ஜஸ்டின் திரவியம் ஆண்டகை தலைமையில் குருக்கள் திருப்பலி நிறைவேற்றினர். பிறகு சருகணியைச் சுற்றி அவரது உடல் பவனியாக எடுத்துச் செல்லப்பட்டது. தந்தையின் விருப்பப்படி லூர்தன்னை கெபிக்கு நேராக, குழந்தைத் தெரசாள் பீடத்திற்கு முன்புறம் ஆலயத்திற்கு வெளியே அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. அவர் இறந்த வேளை முதல் மறுநாள் தந்தை லெவேயின் உடலை அடக்கம் செய்யும் வரை கோவில் மணி ஒலித்துக்கொண்டிருந்தது. அடக்கச் சடங்குகள் நிறைவேறியபின் இரவு 7.30 மணிக்கு இயேசு சபை மறை மாநிலத்தலைவர் தலைமையில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது. இன்றும் அவரது கல்லறை மக்களுக்கு நன்மைகள் பல தரும் புனித இடமாகக் கருதப்படுகிறது.

## லெவே தினம்!

தந்தையின் இறப்பு நாள் ஒவ்வொரு ஆண்டும் லெவே தினம் எனக் கொண்டாடப்படுகின்றது. அன்று சிவகெங்கை மறை மாவட்டத்தின் பல்வேறு

பணித்தளங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான குருக்கள், இருபால் துறவியர், பொது நிலையினர் ஆகியோர் தந்தை லெவேயின் ஆசிபெற சருகணியில் உள்ள அவர் நினைவிடம் நோக்கி வந்து அருள் பெற்றுச் செல்கின்றனர். சிவகெங்கை ஆயர் தலைமையில் திருவுருவப்பவனி, அன்னதானம் ஆகியவை சிறப்பு நிகழ்வுகளாக நடைபெறும்.

தந்தை லெவே புனிதராகும்
நாளை நோக்கி எத்தனையோ
இதயங்கள் ஏங்கிக் கிடக்கின்றன

| |
|---|
| தந்தை லெவேயின் அன்றாட செபம்<br>ஓ சேசுவே,<br>அன்பின் அரசே<br>உமது அன்புள்ள<br>இரக்கத்தை நம்புகிறேன் |



## III. பிற்சேர்க்கை

# பாரதப் பாதுகாவலர் தூய பிரான்சிஸ்கு சவேரியாரின் அடிச்சுவட்டில் வாழையடி வாழையாய்த் தமிழகத் திருச்சபையில் தடம்பதித்த எண்ணிலடங்கா இயேசு சபையினரில் ஒருசிலர்....

❇ **தூய பிரான்சிஸ்கு சவேரியார் (1506 - 1552)**
பாரதப் பாதுகாவலர்.

❇ **வணக்கத்திற்குரிய அந்தோணி கிரிமினாலி (1520 - 1549)**
வேதாளையில் வீரமரணம் எய்தியவர்

❇ **ஹென்றி ஹென்றிகுவஸ் (1520 - 1600)**
53 ஆண்டுகள் கடலோரப்பகுதியில் பணிகள், தமிழ் இலக்கணம் மற்றும் அகராதி படைப்பு
'தம்பிரான் வணக்கம்' என்னும் இவருடைய நூல் தான் தமிழில் முதன்முதலில் அச்சிடப்பட்டது.

❇ **இராபர்ட் தெ நொபிலி (1577 - 1656)**
1606ல் மதுரை மிஷனைத் துவக்கியவர்

❇ **பல்தசார் டா கோஸ்டா (1610 - 1673)**
முதல் பண்டார சுவாமிகள், தூய அருளானந்தரை மதுரை மிஷனுக்குப் பணியமர்த்தியவர்

❇ **அந்தோணி தெ பிரென்சா (1625 - 1666)**
தமிழ் அகராதியைத் தொகுத்தவர்

❇ **தூய அருளானந்தர் (1647 - 1693)**
மறவர்களின் முதல் அப்போஸ்தலர்

❖ **வெனான்ஷியஸ் பூஷர் (1666 - 1732)**
தடிய தேவருக்குத் திருமுழுக்குக் கொடுப்பதற்கு முன், அருளானந்தர் இவருடன் ஆலோசனை செய்தார்

❖ **பிரான்சிஸ் லெயினஸ் (1656 - 1715)**
மறவர்களின் இரண்டாம் அப்போஸ்தலர்

❖ **கான்ஸ்டான்ஷியஸ் பெஸ்கி (1680 - 1747)**
வீரமாமுனிவர் என்றழைக்கப்பட்ட இவரின் கல்லறை அம்பலக்கரில் உள்ளது.

❖ **ஜான் பேப்டிஸ்ட் புத்தாரி (1707 - 1757)**
தேவ சகாயம்பிள்ளைக்குத் திருமுழுக்கு அளித்தவர்

❖ **வணக்கத்திற்குரிய அகுஸ்தீன் கப்பாலி (1710 - 1715)**
தமிழகத்தில் 5 ஆண்டுகள் பணி - கழுகேர்கடை வேதபோதகர்

**(1773- இயேசுசபை முடக்கம் 1814 - மீண்டும் உயிர் பெற்றது)**

## புதிய மதுரை மிஷன்

❖ **அலெக்சாண்டர் மார்டீன் (1800 - 1840)**
- 40வது வயதில் இடைக்காட்டூரில் மறைந்தார்.

❖ **ஜோசப் பெட்ராண்ட் (1802 - 1884)**
தூய வளனார் கல்லூரி திருச்சி, நிறுவனர்

❖ **லூயிஸ் கார்னிய (1805 - 1843)**
01.03.1839ல் மதுரையில் தன் காலடி பதித்தார்.
1843ல் தன் 38வது வயதில் மதுரையில் மறைவு

❖ **தூத ரான்க்வே (1806 - 1843)**
37வது வயதில் திருவைகுண்டத்தில் மறைவு

❖ **லூயிஸ் சான்சீர் (1813 - 1887)**
1866ல் லா சலேத்தைக் கட்டி முடித்தார்.
செம்பகனூரில் சானடோரியம் வாங்கினார்.
திண்டுக்கல் தூய வளனார் ஆலயம் கட்டி எழுப்பினார்

❖ **J.B. டிரின்கால் (1816 - 1892)**
புதிய ஏற்பாட்டைத் தமிழில் மொழிபெயர்த்தார்.
இவரின் எலும்புகள் மதுரை தூய மரியன்னை
ஆலயச் சுவரில் பதிக்கப்பட்டுள்ளது.

❖ **ஜேம்ஸ் சந்தியாகு (1848 - 1926)**
தமிழில் பாடல்கள் இயற்றி இசையமைத்தவர்

❖ **அதிரியான் கௌசானல் (1850 - 1930)**
திரு இருதய சபையைத் தோற்றுவித்தவர், பாளையங்கோட்டை
தூய சவேரியார் கல்லூரி நிறுவனர்

❖ **L. பெஸ் (மூத்தவர்) (1853 - 1919)**
வரலாற்று முனைவர்.

❖ **அலோசியுஸ் ஞானப்பிரகாசம் (1869 - 1952)**
இந்தியத் திருச்சபையில் முதல் இந்திய சேசு சபை அதிபர்
பாளையங்கோட்டை.

❖ **பிரான்சிஸ் பெர்ட்ரம் (1870 - 1936)**
சென்னை இலயோலா கல்லூரியைத் தோற்றுவித்தவர்

❖ **மாகே (1873 - 1959)**
மறைப்பணியாளர்.

❖ **A. ஆங்லாட் (1873 - 1953)**
பேராசிரியர், கலைஞர், சிற்பி, சிறந்த தாவரவியலார், புதைபொருள் கலைஞர்

❖ **பிரேலி (1875 - 1967)**
வளனார் கல்லூரி அதிபர்

❖ A. லெபோ (1879 - 1940)

பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியின் முதல் முதல்வர்

❖ கபிரியேல் பிரான்சிஸ் திபிரிசியுஸ் ரோச் (1879 - 1955)

முத்துக்குளித்துறையின் முதல் ஆயர், இலத்தீன் பிரிவின் முதல் இந்திய ஆயர்

❖ சகோ. K.V. பீட்டர் (1886 - 1989)

தபால்துறையில் சீரிய பணி ஆற்றி பத்மஸ்ரீ பட்டம் பெற்றவர்

❖ பேராயர் J.P. லியோனார்டு (1889 - 1985)

மதுரைப் பேராயராகப் பணிகள்

❖ பீட்டர் மொந்தோ (1889 - 1990)

கள்ளர் சீரமைப்பு விடுதி கண்டவர்

❖ T.R. ஆஞ்சிசுவாமி (1891 - 1974)

கோட்டார் முதல் ஆயர்

❖ சகோ. மைக்கேல் பொன்னுசாமி (1892 - 1972)

திருச்சி வளனார் கல்லூரியில் பகுதி நேர விடுதிக் காப்பாளர்

பலரின் தேவ அழைத்தலுக்கு உறுதுணை புரிந்தவர்

❖ சேவியர் மரிய அடைக்கலம் (1896 - 1987)

மதுரை மரியன்னை பேராலயத்தைக் கட்டியவர்

❖ ஜெரோம் டிகுசா (1897 - 1977)

அரசியல் சாசன நிர்ணய சபை உறுப்பினர்

❖ லூயிமூமாஸ் (1900 - 1993)

பாளையங்கோட்டை இறைப்பணியாளர்

❖ ஸ்தனிஸ்லாஸ் பொன்னாடு (1906 - 1992)

பங்குப் பணியாளர்; வரலாற்று பார்வை கொண்டவர்;

மதுரை உயர்மறை மாவட்ட வரலாறு கண்டவர்.

❖ **ஆல்பர்ட் M. நெவட் (1909 - 1993)**

அருளானந்தர் பற்றிய நூல் ஆசிரியர், மதுரை மாநிலக் கல்வி நிறுவனங்களில் தலித் மாணவ மாணவிகளுக்குக் கல்வி உதவித் தொகை நிறுவனர்

❖ **இக்னேஷியஸ் இருதயம் (1910 - 1995)**

சென்னை ஐக்கிய ஆலயத்தைத் தோற்றுவித்தார்.



**தூய சவேரியார்**

**துணைநின்ற நூல்கள்:**


1. ஏழைகளின் பங்காளன்
   அருள்தந்தை லூயிஸ் லெவேல் சே.ச.,
   சகோ.D. கஸ்பார், SHJ. திரு இருதய சபை
   பாளையங்கோட்டை 627 002.

2. லெவே நினைவுகள்
   சகோ.D. கஸ்பார், SHJ. திரு இருதய சபை
   பாளையங்கோட்டை 627 002.

3. மேற்கத்திய சூரியன்
   அருள்திரு Y.S. யாகு. சே.ச.,
   வைகறைப் பதிப்பகம் பெஸ்கி கல்லூரி,
   திண்டுக்கல்.

4. வேர்களே விழுதாகி
   அருள்திரு Y.S. யாகு சே.ச.,
   பேரா SVL மைக்கேல்
   திரு L. அலங்காரராஜ்
   ஜூபிலி வெளியீடு, தூய சவேரியார் கலைமனைகள்
   பாளையங்கோட்டை 627 002.

5. சருகணியின் புனிதம் சுவாமி லெவே
   சகோ.D. கஸ்பார், SHJ. திரு இருதய சபை
   பாளையங்கோட்டை 627 002.

6. சின்ன சவேரியார்
   இ.ச.ம. அமல்ராஜ்
   இரண்டாம் நூற்றாண்டு நினைவு மலர் (1774-1974)
   சின்ன சவேரியாரின் சருகணிக் கல்லறைத் தரவுகள்


7. கிழமைப்புதுமைகள் - 7 தொகுதிகள்
   அருள்திரு ஜேம்ஸ் டிரோசி சே.ச.
   மிஷன் பதிப்பகம், புதுச்சேரி.

8. மதுரை உயர் மறை மாநில வைர விழா மலர் (1938 - 98)

9. "பார்போற்றும் இதய ஆண்டவர் கோயில்
   இடைக்காட்டூர்" - இளங்கவின்



முத்துலட்சுமி பிரஸ், பாளையங்கோட்டை - 2.



சின்ன அருளானந்தர்

(அருட்தந்தை. லூயிஸ் லெவேல், சே.ச)


சின்ன சவேரியார்
(அருட்தந்தை. ஜேம்ஸ் டிரோஸி, சே.ச)
சின்ன அருளானந்தர்
(அருட்தந்தை. லூயிஸ் லெவேல், சே